விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்


Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812
(C-2895)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 02 சனிக்கிழமை (16.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

## தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட
# உரிமையை கேட்பது
# இனவாதமாகாது
## முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்) தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை திருப்பித் தாருங்கள் எனக் கேட்பது இனவாதமாகாது என கூறியிருக்கும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அதனை இனவாதம் எனக் கூறினால் அது சிங்கள அமைச்சர்களின் அறியாமை எனவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)



வரணியில் வாள்வெட்டு
## பெண் உட்பட இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் வரணி எருவன் பகுதியில் குடும்ப தகராறு காரணமாக இடம்பெற்ற வாள்வெட்டில் பெண் ஒருவரும் இளைஞன் 24

## இளைஞர் ஒருவர் நேற்று கைதடியில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலிருந்து வந்த இளைஞர் ஒருவர் நேற்று அவரது வீட்டில் சடலமாக மீட்கப் 23

## தும்பளையில் மோதல் மூவர் படுகாயம்

(கரணவாய்)

'வடமராட்சி தும்பளைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் வாள்வெட்டிற்கும் அடிகாயத்திற்கும் உள்ளான மூவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக 23

24 மில்லியன் ரூபாய் பெறுமதியான
## 200 கிலோ கஞ்சாவுடன் இந்தியர் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

சுமார் 24 மில்லியன் ரூபாய் பெறுமதிக்கும் அதிகமான 200 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் இந்தியர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

வெலிசர பொலிஸ் நிலைய போதைத் தடுப்பு பிரிவினரே நேற்று மாலை சந்தேகநபர்கள் மூவரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 200 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட இந்த கஞ்சா தொடர்பில் விசாரணைகள் முடுக்கிவிட 24

## வழிப்பறியில் ஈடுபட திட்டம் தீட்டிய மூவர் நேற்றுக் கைது

(கரணவாய்)

யாழ்.மாவட்டத்தில் பலபகுதிகளில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த மூவர் வடமராட்சி பகுதியில் வழிப்பறியில் ஈடுபடுவதற்கான திட்டத்தை தீட்டிக் கொண்டு இருந்தபோது நெல்லியடி பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக் 24

## ஜப்பான் முன்னாள் பிரதமர் ஜனாதிபதி மைத்திரி சந்திப்பு



(கொழும்பு)

ஜப்பானிய முன்னாள் பிரதமர் யுக்கியோ ஹடோயாமாவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதியின் உத்தியோக 23

பதின்ம வயது சிறுமியை
## கர்ப்பமாக்கிய இளைஞன் கைது
தென்மராட்சியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பதின்ம வயது சிறுமியை கர்ப்பவதியாக்கிய 30 வயது இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடமியன் பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுமியே எட்டு மாதக் கர் 24

எந்த நேரத்திலும் அரசு கவிழலாம்
## புரட்சி வெடிக்கும் நேரத்தை சொல்வது தவறு - மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவது குறித்து கூட்டு எதிர்க்கட்சி இதுவரை இறுதி தீர்மானங்கள் எதனையும் எடுக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 24



நித்திரையில் கால்வாய்க்குள் தவறி
## விழுந்து கழுத்து முறிவடைந்த பருத்தித்துறை இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

நித்திரை மயக்கத்தில் கால்வாய்க்குள் தவறி விழுந்து கழுத்து முறிவடைந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை 4-ம் குறுக்குத் தெருவை சேர்ந்த இரத்தினசிங்கம் மோகனராஜ் (வயது 25) என்ற இளைஞரே மேற்படி உயிரிழந்தவராவார். 23

## மகிந்தவை பிரதமராக்குவது மைத்திரிக்கு கடினமானதல்ல!
கூட்டு எதிரணியினர் தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பிரதமர் கதிரையில் அமரச் செய்வதே எமது பிரதான நோக்கமாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிய 16 பேர் கொண்ட குழு தெரிவித்துள்ளது.

மகிந்தவைப் பிரதமராக்குவது சாத்தியமில்லாத நடவடிக்கை என பலரும் குறிப்பிடுகின்றனர். நாம் கூறுகின்றோம் அவ்வா 23

வடக்கில் உள்ள இராணுவத்தினை ஆதரித்து
## பிக்குகள் தலைமையில் 300க்கு மேற்பட்டோர் யாழ்.நகருக்கு நேற்று இரவு படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள இராணுவத்தினருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தென்பகுதியில் இருந்து பிக்குகள் தலைமையில் 300க்கும் மேற்பட்டோர் யாழ் நகருக்கு நேற்று இரவு படையெடுத்து வந்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவத்தினர், பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் பாதுகாப்பாக இருந்து வருகின்றனர் என்றும் அவர்களுக்கு நமது ஆதரவினை தெரிவிப்பதற்காகவும் அத்துடன் போரின் போது உயிரிழந்த மற்றும் காயமடைந்த இராணுவ வீரர்களுக்கு பிரார்த்தனை செய்யும் வகையிலும் குறித்த குழுவினர் வருகை தந்துள்ளனர்.

ஹகத்துவே சோலித தேரர் தலைமையில் ஒன்று சேர்ந்த இக்குழுவினர் கடந்த 13 ஆம் திகதி அநுராதபுரத்தில் இருந்து தமது பயணத்தை ஆரம்பித்து மன் 23

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்,
பொதிகள் விநியோக சேவை
அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2391052
077 6655413
(2636)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**மஹஜன சம்பத**
திகதி 2018/06/15
சீட்டிழுப்பு இலக்கம் 3680
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 9 3 1 5 9
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 15/06/2018
சீட்டிழுப்பு இலக்கம் 240
வெற்றி எழுத்து p
சுப்பர் இலக்க 26
வெற்றி இலக்கங்கள் 09 15 58 60
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**
திகதி 2018.06.15
சீட்டிழுப்பு இலக்கம் 1791
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 16 63 69 76
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 10
திகதி 2018-06-15
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 10 64 66 78

# அரசிலிருந்து முற்றாக வெளியேறும் வரை சுதந்திரக்கட்சியுடன் பேச்சுவார்த்தையில்லை

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறுவதற்கு விரைவாக தீர்மானம் எடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கத்திலிருந்து விலகியதன் பின்னரே இரு தரப்பும் பேச்சுவார்த்தை குறித்து கவனம் செலுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து 16 பேர் அரசாங்கத்துடன் உள்ள உறவை முறித்துக் கொண்டு வெளியேறியுள்ளனர். இவர்கள் மகிந்த ராஜபக்ஷவையும் மைத்திரிபால சிறிசேனவையும் இணைத்து வைப்பதற்கு பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர். அவர்களுக்கான பதிலாகவே இதனைக் கூறியுள்ளார். (ம)

# சுகவீனம் என்று மருத்துவமனை சென்ற மாணவி குழந்தை பிரசவிப்பு

(கொழும்பு)

பாடசாலையில் திடீரென சுகவீனமுற்ற 13 வயதான மாணவியொருவர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர் எட்டு மாத கர்ப்பிணி எனத் தெரியவந்துள்ளதாக, தங்காலை பொது மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரன்ன பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் 8ஆம் தரத்தில் கல்வி கற்கும மாணவியே இவ்வாறு சுகவீனமுற்றுள்ளார்.

பாடசாலை ஆசிரியர்கள் மாணவியின் வீட்டாருக்கு அறிவித்ததையடுத்து, அவரது சிறியதாய் பாடசாலைக்கு வருகைதந்து மாணவியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில் மருத்துவர்கள் மாணவியை சோதனை செய்த போது, அவர் 8 மாத கர்ப்பிணி என்பது தெரியவந்துள்ளது.

மாணவியின் அசாதாரண சூழ்நிலையை கருத்திற் கொண்டு மருத்துவர்கள், அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு குழந்தையை காப்பாற்றியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மருத்துவமனை அதிகாரிகள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

மாணவி தற்போது குணமடைந்து வரும் நிலையில், குழந்தை சிகிச்சையின் பொருட்டு அம்பாந்தோட்டை மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மாணவியின் மாமாவான 55 வயதுடைய நபரை கைது செய்துள்ளனர். (ம)

# மன்னார் புனித கப்பலேந்தி மாதா ஆலயம் மீது தாக்குதல்

(மன்னார்)

மன்னார், பெரியகருசல் கிராமத்தில் அமைந்துள்ள புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தின் மீது நேற்று வெள்ளிக்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி பெரியகருசல் பகுதியில் அமைந்துள்ள புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தின் முகப்பில் வைக்கப்பட்டிருந்த மாதா திருச் சொரூபத்தின் கண்ணாடிகள் இனம் தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆலயத்திற்கு நேற்றுமுன்தினம் மாலை சென்ற கிராமத்தவர்கள் திருச்சொரூபம் சேதமாக்கப்பட்டுள்ளதை அவதானித்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக சின்னகருஸல் பங்குத்தந்தை இ.செபமாலை அடிகளாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு பங்குத்தந்தை உள்ளிட்டவர்கள் சென்று அவதானித்த போது வீசப்பட்ட கற்கள் காணப்பட்டதுடன், சிறிய ரீப்பைத் துண்டு ஒன்றையும் சம்பவ இடத்தில் இருந்து மீட்டுள்ளனர்.

மேலும் தற்போது நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் ஆலயத்திற்குச் சொந்தமான காணியின் கம்பிகள் வெட்டப்பட்டுள்ளதையும் அவதானித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

1496 ஆவது சீட்டிழுப்பின் போனஸ் இலக்கம் தவறாக அச்சிடப்பட்டுள்ளது. இது அதன் திருத்தல் பிரதியாகும்.

**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1496 திகதி 2018/06/14
J F G
வெற்றி இலக்கங்கள் 25 27 59 68
போனஸ் இலக்கம் 65
தேசிய லொத்தர் சபை

**விற்பனைக்கு**

சுன்னாகம் AGA Office வீதியில் ஒரு பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. **தொடர்புகளுக்கு:**

**0761619517**

(4444)

**காணி விற்பனைக்கு**


மாலுசந்தியில் 1 பரப்பும் 5 குளியும் கொண்ட வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புக்கு:**

**0773204433**

(4536)

# 2 தலைகள், 8 கால்களுடன் பிறந்த அதிசய கன்றுக்குட்டி



(ஹட்டன்)

ஹட்டன் மஸ்கெலியா மொக்காத்தோட்டத்தில் எட்டுக்கால்களும், இரண்டு தலைகளையும் கொண்ட அதிசய கன்று குட்டியொன்று பிறந்துள்ளது.

மொக்கா மேல் பிரிவு தோட்டத்தை சேர்ந்த சண்முகசுந்தரம் என்பவரினால் வளர்க்கப்பட்ட பசுவே நேற்று மாலை குறித்த கன்றுக் குட்டியினை ஈன்றுள்ளது.

எட்டுக்கால்கள் இரண்டு தலைகள் மற்றும் இரண்டு வால்களுடன் பிறந்த இக்கன்று குட்டி ஒரு சில மணித்தியாலங்களின் பின்னர் உயிரிழந்து விட்டதாக உரிமையாளர் தெரிவித்தார். (ம)

# மக்கள் நலன் காப்பகத்தின் உறுப்பினர்கள் முதல்வருடன் சந்திப்பு

மக்கள் நலன் காப்பகத்தின் உறுப்பினர்கள், தமது அமைப்பின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்று அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

மக்கள் நலன் காப்பகத்தினர் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் செயற்பாடுகளை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆரம்பித்துள்ளனர்.

அந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பாக முதலமைச்சருக்கு தெரியப்படுத்தியதுடன், ஆலோசனையையும் கேட்டறிந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் அருட்தந்தை ஜெயம்ஸ் உட்பட மக்கள் நலன் காப்பக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ம-9)

**நல்வாழ்த்துக்கள்**





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

அவர்கள் விவசாய பிரதியமைச்சராக பதவியேற்றமையையிட்டு பருத்தித்துறை பிரதேசம் 7ஆம் வட்டார மக்கள் சார்பாக எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.
அவர் மேன்மேலும் உயர்வுகள் பெற்று மக்கள் சேவை தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**கிருஷ்ணமூர்த்தி ஜெயானந்தன் (ஜெனா)**
*தலைவர், கிராமிய அபிவிருத்திக்குழு,*
*ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, 7ஆம் வட்டாரம்–பருத்தித்துறை*

(4535)

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 18.05.2018 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
**கந்தப்பு முருகேசு**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.06.2018) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 04.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந் நிகழ்விலும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

*பெரியதோட்டம்,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.*
(சி-2939)
*இங்ஙனம்*
*குடும்பத்தினர்*

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் பழைய மாணவரும், இளைப்பாறிய ஆசிரியருமான

அமரர்
**முத்துக்குமாரு சுகுமார்**

அவர்கள் 13.06.2018 இறைபதம் அடைந்த செய்தியைக்கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**கொக்குவில் இந்துக்கல்லூரி**

# கிழக்கு பறிபோனால் கூட்டமைப்பே பொறுப்பு

## வியாழேந்திரன் எம்.பி. தெரிவிப்பு



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண சபையினை தமிழர்கள் அல்லாதவர்கள் கைப்பற்றினால் அதற்கான முழுப்பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன் வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிவடைகின்றது. இதனால் வடக்கு மாகாணசபைக்கு அடுத்த முதலமைச்சர் யார் என்று தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் பேசப்படுகின்றது.

ஆனால் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது. எனினும், கிழக்கின் அடுத்த முதலமைச்சர் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை எந்த தீர்மானத்தினையும் எடுக்கவில்லை.

மேலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள சிலர் உண்மைகளை பேசுவதே குறைவு. சிலருக்கு பேசுவதற்கு அச்சம். நான் அதை பற்றி சிந்திக்கவில்லை. வடக்கு மாகாணத்தில் யார் எதனைச் செய்தாலும் அங்கு தமிழர்கள்தான் நிலை நிறுத்தப்படுவார்கள்.

ஆனால் கிழக்கு மாகாணத்தின் நிலைமைகள் அவ்வாறில்லை. இங்கு மிகவும் கவனமாகவும் விழிப்பாகவும் செயற்படவேண்டிய நிலையுள்ளது. இல்லையென்றால் கிழக்கு மாகாணத்தினை தமிழர்கள் ஆளுகின்ற அதிகாரத்தினை இழக்கின்றநிலைமை ஏற்படும்.

இதனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருக்கின்ற அங்கத்துவ தலைமைத்துவங்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவமும் உடனடியாக கூடி, கிழக்கு மாகாணத்திற்குரிய அடுத்த முதலமைச்சர் வேட்பாளர், கிழக்கு மாகாண சபை வேட்பாளர்கள் யார் என்பதை அறிவிக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி போன்ற தேசிய கட்சிகளும் மட்டக்களப்பு-அம்பாறை பகுதிகளுக்கு சென்று தற்போதே மாகாண சபை தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றன. இதனை உணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஞானசார தேரருக்கு கடூழியச் சிறை சர்வதேச மன்னிப்புச் சபை வரவேற்பு



(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியாவை அச்சுறுத்திய குற்றத்திற்காக பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் தேரருக்கு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை இலங்கையின் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு கிடைத்த வெற்றி என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமையைப் பாதுகாப்பதற்காக போராடும் அனைவருக்கும் கிடைத்த முக்கியமான வெற்றியிதுவென சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி இயக்குநர் ஓமர்வரைச் தெரிவித்துள்ளார்.

நீதிகோருபவர்களை மிரட்டி அச்சுறுத்தி மௌமாக்க நினைப்பவர்களுக்கு இந்தத் தீர்ப்பு மூலம் தெளிவான செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### சிறப்புச் சலுகைகள் இல்லை

# வெலிக்கடை சிறையில் ஞானசாரதேரர் அடைப்பு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஒருவருட கடூழிய சிறைத் தண்டனையை விதித்து ஹோமாகம நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை, ஹோமாகம நீதவான் நீதிமன்றில் வைத்து அச்சுறுத்தியமை தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை குற்றவாளியெனஹோமாகம நீதவான் நீதிமன்றம் கடந்த 24 ஆம் திகதி அறிவித்தது.

இந் நிலையில் ஹோமாகம நீதவான் உதேஷ் ரணதுங்க அவருக்கு எதிரான தண்டனையை நேற்று முன்தினம் அறிவிக்கவுள்ளதாக முன்பே அறிவித்திருந்தார். இதன்படியே நேற்று இவருக்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஏனைய கைதிகளுக்கான சட்ட விதி முறைகளே, கலகொட அத்தே ஞானசார தேரருக்கும் பின்பற்றப்படும் என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் மாலை சிறை வைக்கப்பட்டார்.

இந்த நிலையில், ஏனைய கைதிகளுக்கான ஆடையையே அவருக்கும் அணிய நேரிடும் என்றும், விசேட பாதுகாப்பு அவசியமாயின் அதனை வழங்க முடியும் என்றும் சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

# காணாமல் போனோரின் உறவினர்களை அலைக்கழிக்காமல் நஷ்டஈட்டையாவது வழங்குங்கள்

## நிதியமைச்சர் மங்களவிடம் அமைச்சர் மனோ கோரிக்கை



(கொழும்பு)

யுத்தம் முடிந்து ஏறக்குறைய பத்து வருடங்கள் கடந்து விட்டன. இன்னமும் இந்த காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளை மீண்டும் மீண்டும் நடத்தி ஏற்கனவே விரக்தியின் எல்லைக்கு போய்விட்ட மக்களை அழவிடுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. இந்த காணாமல் போனோர் கணக்கெடுப்புகள் எத்தனை முறை நடந்துவிட்டன? இன்று மீண்டும் நடைபெறும் கணக்கெடுப்புடன் அதற்கு சமாந்திரமாக, குடும்ப தலைவர்களை இழந்த பல்லாயிரம் கைம்பெண்களுக்கும் நிர்க்கதியாகிவிட்ட குழந்தைகளுக்கும் முதியோருக்கும் கணிசமான நஷ்டஈட்டு தொகைகள் வழங்கப்பட வேண்டும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அமைச்சர் மனோ மேலும் தெரிவித்துள்ளதாவது,

காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளை வெளிப்படையாகத் தொடர வேண்டும். அது கட்டாயம் தேவை. ஆனால், இந்த விசாரணை கணக்கெடுப்பு ஆகியவற்றுடன் சமாந்திரமாக குடும்ப தலைவர்களை இழந்த பல்லாயிரம் கைம்பெண்களுக்கும் நிர்க்கதியாகிவிட்ட குழந்தைகளுக்கும் முதியோருக்கும் கணிசமான நஷ்டஈட்டுத் தொகைகளை வழங்க வேண்டும். துன்பத்தின் கருவறைக்கே சென்றுவிட்ட இந்த குடும்ப உறவுகளை மீண்டும், மீண்டும் அழைத்து அழவிடுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. இந்தக் குடும்ப உறவுகளில் மிகப்பெரும்பாலோர் வாழ்வாதாரங்களை இழந்து, நிர்க்கதி நிலையில் இருக்கிறார்கள். அவர்களது பிள்ளைகளுடன் இன்று பெருந்தொகை குடும்பங்களை தலைமை தாங்குகிறார்கள். இந்நாட்டில் வடகிழக்கில் இத்தகைய கைம்பெண்கள் சுமார் 70,000 பேருக்கு மேல் இருப்பது வரலாற்றுக் கொடுமை. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக எந்த அளவு சவால் மிக்க வாழ்நிலைமைகளை சந்திக்கிறார்கள் என்பதை அரசாங்கம் கணக்கில் எடுக்க வேண்டும். அதேபோல் பிள்ளைகளை இழந்த வயதான பெற்றோர் இன்று பெரும் துன்பங்களை எதிர்கொள் கிறார்கள். அவர்களையும் கணக்கில் எடுக்க வேண்டும்.

சர்வதேச சமூகம் இந்த மக்களுக்கு உதவ காத்திருக்கின்றது. அதற்கு நாம் வழிவிட வேண்டும். இனியும் தாமதிக்க வேண்டாம். எவ்வளவு நஷ்டஈடு வழங்கப்பட்டாலும், அது காணாமல் போன உறவுகளை மீண்டும் கொண்டு வராது. அது அடிப்படை உண்மை. ஆனால், அது இந்த நிர்க்கதியாகிவிட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கொஞ்சமாவது தூக்கி நிறுத்தும் என நான் நம்புகிறேன் என அவர் மேலும் தெரித்தார். (இ-7)

# தகாத வார்த்தைகளால் நீதவானை பேசிய திருடன்

(கொழும்பு)

கோயில் உண்டியலை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர் ஒருவர் நீதவானை தகாத வார்த்தைகளால் பேசிய சம்பவம் இடம்பெற்றது.

சிலாபம் நீதவான் நீதிமன்றத்திலேயே இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு குறித்த சந்தேகநபர் இடையூறு ஏற்படுத்தியது மாத்திரமல்லாது, நீதிமன்றத்தையும் சந்தேகநபர் கடுமையாக அவதூறு செய்ததைத் தொடர்ந்து, அவர் நீதிமன்றத்துக்கு வெளியே அழைத்து வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், குறித்த சந்தேக நபரை சிறைச்சாலையில் அடைக்க உத்தரவிடப்பட்டுள்ளதோடு, வழக்கு விசாரணையும் வேறொரு திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. (இ-7)

# பாதாள உலகக்குழுக்களை அரசே இறக்குமதி செய்தது

## மகிந்த அணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் இன்று மீண்டும் பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. கடந்த ஆட்சியில் ஒழிக்கப்பட்ட பாதாள உலகக் குழுக்களை நல்லாட்சி அரசாங்கமே மீண்டும் நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ளது. எனவே அக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு அரசாங்கமே பொறுப்பு என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொறளைஎன்எம் பெரேரா நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நாட்டுக்குத் தேவையான 85 வீதமான மருந்துகள் உள்நாட்டிலேயே தயாரிப்பு

## அமைச்சர் ராஜித நம்பிக்கை



(கொழும்பு)

நாட்டுக்குத் தேவையான 85 வீதமான மருந்துகளை அடுத்த ஆண்டு இறுதிக்குள் இந்த நாட்டுக்குள்ளேயே உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இரத்ததானத்தின் போது இரத்த பிளாஸ்மா நீக்கப்படுவதாகவும்ஆண்டொன்றுக்கு ஆயிரக்கணக்கான பிளாஸ்மா பரல்கள் வீசப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வீசப்படுகின்ற பிளாஸ்மாக்கள் மூலம் மருந்து உற்பத்தி செய்ய முடியும் என்றும், அதன்படி இந்த நாட்டில் வீசப்படுகின்ற இரத்த பிளாஸ்மாக்கள் 2015ஆம் ஆண்டு முதல் இந்தியாவுக்கு அனுப்பப்படுவதாகவும், அதன்மூலம் அந்நிய செலாவணி ஈட்டப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த வருட இறுதிக்குள் நாட்டுக்குத் தேவையான 85 வீதமான மருந்துகளை இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்து முடிப்பதற்கு 48 நிறுவனங்களுடன் தற்போது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். (இ-7)

# உருக வைத்த உருகுவே

எகிப்து அணிக்கு எதிரான உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில், கடைசி நிமிடத்தில் ஜோஸ் ஜிமினஸ் கோலடித்து கைகொடுக்க, உருகுவே அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

நேற்று, எகடரின்பேர்க் நகரில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் உலகின் 'நம்பர் 14' உருகுவே அணி, 45வது இடத்தில் உள்ள எகிப்தை எதிர்கொண்டது.

ஆரம்பத்தில் இருந்து இரு அணியினரும் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் உருகுவேயின் லூயிஸ் சாரஸ், பந்தை கோல் போஸ்ட்டுக்கு இடதுபுறமாக வெளியே அனுப்பி, கோலடிக்கும் வாய்ப்பை வீணடித்தார். எகிப்து அணியின் கோலடிக்கும் வாய்ப்பை உருகுவே கோல் காப்பாளர் பெர்ணான்டோ மஸ்லேரா சாமர்த்தியமாக தடுத்தார். முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சம நிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியில் 47ஆவது நிமிடத்தில் கவானி 'பாஸ்' செய்த பந்தை பெற்ற உருகுவேயின் சாரஸ், கோலடிக்க முயற்சித்தார். ஆனால் எகிப்து கோல்காப்பாளர் எல்-ஷெனாவி அருமையாக தடுத்தார். இதேபோல 73, 83 ஆவது நிமிடத்திலும் எகிப்து கோல்காப்பாளர் எல்-ஷெனாவி, 'டைவ்' அடித்து பந்தை தடுக்க உருகுவேயின் கோல் வாய்ப்பு வீணானது. ஆட்டத்தின் 88ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பில் கவானி தூக்கி அடித்த பந்து கோல் போஸ்டில் பட்டுத் திரும்பியது. பின், 90ஆவது நிமிடத்தில் கிடைத்த 'கோர்னர்' வாய்ப்பில் கார்லஸ் சான்செஸ் அடித்த பந்தை ஜோஸ் ஜிமினஸ் தலையால் முட்டி கோல் அடித்து, உருகுவே ரசிகர்களை உருக வைத்தார். இதற்கு எகிப்து அணியினரால் பதிலடி தர முடியவில்லை.

நேர முடிவில் உருகுவே அணி, 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



வெற்றிக் கோலடித்த ஜிமினஸ்

# மீண்டும் மெஸி 'மஜிக்'

## ஆர்ஜென்ரீனா எதிர்பார்ப்பு

உலக கிண்ண கால்பந்து தொடரின் லீக் போட்டியில் இன்று பலம் வாய்ந்த ஆர்ஜென்ரீனா அணி, ஐஸ்லாந்துடன் மோதுகிறது. இதில், மெஸ்சியின் 'மேஜிக்' கால் கொடுத்தால் ஆர்ஜென்ரீனா அபார வெற்றி பெறலாம்.

ரஷ்யாவில் 21வது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. இன்று மொஸ்கோவில் நடக்கும் 'டி' பிரிவு லீக் போட்டியில் ஆர்ஜென்ரீனா, ஐஸ்லாந்து அணிகள் மோதுகின்றன.

உலக கிண்ண கால்பந்து தொடரின் ஈர்ப்பு சக்தியாக மெஸ்சி திகழ்கிறார். இவரின் 'மஜிக்' ஆட்டத்திற்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் மயங்கிக்கிடக்கின்றனர். பார்சிலோனா அணிக்காக பல கிண்ணத்தை குவித்தபோதும், தேசத்திற்காக இயலவில்லையே என விமரசனம் வைக்கப்படுகிறது. இதற்கு, கடந்த முறை (2014, பிரேசில்) பதிலடி தர முயற்சித்தபோதும், இறுதியில் நூலிழையில் ஜேர்மனியிடம் பட்டத்தை பறிகொடுத்தார்.

**கவனம் தேவை**

கடந்த 2016ல் கோபா அமெரிக்கா இறுதியில் சிலியிடம் ஆர்ஜென்ரீனா வீழ்ந்தது. இத்துடன், சர்வதேச அரங்கிலிருந்து விடை பெறுவதாக அறிவித்த மெஸ்சி, பின் மீண்டும் முடிவை திரும்பப் பெற்றார். இப்படிப்பட்ட ஏமாற்றத்திற்கு, 4ஆவது முறையாக உலக கிண்ண தொடரில் பங்கேற்கும் இவர் மாற்றம் தருவார் என ஆர்ஜென்ரீனா ரசிகர்கள் நம்பிக்கையுடன் உள்ளனர். கேப்ரியல், ஏஞ்சல் டி மரியா உள்ளிட்டோர் கவனம் ஈர்க்கின்றனர். ஆனால், தகுதிச்சுற்றில் கடைசி கட்ட வெற்றியின் மூலம் தான் ரஷ்யாவுக்குள் நுழைநதுள்ளதை மறுக்க முடியாது. தரவரிசையில் 5வது இடத்தில் இருந்தாலும், ஒவ்வொரு போட்டியிலும் சுதாகரிப்புடன் இருப்பது கட்டாயம்.

**கத்துக்குட்டி ஐஸ்லாந்து**

ஐஸ்லாந்து அணி தற்போதுதான் முதல் முறையாக உலக கிண்ணத் தொடரில் பங்கேற்க உள்ளது. தற்போது, விளையாடும் 32 அணிகளில் மக்கள் தொகை அடிப்படையில் சிறிய அணி இது தான். இங்கு மொத்தமே 3.35 லட்சம் மக்கள்தான் வசிக்கின்றனர். ஆனால், உலக கிண்ண தகுதிச்சுற்றில் குரோஷியா, துருக்கியை வீழ்த்தி இருந்தது. இந்த அதிர்ச்சி இம்முறையும் தொடர வாய்ப்புள்ளது.

# ஈரான் 'திரில்' வெற்றி



உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில், 'ஸ்டாப் பேஜ்' நேரத்தில் மொராக்கோவின் ஆஜீஸ் 'சேம்சைடு' கோலடிக்க, ஈரான் அணி 1-0 என்ற கணக்கில் 'திரில்' வெற்றி பெற்றது.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. நேற்று, செயின்ட் பீட்டர்ஸ் பேர்க் நகரில் நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் உலகின் 'நம்பர்37' ஈரான் அணி, 41 வது இடத்தில் உள்ள மொராக்கோ அணியை சந்தித்தது.

ஆட்டத்தின் 8வது நிமிடத்தில் மொராக்கோவின் அயூப எல் காபி, பந்தை கோல் போஸ்ட்டிற்கு இடது புறமாக அனுப்பி, கோலடிக் கத் தவறினார். பின், 18வது நிமிடத்தில் மொராக்கோ அணிக்கு 'பிரீ கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில கோலடிக்க கிடைத்த நல்ல வாய்ப்பை நழுவவிட்டனர். ஆட்டத்தின் 45வது நிமிடத்தில் ஈரான் அணிக்கு கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பில் ஹஜி சபி, பந்தை கோல்போஸ்ட்டுக்கு மேலே தூக்கி அடித்தார். இரு அணிகளின் தற்காப்பு பலமாக இருந்ததால், கோலடிக்க முடியாமல் திணறினர். இதனையடுத்து முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சம நிலையில் முடிந்தது.

இரண்டாவது பாதியிலும் இரு அணியினரும் கோலடிக்க முடியாமல் தவிததனர். இந்நிலையில் 'ஸ்டாப பேஜ்' நேரத்தில் (90+5வது நிமிடம்) ஈரான் அணிக்கு 'பிரீ கிக்' வாய்ப்பு கிடைத்தது. ஈரானின் ஹஜி சபி தூக்கி அடித்த பந்தை 'கோல போஸ்ட்' அருகில் இருந்த மொராக்கோவின் ஆஜீஸ், தலையால் முட்டி வெளியே அனுப்ப முயற்சித்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பந்து கோல் வலைக்குள் செல்ல, 'சேம் சைட்' கோலானது. ஆட்டநேர முடிவில் ஈரான் அணி, 1-0 என்ற கணக்கில் 'திரில்' வெற்றி பெற்றது.

# இந்திய அணி இமாலய வெற்றி

## ஆப்கான் இரண்டு நாட்களில் சரண்




டெஸ்ட் அரங்கில் இரண்டு நாளில் வெற்றி பெற்ற முதல் ஆசிய அணி என வரலாறு படைத்தது இந்தியா.

ஒரே நாளில் இரண்டு இன்னிங்சிலும் 109, 103 ஓட்டங்களுக்கு சுருண்டது ஆப்கானிஸ்தான். இந்திய அணி இன்னிங்ஸ், 262 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்தியா, ஆப்கான் அணிகள் மோதிய டெஸ்ட் பெங்களூருவில் நடந்தது.

டெஸ்ட் அந்தஸ்து பெற்றபின் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கிய முதல் போட்டி இது. முதல் நாள் முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்கு 347 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று, இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. அஷ்வின 18 ஓட், ஆட்டமிழந்தார். ஜடேஜா 20 ஓட்டங்கள் எடுத்தார். பாண்ட்யா 71 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

கடைசி நேரத்தில் வவாதர் ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 21 ஓட்டங்கள் விளாசினார் உமேஷ் யாதவ். இஷாந்த் (8) ஆட்டமிழக்க இந்திய அணி முதல் இன்னிங்சில் 474 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது,

**அஷ்வின் அபாரம்**

ஆப்கானிஸ்தான் அணிக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. தரவரிசையில் 'நம்பர் 1' இடத்திலுள்ள இந்திய பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாமல் வரிசையாக சரண் அடைந்தனர். பாண்ட்யாவின் துல்லிய 'த்ரோ' காரணமாக ஷாஜத் (14) ரன் அவுட்டானார்.

ஜாவேத் அகமட் (1), அப்சர் (6), இஷாந்த் 'வேகத்தில்' சரிந்தனர். 'சுழல்' மன்னன் அஷ்வினின் முதல் ஓவரின் 3ஆவது பந்தில் அணித் தலைவர் ஸ்டானிக் ஜாய் (11) போல்டானார். ஷாகிதி (11), முகமது நபி (24), யாமின் (0) என மூவரும் அஷ்வினிடம் வீழ்ந்தனர். ஜடேஜா தன் பங்கிற்கு முதலில் ரஷிட் கானை (7) வெளியேற்றினார். தொடர்ந்து மிரட்டிய இவர முஜீப்பையும் (15) ஆட்டமிழக்க ஆப்கானிஸ்தான், முதல் இன்னிங்சில் 109 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்தியா சார்பில் அஷ்வின் 4, ஜடேஜா 2, இஷாந்த் சர்மா 2 விக்கெட் சாய்த்தனர்.

**'பொலோ ஒன்' சோகம்**

இந்திய அணியை விட 365 ஓட்டங்கள் குறைவாக எடுத்த ஆப்கானிஸ்தானை, தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ் விளையாடுமாறு 'பாலோ ஒன்' கொடுத்தார் ரகானே. இந்த சோகத்தில் களமிறங்கிய இந்த அணிக்கு மறுபடியும் அடி மேல் அடி கிடைத்தது.

உமேஷ் 'வேகத்தில்' முதலில் ஷாஜத் (13) வீழ்ந்தார். இவரது அடுத்த ஓவரில் ஜாவேத் (3), முகமது நபி (0) ஆட்டமிழந்தனர். ரஹ்மத் ஷாவை (4) இஷாந்த் திருப்பி அனுப்பினார். சுழலில் ஜொலித்த ஜடேஜா, தன் பங்கிற்கு ஸ்டானிக்ஜாய் (25), அப்சர் (1), ரஷிட் கான்(12), முஜீப் (3) என நான்கு பேரை வெளியேற்றினார்.

கடைசியில் வவாதர் (0) அஷ்வினிடம் போல்டாக, ஆப்கானிஸ்தான் இரண்டாவது இன்னிங்சில் 103 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதையடுத்து டெஸ்ட் வரலாற்றில் முதன் முறையாக 2 நாளில் வெற்றி பெற்று வரலாறு படைத்தது இந்திய அணி (இன்னிங்ஸ், 262 ஓட்.,). ஜடேஜா 4, உமேஷ் 3, இஷாந்த் 2 விக்கெட் சாய்த்தனர்.

# புலியா... பூனையா

## கலக்கும் கணிப்புக்கள்

உலக கிண்ண கால்பந்து தொடரில் வெற்றி பெறும் அணியை கணிப்பதில் புலி, பூனை இடையே பலத்த போட்டி காணப்படுகிறது. முதல் போட்டியில் ரஷ்யா தான் வெல்லும் என சரியாக கணித்து அசத்தியது பூனை.


கடந்த 2010 தென்னாபிரிக்க உலக கோப்பை தொடரில் 'போல்' என்ற ஒக்டோபஸ், 8 போட்டிகளின் முடிவை முன்னதாகவே கூறியது. கடைசியில் ஸ்பெயின் அணிதான் கிண்ணம் வெலலும் என துல்லியமாக கணித்தது. துரதிர்ஷ்டவசமாக இரண்டரை வயதில் இறந்து விட்டது. கடந்த 2014ல் 'மிஸடிக் மார்கஸ்' என்ற பன்றி ஜேர்மனி கிண்ணம் வெல்லும் என கணித்தது நடந்தது.


இம்முறை ரஷ்ய தொடரில் பல விலங்குகள் வந்து விட்டன. இதற்கு பிடித்த உணவை வைத்து, அருகில சம்பந்தப்பட்ட அணிகளின் கொடிகளை வைப்பர். எந்த பக்கம் உள்ள உணவை தெரிவு செய்கிறதோ, அந்த அணி வெற்றி பெறும் என நம்புவர்.


இதன் படி செயின்ட் பீட்டர்ஸ்பேர்க்கில் (ரஷ்யா) 'அக்கிலஸ்' என்ற பூனை வெற்றியாளரை கணிக்கிறது. கடந்த ஆண்டு நடந்த கொன்பெடரேஷன் கால்பந்து தொடரில் இதன் முடிவு சரியாக இருக்க, இம்முறை எதிர்பார்ப்பு எகிறியது. இதற்கேற்ப சவுதி அரேபிய அணிக்கு எதிராக ரஷ்யா வெல்லும் என கணித்தது, சரியாக நடந்தது ரஷ்ய ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

**யானை எப்படி**

'நெல்லி' என்ற யானை 2011, பெண்கள் உலககிண்ண தொடரின் வெற்றியாளரை கணித்தது. நாளை நடக்கும் போட்டியில் ஜேர்மனி, மெக்சிகோவை வீழ்த்தும் என முடிவு செய்துள்ளது. அதேபோல, மீண்டும் வந்துள்ள 'மிஸ்டிக் மார்கஸ்' பன்றி, இத்தொடரின் அரையிறுதியில் மோதும் அணிகளை தேர்வு செய்தது. அதாவது 32 அணிகளின் கொடிகளுடன் அப்பிள்கள் சுற்றி வைக்கப்பட்டன. இதை முகர்ந்து பார்த்த மார்கஸ் வரும் ஜூலை 10, 11ல் நடக்கும் அரையிறுதியில் ஆர்ஜென்டினா, உருகுவே, நைஜீரியா, பெல்ஜியம் மோதும் என கணித்துள்ளது.

# ரமழான் பரிசே ஞானசாரரின் சிறை

## சிங்கள ராவய சீற்றம்

(கொழும்பு)

ரமழான் பண்டிகையின் பரிசாக சிங்கள இனத்துக்காக போராடிய பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு அரசாங்கம் சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது என சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல் கண்ட சுதத தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பினர் நேற்று ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியை அச்சுறுத்தினார் என ஆதாரமற்ற முறையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஞானசார தேரருக்கு கடுமிய சிறைத்தண்டனை விதித்து, பௌத்த பிக்குகளின் மத உரிமைகளை பறித்துள்ளனர்.

சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகவே காணப்பட வேண்டும். ஆனால் தற்போது சட்டம் மாறுபட்ட நிலையிலே காணப்படுகின்றது. பிணைமுறி குற்றவாளிகள் யார் என்று நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆனால் சட்டம் அவர்களுக்கு எதிராக இதுவரை காலமும் எவ்வித உரிய தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை.

நீதிமன்றத்திற்கு கல்லெறிந்து நாட்டின் நீதித்துறையினை அவமதித்த அமைச்சர் றிசாத் பதியுதீன் உள்ளிட்ட அவரது சகாக்கள் இன்று அரசாங்கத்தின் முக்கிய பதவிகளில் உள்ளனர்.

நீதிமன்றத்தினை அவமதித்தவர்களுக்கு தண்டனை வழங்காமல் மன்னிப்பு வழங்கிய அரசாங்கம் மத உரிமை தொடர்பில் பேசிய ஞானசார தேரருக்கு கடுமையான தண்டனை வழங்கியுள்ளமை நியாயமற்றதாகவே காணப்படுகின்றது.

ஆகவே முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிர்வரும் காலங்களில் அரசாங்கம் தக்க பதிலடியினை அனுபவிக்க நேரிடும் என அவர் மேலும் எச்சரித்தார். (இ-7)



# 'இலங்கைத் தமிழரின் தோற்றமும் மறைந்த வரலாறும்' யாழில் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

"இலங்கைத் தமிழரின் தோற்றமும், மறைந்த வரலாறும்" என்ற தலைப்பிலமைந்த சிறப்புக் கருத்துரை நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். வரலாற்றுத் துறை வாழ்நாள் பேராசிரியரும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தகைசார் வேந்தருமாகிய பேராசிரியர் எஸ். பத்மநாதன் இந்தச் சிறப்புக் கருத்துரையை வழங்கவுள்ளார்.

யாழ்ப்பாண சமூகத்தினரிடையே நிலவுகின்ற பழந்தமிழர் வரலாறு தொடர்பான தெளிவின்மைகளுக்கு விடை பகரும் வகையிலும், பழைய கண்ணோட்டங்களை மாற்றும் வகையில் பயனுறுதிமிக்கதாக இந்தக் கருத்துரை அமையும் என்றும், ஆர்வலர்களைக் கலந்து பயன்பெறுமாறும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-9)

# அரியாலை சனசமூக நிலைய இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி நடத்தப்படும் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அரியாலை சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் கலைநிகழ்வுகளும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இசைக்கச்சேரியும் இடம்பெறும். (இ)

# 'சின்ன சின்ன தூறல்கள்' கவிதைத் தொகுதி அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

ஜெயந்தி வெளியீட்டக ஏற்பாட்டில் கவிஞர் வேலணையூர் நடாசிவராசாவின் "சின்ன சின்ன தூறல்கள்" கவிதைத்தொகுதி அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் தில்லையம்பலம் செல்லமுத்து அமுதசுரபி மண்டபத்தில் நொதேன் சென்ரர் எஸ். வைத்தியசாலை இயக்குநர் எஸ். பிரேமி தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் பொ. நடராசா, சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி.முத்துலிங்கம், ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் பொ.சிவசுந்தரம், கௌரவ விருந்தினர்களாக வேலணை பிரதேச சபை தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி, பிரதேச சபை உறுப்பினர் தி. ஹேமதாஸ், டாக்டர் க.ஜெயசந்திரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

இதில் நூல்ஆய்வுரையை வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வழங்குவார் (இ)

# கரந்தெனிய பிரதேச சபை உப தவிசாளர் கொலையின் பிரதான சந்தேகநபர் கைது

(கொழும்பு)

அண்மையில் கரந்தெனிய பிரதேச சபையின் உப தவிசாளர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர், மீட்டியாகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெரகொட பிரதேசத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரபல பாதாள உலக குழுத் தலைவரான கொஸ்கொட சுஜீவவுக்கு நெருக்கமான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

கரந்தெனிய பிரதேச சபையின் உப தவிசாளர் டொனால்ட் சம்பத் கடந்த 09ஆம் திகதி சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அதேதினம் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய புத்தாண்டு விழா, நிலையக் கட்டடத் திறப்புவிழா என்பன அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.இந்தியத்துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி, வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# இராசி பலன்

**16.06.2018**

ஆனி 2, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

திருதியை முன்னிரவு 07.15 மணிவரை

புனர்பூசம் பிற்பகல் 12.55 மணிவரை

சுபநேரம் 2.53-4.23 மணிவரை

இராகுகாலம் 8.53-10.23 மணிவரை

வளவன்

கிரகநிலை: சூரி, சந், புத — சுக், ராகு — கேது, செவ் — சனி — குரு

சந்திராஷ்டமம்: மூலம், பூராடம் காலை 7.18 மணிக்கு கடக-சந்

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்:** பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்:** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, வழிபாடு குதூகலம் தரும்.

**மிதுனம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நட்பு வட்டம் விரிவடையும்.

**சிம்மம்:** தேவையற்ற சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றங்கள் உருவாகலாம், சயன சுகக் குறைவுண்டு.


**தனுசு:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, முத்தான வாய்ப்புக்கள் தேடிவரலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கன்னி:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சௌபாக்கியமான நாள்.

# ஆளுநருடன் இந்துமதப் பிரதிநிதிகள் சந்திப்பு



இந்து கலாசார பிரதியமைச்சராக இந்து மதம் சாராத ஒருவர் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பை வெளியிட்டு நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன். இந்து மாமன்றத்தின் செயலாளர், வடமாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரன்,யாழ்வணிகர் கழகத் தலைவர் இ.ஜனக்குமாரன் உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று முன்தினம் மாலை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயுடன் சந்தித்து கலந்துரையாடினர். (இ-60)

# பிரேரணை நிறைவேற்றம்

(கரணவாய்)

இந்துகலாசார அமைச்சராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டதற்கு பருத்தித்துறை பிரதேசசபைக் கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவித்து பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டம் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழை நடைபெற்றது.

இதன்போது வல்லிபுரம் வட்டார உறுப்பினராக ஞானலிங்கம் தர்சனால் இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டு சபை அனுமதியுடன் நிறைவேற்றப்பட்டது. (இ-60)

# பாலியல் குற்றச்செயல்களில் ஈடுபடும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாது சேவையிலிருந்து நிறுத்த வேண்டும்

## தேசிய சிறுவர் பாதுகாப்புச்சபை

(யாழ்ப்பாணம்)

பாலியல் குற்றச்செயலில் ஈடுபடும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாமல் அவர்களை சேவையில் இருந்து இடை நிறுத்த வேண்டும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர் கு.கௌதமன் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களால் மாணவிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகுவதாக தொடர்ச்சியான முறையில் முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன.

இச் செயற்பாடுகள் அண்மைக்காலங்களில் யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வருகிறது. இது கலாசார சீரழிவாக இருப்பதுடன் ஆசிரியர் எனும் புனிதமான தொழிலுக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது. மாணவர்களை தமது பிள்ளைகள் போல் நடத்த வேண்டிய ஆசான்கள் இவ்வாறான கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்க விடயம்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். அத்துடன் பெற்றோர் தமது பிள்ளைகள் மேல் மிகமிக அவதானமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் தமக்கு நடக்கும் சித்திரவதைகளை வெளியே சொல்வதற்கு தயங்குகிறார்கள். இதனால் குற்றவாளிகள் இலகுவாக தப்பித்துக்கொள்வதுடன் தொடர்ச்சியாக குற்றச் செயல்களை செய்து வருகின்றனர்.

சிலபாடசாலைகள்,சிலதனியார் நிறுவனங்களில் ஆசிரியர்கள் மாணவிகளுடன்தவறான நோக்குடன் பழகினால் அது தெரிய வந்தால் அதிபரோ அல்லது குறித்த நிறுவனத் தலைமை ஆசிரியரோ உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக அவசியம். ஆனால் பல பாடசாலைகளில் இவ்வாறான குற்றச்செயல்களை மூடி மறைக்கிறார்கள். இது ஆபத்தான விடயம் மட்டு மல்லாமல் சிறார்களின் கல்விக்கும் பின்னடைவும் ஏற் படுகின்றது.

மேலும் சில பாடசாலைகளில் தீய பழக்கவழக்கங்களையே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பழக்கி விடுவதாக தற்போது குற்றச்சாட்டுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளின் போது மாணவர்களை மது அருந்துவதற்கு சில ஆசிரியர்கள் கட்டாயப்படுத்துவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பில் பாடசாலை அதிபர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

மேலும் மாணவ,மாணவிகள் மீது பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடும் ஆசிரியர் கைது செய்யப்பட்டால்அவர்சட்டத்தை பயன்படுத்தி விரைவாக வெளியே வந்து விடுவார். அத்துடன் வேறு பாடசாலைக்கு அவருக்கு இடமாற்றமும் வழங்கப்படுகிறது. இவ்வாறான நிலை தொடர்ந்தால் குற்றச்செயல்கள் குறைவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அவர் எங்கு சென்றாலும் இந்தக் குற்றத்தை புரிவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டால் உடனடியாக சேவையில் இருந்து இடை நிறுத்தம் செய்ய வேண்டும். அப்போது தான் குற்றங்களை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.

பெற்றோர்கள்,மாணவர்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். தமக்கு நடக்கும் அநீதிகளை ,துன்புறுத்தல்களை மூடிமறைக்காது குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# "இயலாமையுள்ள மக்கள் தொடர்பான கொள்கை ஆவணம் கையளிப்பு"

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான அமைப்புக்களின் ஒன்றியத்தின் NPCODA ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட "இயலாமையுள்ள மக்கள் தொடர்பான கொள்கை ஆவணம்" கடந்த வாரம் வடக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனிடம் மாகாண சமூக சேவைகள் அமைச்சின் அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.



குறித்த கொள்கை ஆவணத்தை அமைச்சரிடம் கையளிக்கும் நிகழ்வு NPCODA நிறுவனத்தின் தலைவர் வெ.சுப்பிரமணியம் தலைமையில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், மாகாண சமூக சேவைகள் திணைக்கள அதிகாரிகள், NPCODA நிறுவன உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான அமைப்புக்களின் ஒன்றியத்தின் தொழில்நுட்ப செயற்பாட்டுக் குழு கடந்த பல மாதங்களாக வடக்கில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு மேற்குறித்த கொள்கை ஆவணத்தை தயாரித்திருந்தது. இந்தக் கொள்கை ஆவண உருவாக்கத்துக்கு வேள்ட் விஷன் லங்கா நிறுவனம் நிதி அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கொள்கை ஆவணத்தை பெற்றுக்கொண்ட அமைச்சர், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மாகாணம் ஆயிரக்கணக்கான மாற்றுத் திறனாளிகளைக் கொண்டுள்ளது. இவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு இந்தக் கொள்கை ஆவணம் இன்றியமையாதது. இவ் ஆவணம் விரைவில் மாகாண அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற பின் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். இதை அமுல்படுத்துவதற்கான சகல முயற்சிகளையும் எடுப்பதாகவும் அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-9)



தென்மராட்சி -மட்டுவில் சந்திரபுரம் கிராமத்திற்கான குடிநீர் விநியோகத்திட்ட ஆரம்ப விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது. 62 இலட்சம் ரூபாய் செலவில் 60 அடி உயரத்திலான நீர்த்தாங்கி நேற்று முன்தினம் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவனால் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. குடிநீர்த் திட்டத்தின் கட்டடத்தை சாவகச்சேரி பிரதேச சபையின் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் நாடாவை வெட்டி திறந்துவைத்தார். (படங்கள்:-சுபேசன்)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பெருமாக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய விளம்பி வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ)

# வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புற்றளை மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் கிருஷ்ணபிள்ளை குகநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக USA கணனி பொறியியலாளரும் பழைய மாணவனுமான கணபதிப்பிள்ளை காந்தரூபன் கலந்து கொள்வார். பரிசளிப்பவராக வைத்தியர் திருமதி. அகிலா காந்தரூபன் கலந்து கொள்வார். (இ)

# மோதலில் நால்வர் காயம்!

(கரணவாய்)

மணற்காட்டுப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் நால்வர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் வடமராட்சி கிழக்கு மணற்காட்டு பகுதியினருக்கு இடையில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இதில் இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த நால்வர் காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)



சி.சி.எச்.நிறுவனமும் யாழ்.பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையினரும் இணைந்து உலக சுற்றுச்சூழல் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக யாழ்.அச்செழு சிவப்பிரகாச வித்தியாலயம் மற்றும் பாஸ்பீமன்காமம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் 2018 ஆம் ஆண்டின் "பிளாஸ்ரிக் மாசை இல்லாது ஒழிப்போம் மீளப் பயன்படுத்த முடியாதென்றால் அதனை முற்றாக நிராகரிப்போம்" எனும் தொனிப்பொருளுக்கமைய "நிலைபேறான கழிவு முகாமைத்துவமும் அதற்கு ஏதுவான பழக்கவழக்கங்களும்", "பிளாஸ்ரிக் மற்றும் சேதனக்கழிவு முகாமைத்துவம்" மற்றும் பூச்சிகளைப் பயன்படுத்தி செய்யப்படும் நிலைபேறான திண்மக்கழிவு மேலான்மை" போன்ற விடயப்பரபுக்களில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை கடந்த 5 ஆம் திகதி மேற்கொண்டிருந்தன.



தெல்லிப்பழை மாவை கலட்டி கிராம அபிவிருத்திச் சங்கப் பொது மண்டபத் திறப்பு விழா கலட்டி கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பா.நவநேசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

# மீள்குடியேற்ற செயலணியால் பிரதேச செயலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்படவில்லை

## சத்தியலிங்கம் சந்தேகம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கான செயலணியால் மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்படவில்லை என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், இது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் 1990 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான சிறப்புச் செயலணி உருவாக்கப்பட்டிருந்தது. அந்தச் செயலணிக்கான அமைச்சரவைப் பத்திரத்தில் வடக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சிங்கள, முஸ்லிம் என்றே பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் செயலணி மூலமாகக் கடந்த வருடம் சிங்கள மக்களுக்கு 100 வீடுகளும் முஸ்லிம்களுக்கு 100 வீடுகளுமாக மொத்தம் 200 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த வருடத்துக்கென 342 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 50 வீடுகள் சிங்கள மக்களுக்கும் 292 வீடுகள் முஸ்லிம் மக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த 15ஆம் திகதி மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனைச் சந்தித்து 1990ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் சிங்கள, முஸ்லிம் மக்கள் மாத்திரம் இடம்பெயரவில்லை, பெருந்தொகையான தமிழ் மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர். எனவே சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கான மீள்குடியேற்றம் என்ற பெயரை நீக்கி வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த அனைத்து மக்களையும் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்தேன். தமிழர்களையும் இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக உள்வாங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது.

கடந்த 17ஆம் திகதி மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரால் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டச் செயலர்களுக்கும் இந்தச் செயலணியில் குறிப்பிடப்பட்ட சிங்கள, முஸ்லிம் மக்கள் என்ற திட்டத்துக்குள் தமிழர்களையும் (எல்லோரையும்) உள்வாங்குமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் செயலணியின் ஊடாக வீடு மாத்திரமன்றி உட்கட்டுமானம், வாழ்வாதாரம் என்பனவற்றையும் வழங்க முடியும். 17ஆம் திகதி என்று குறிப்பிடப்பட்ட கடிதம் மறுநாள் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் கடிதம் வவுனியா மாவட்டச் செயலகத்திலிருந்து பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பப்படவில்லை. மாவட்டச் செயலருக்கும் இது தெரியப்படுத்தப்படவில்லை. இந்தக் கடிதத்தை இந்தத் திட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் வைத்திருந்தனர். கடந்த 1ஆம், 2ஆம் திகதிகளில் இது தொடர்பாக மாவட்டச் செயலருடன் கலந்துரையாடிய பின்னர் வவுனியா பிரதேச செயலாளருக்கு 1ஆம் திகதியன்று இந்தக் கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளது. ஏனைய பிரதேச செயலாளர்களுக்கு கடிதம் கிடைக்கப்பெறவில்லை. எனவே மாவட்ட செயலகத்தால் ஏன் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (6 வருடங்களுக்கு முன்பு விவாகரத்துப் பெற்றவர்) வயது 48, மிக வசதியான நற்பண்புடைய மணமகனுக்கு நற்குணமுள்ள அழகான 40 வயதிற்கு குறைவான பெண்ணை அவரது தாயார் தேடுகின்றார்.

ஜாதகம் சீதனம் தேவையில்லை.
மணமகன் சொந்தத் தொழில் செய்பவர்.

தொடர்புகளுக்கு:
077 711 1256, 077 711 1257

## சோலைக்குயில் அவைக் காற்றுக்களம்

நடத்தும்

## ஆங்கில, உளவியல் வகுப்புக்கள்

▲ அதிபர்களுக்கான ஆங்கில வகுப்பு: வார இறுதி மற்றும் விடுமுறை தினங்கள்.

▲ வெற்றிகரமான வாழ்வுக்கான பட்டறை: உளவியல் ஆர்வமுள்ள கல்வித் துறையினருக்கு (ACT அடிப்படையில் ஆழமான உளவியல் பயிற்சி).

(4530)

ஆரம்பம் : 23.06.2018 காலை 9.00 மணி
இடம் : இணுவில் மத்திய கல்லூரி

பங்குபெற விரும்புவோர்: 077 960 6133 இல் அழைக்கவும்

தெய்வீக சுகமளிக்கும் ஊழியங்கள் நடாத்தும்

## விடுதலை பெருவிழா



பாவம்,சாபம்,பில்லி சூனியத்திலிருந்து விடுதலை, வியாதிகளிலிருந்தும் சுகம்

சுவிசேஷக் கூட்டங்கள்

வேதாகம கருத்தரங்குகள்

சுகமளிக்கும் ஜெபக் கூட்டங்கள்

ஜூன் 16 தொடக்கம் ஜூலை 9 வரை இக் கூட்டங்கள் நடைபெறும்.

17.06.2018 ஏழாலை தம்புவத்தை Church இல்

நேரம்: மாலை 4.00 மணி
தெய்வீக சுகமளிக்கும் ஜெபம் கூட்டங்களுக்கு
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்

நற்செய்தியாளர்கள்: சகோ.டேவிட் இரத்தினசிங்கம்
(இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கியம், லண்டன்)
சகோ.ஜான்சன் கணபதி(லண்டன்)
சகோ. பால் ஜெகந்நாதன்(இந்தியா)

தொடர்புகளுக்கு:
போதகர் குலேந்திரன்: 077 852 0121
போதகர் செல்வராஜா: 077 087 1750
சகோ. டேவிட் இரத்தினசிங்கம்: 076 983 9038

(4532)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்திரட்டாதி 3ஆம்பாதம்<br>கி.பா: 56 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR<br>எதிர்பார்ப்பு: இந்தியா வந்து திருமணம் செய்வார்<br>தொ.இ: B/8665 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 3ஆம்பாதம்<br>கி.பா: 52 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc QS பொறியியலாளர்<br>தொ.இ: G/7366 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3ஆம்பாதம்<br>கி.பா: 68 செவ் 7 இல்<br>உயரம்: 5'8'<br>தகைமை/தொழில்:BBM தனியார்தொழில்<br>தொ.இ: B/8666 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2ஆம்பாதம்<br>கி.பா: 25 செவ் 12 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: BA MA விரிவுரையாளர் அரசதொழில்<br>தொ.இ: G/7967 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L அரசதொழில்<br>தொ.இ: B/8669 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc அவுஸ்திரேலியா PR<br>தொ.இ: G/7968 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2ஆம்பாதம்<br>கி.பா: 09<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BScஅரசதொழில்<br>தொ.இ: B/8670 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2ஆம்பாதம்<br>கி.பா: செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7975 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# 20 மில்லியன் ரூபா செலவில் பூநகரியில் குளங்கள் புனரமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 20.50 மில்லியன் ரூபா செலவில் பல குளங்களின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பூநகரிப்பிரதேசத்தில் விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் கைவிடப்பட்ட குளங்கள், சேதமடைந்த குளங்கள் என்பவற்றை புனரமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 20.50 மில்லியன் ரூபா செலவில் குளங்களின் அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பொன்னாவெளிக்குளம், கிராஞ்சிக்குளம் என்பன 5 மில்லியன் ரூபா செலவிலும் கிராஞ்சி மொட்டையன் குளம் மூன்று மில்லியன் ரூபா செலவிலும் கரியாலை நாகபடுவான் மருதடிக்குளம் மூன்று மில்லியன் ரூபா செலவிலும் வண்ணாங்குளம் 2.5 மில்லியன் ரூபா செலவிலும் நாகதேவன் துறைக்குளம் மூன்று மில்லியன் ரூபா செலவிலும் நல்லூர் முனைக்குளம் இரண்டு மில்லியன் ரூபா செலவிலும் பத்தன் மோட்டைக்குளம் இரண்டு மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படுகின்றன என பூநகரி கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

# கல்வி இராஜாங்க அமைச்சர் கிளிநொச்சிக்கு நேற்று விஜயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சில நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் நேற்றையதினம் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நவீன வகுப்பறையை நேற்றுக் காலை 9 மணிக்குத் திறந்து வைத்து அமைச்சர் அதிபர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர்,

நான்கு மாவட்டங்களிலிருந்தும் அதிபர்கள் இங்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். அதில் கணித பாடத்தில் 50 வீதத்திற்கு அதிக புள்ளிகளைப் பெற்ற பாடசாலை அதிபர்கள் இங்கு வரவில்லை. அதற்கு குறைவான புள்ளிகளைப் பெற்ற அதிபர்களே இன்று வரவழைக்கப்பட்டுள்ளனர். குறைவான புள்ளியை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பில் ஆராயவே இன்று அழைக்கப்பட்டுள்ளீர்கள். 30, 40, 45 வரையான புள்ளிகளை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பில் அமைச்சு விசேட திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. எல்லோருக்கும் கணிதம் என நிகழ்ச்சி திட்டம் நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் கட்டன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலும் நேற்று கிளிநொச்சியிலும் இத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)




# வவு. தமிழ் மத்திய ம. வித்தியில் சிமாட் வகுப்பறை திறந்துவைப்பு





(குருமன்காடு)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் சிமாட் வகுப்பறை அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் நான்கு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள சிமாட் வகுப்பறையானது வவுனியாவில் முதன் முறையாக உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் வகுப்பறையானது பாடசாலை அதிபர் அமிர்தலிங்கம் தலைமையில் வைத்திய கலாநிதி மகேந்திரனால் திறந்து வைக்கப்பட்டது. (2-250)

# 5 ஆயிரத்து 214 அபாயகரமான வெடிபொருட்கள் ஸார்ப் நிறுவனத்தினால் அகற்றி அழிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப்பகுதியில் ஜப்பான் நாட்டு அரசின் நிதியுதவியுடன் இயங்கி வரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 மே மாதம் வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அம்பகாமம் மற்றும் நச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முகமாலையிலும் 4 இலட்சத்து 91 ஆயிரத்து 398 சதுர மீற்றர் பரப்பளவில் (491, 398sqm) இருந்து 5 ஆயிரத்து 214 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

இம்மாத இறுதிப்பகுதியில் இந் நிறுவனத்தின் நடவடிக்கைகள் மற்றும் கண்ணிவெடி அகற்றும் பகுதிகள் என்பவற்றை மேற்பார்வை செய்வதற்காக இலங்கைக்கான ஜப்பான் தூதரகப் பிரதிநிதிகள் வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# மாணவர்களின் வரவை அதிகரிக்க துவிச்சக்கர வண்டிகள்



(முல்லைத்தீவு)

பாடசாலை மாணவர்களின் வரவை அதிகரிக்க துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வேள்ட்விஷன் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தூர இடங்களில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்களின் வரவை அதிகரிக்கும் நோக்குடன் 22 துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிறுவனத்தின் அலுவலர்களினாலும், கிராம அபிவிருத்திக் குழு தலைவர்களாலும் வழங்கி வைக்கப்பட்டன. (2)

# கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் நியமனம்

(பரந்தன்)

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு முதற்தடவையாக உள்ள பயிற்சி மருத்துவர்கள் எட்டுப் பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த வருடம் ஜூன் மாதம் இலங்கை மருத்துவ சபை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு உள்ளக பயிற்சி மருத்துவர்களை நியமிப்பதற்கான அனுமதியை சுகாதார அமைச்சுக்கு வழங்கியிருந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பயனாக தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எட்டு உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று சனிக்கிழமை வைத்தியசாலையில் கடமைகளைப் பொறுப்பேற்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் தற்போது யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் மட்டுமே இதுவரை காலமும் உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு வருகின்ற உள்ளகப் பயிற்சி மருத்துவர்களில் எட்டுப் பேரில் பெரும்பாலானவர்கள் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் என்றும் ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்திலிருந்து வருடந்தோறும் 90 மருத்துவர்கள் மருத்துவக் கல்வியை நிறைவு செய்து உள்ளகப் பயிற்சிக்குச் செல்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-312)

# நுண்கடன் நிதி நிறுவனங்களிடமிருந்து மக்களை மீட்க இளைஞர்கள் முன்வர வேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் அழைப்பு



(கிளிநொச்சி)

எமது பிரதேசத்தை ஆட்டிப்படைக்கின்ற நுண்கடன் நிதி நிறுவனங்களின் மூலம் அப்பாவி மக்கள் படுகின்ற அவலங்களை உணர்ந்து அந்த நுண்நிதி நிறுவனங்களின் வலையில் மக்கள் ஈர்க்கப்பட்டுச் செல்வதை தடுத்து நிறுத்துவதற்கான விழிப்புணர்வுகளை நாம் மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட செயலரும் மாகாண சபை உறுப்பினருமான வை.தவநாதன் தெரிவித்துள்ளார். பளை இத்தாவில் கென்னடி விளையாட்டுக் கழகத் திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களையுடன் காலணித் தொகுதிகளையும் வழங்கி வைத்து வீரர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுண்கடன் நிதி நிறுவனங்களின் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் படும் பாடுகளை இளைஞர்களாகிய நீங்கள் உணர்ந்தவர்களாகச் செயற்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாது இது தொடர்பிலான விழிப்புணர்வுகளை மக்களுக்கு வழங்குபவர்களாக மாற வேண்டும்.

அந்த வகையில் நுண் நிதிக்கடன் சுமையிலிருந்து எவ்வாறு மீள்வது என்பது தான் இன்று மக்களுக்கு ஏற்பட்டுள்ள சவாலாக இருக்கின்றது. எனவே இந்த நுண்நிதிக் கடன் பெறுவது தொடர்பில் சரியான விழிப்புணர்வோடு செயற்படுவது அவசியமாகும்.

குறிப்பாக இவ்வாறான சவால்களுக்கு இளைஞர்கள் முகம்கொடுக்கும் போது அவர்கள் தமது எதிர்காலத்தை சிதைக்கின்ற வாய்ப்புக்கள் அதிமாகவே காணப்படுகின்றது.

எனவே இது தொடர்பில் நீங்கள் விழிப்புணர்வோடு செயற்படுவது மட்டுமல்லாது விழிப்புணர்வு ஏற்படுத்துபவர்களாகவும் மாற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டிலும் நடப்பாண்டிலும் தனது குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து மாகாண சபை ஒதுக்கீட்டிலிருந்து பல விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த நிகழ்வில் பளை பிரதேச அமைப்பாளர் பொன். கார்த்தி உட்பட விளையாட்டு வீரர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-315)



வவுனியா தோணிக்கல் ஆலடி வீதி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. காலை 7 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பூஜை நடைபெற்று 10 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெற்றமையைத் தொடர்ந்து விநாயகப்பெருமான், வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானுடன் அம்பிகை வீதியுலா வந்து அருள் பாலித்தனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கொக்கிளாய் காணிப்பிரச்சினைகள் தொடர்பில் சாதகமாக பரிசீலிக்கப்படும்

## வடக்கு மாகாண ஆளுநர் உறுதி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் காணிப்பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் நேற்று முன்தினம் முல்லை. மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருபது காணி முறைப்பாட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 12 பேர் விசாரணைக்கு சமுகமளித்திருந்தனர்.

இதில் 7 பேரின் காணிப் பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 22 பேர் புதிதாக தங்கள் காணி முறைப்பாட்டினைத் தெரிவித்துள்ளார்கள்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் சமுகமளிக்கப்படாத காரணத்தால் ஏனைய காணிப் பிரச்சினைகளும் வடக்கு மாகாண ஆளுநரினால் தீர்வுகள் காணப்பட முடியாதென தனது உரையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொக்கிளாய் காணிப்பிரச்சினைகள் தொடர்பில் சாதகமாக பரிசீலிப்பதாக ஆளுநர் உறுதி அளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி உள்ளிட்ட மக்களின் நிலங்கள் மகாவலி "எல்" வலயத்தினால் ஆளுகைப் படுத்தப்பட்டதையும் இதனால் தமது நிலங்கள் பறிபோவதையும் தமது குளங்கள், வயல்கள், நிலங்கள் பறிக்கப்பட்டு வருவதையும் சுட்டிக் காட்டினர்.

இவற்றைக் கேட்டறிந்த ஆளுநர் சாதகமாக பரிசீலிப்பதாகவும் மக்களது காணி விபரங்களைத் தருமாறும் கோரினார். (2-281)




# அன்புவார ஒன்றுகூடல் விழாவும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும்

(கிளிநொச்சி)

வடபிராந்திய சத்திய சாயி சர்வதேச நிறுவனம் நடத்தும் ''அன்புவார ஒன்றுகூடல் விழா'' நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்குபிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சத்திய சாயி சர்வதேசநிறுவன வடபிராந்திய நிறுவனங்களின் இணைப்புக் குழுவினரால் 2017 ஒக்டோபர் மாத இறுதி வாரத்தில் நடத்தப்பட்ட அன்புவார கட்டுரை, கவிதை, கதை, சித்திரப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்பெயர்விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அன்றையதினம் கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள அன்புவார ஒன்றுகூடல் விழாவில் மாணவர்களின் திறமையைக் கௌரவித்து பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகளில் பரிசில்கள் பெறும்மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**கட்டுரைப் போட்டி**
**முதலாம் பிரிவு**

முதலாம் இடம் ஏ.கீர்த்திகா- (கிளி/முருகானந்தா கல்லூரி, கிளிநொச்சி), இரண்டாம் இடம் என்.அகல்விழி- (கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை), இரண்டாம் இடம் கே.சாயினி- (கிளி/முருகானந்தா கல்லூரி, கிளிநொச்சி), மூன்றாம் இடம் இருவர் எல்.நிலுக்சி- (மன்/அரிப்பு றோ.க.த.க. பாடசாலை), ஆர்.விஷ்னிதா- (கிளி/விவேகானந்தா வித்தியாலயம்).

**கட்டுரைப் போட்டி**
**இரண்டாம் பிரிவு**

முதலாம் இடம் ஜோய் நேருஜா- (கிளி/விவேகானந்தா வித்தியாலயம்), இரண்டாம் இடம் இருவர் எஸ்.புவிசாலினி- (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஆர். எழில்நிலா- (கிளி/விவேகானந்தா வித்தியாலயம்), மூன்றாம் இடம் ரி.பவசாரிணி- (கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்).

**கட்டுரைப் போட்டி**
**மூன்றாம் பிரிவு**

முதலாம் இடம் ப.கௌதமி- (கிளி/வேருவில் இந்து மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம் இருவர் ரி.நர்சா- (கிளி/பாரதி வித்தியாலயம்), ஜே.பிதுசா- (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), மூன்றாம் இடம் மூவர் எல்.மயூரிகா (மு/மாங்குளம் மகா வித்தியாலயம்), ஆர்.தாரகன்- (மன்/புனித சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை), ஏ.வேதினி- (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**கதைப் போட்டி**

முதலாம் இடம் ஏ.ஜெக்சியா- (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம் இருவர் ரி.விஜிதா- (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), எஸ்.றிஸ்ரினி- றிவ்யூ மொறாய்ஸ் (மன்/அரிப்பு றோ.க.த.க. பாடசாலை, சிலாவத்துறை), மூன்றாம் இடம் இருவர் எஸ். கோபிகா- (கிளி/பாரதி வித்தியாலயம்), பி.சுபர்ணா- (கிளி/பாரதி வித்தியாலயம்).

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம் ஆர்.பிரியதர்சினி- (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம் ஜே.தர்மினி- (கிளி/மத்திய மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம் இருவர் எஸ்.சுடர்நிலா- (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஜே.அபிணாசியா- (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்).

**சித்திரப் போட்டி**

முதலாம் இடம் என்.அபிகேசன்- (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் மூவர் எம்.கமலரூபன்- (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), எஸ்.சசீகரன் (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), ரி.தமிழ்நிலவன்- (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), மூன்றாம் இடம் இருவர் எம்.எட்வேட் கெவின்- (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), ஜி.பவித்திரன்- (மன்/புனித ஸேவியர் ஆண்கள் தேசிய கல்லூரி). (2)

# முல்லைத்தீவு தனியார் பேருந்து உரிமையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு;ஆளுநரை சந்தித்தும் தீர்வில்லை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை கண்டித்தும் தமக்கு உரிய தீர்வு கோரியும் தமது சேவைகளை நிறுத்தி நேற்று இரண்டாவது நாளாகவும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதோடு மாவட்ட செயலகம் முன்பாக தமது பேருந்துகளை எடுத்து வந்து நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



குறிப்பாக தமது மாவட்டத்திலுள்ள பேருந்துகளுக்கு மாதத்தில் பத்து பன்னிரண்டு நாட்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுவதாகவும் ஏனைய மாவட்ட பேருந்துகள் அனைத்து நாளும் சேவையில் ஈடுபடுகின்றன.

தமது பிரச்சினைகளை கேட்டறிந்து பின்னர் வழிந்தட அனுமதி வழங்குமாறு கோரிய போதும் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டதனையும் தமது கோரிக்கைகளை தம்மோடு கலந்துரையாடி முடிவெடுக்குமாறுமே போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இருப்பினும் முல்லைத்தீவிற்கு நேற்று முன்தினம் வருகைதந்த வடக்கு மாகாண ஆளுநரிடம் கருத்துக்களை கூறியபோதும் வடமாகாண போக்குவரத்து அதிகாரசபை மற்றும் வடமாகாண போக்குவரத்து அமைச்சரின் றி தான் தீர்மானம் எடுக்க முடியாது.

அவர்களைச் சந்தித்து இவை தொடர்பில் கலந்துரையாட நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்

இருப்பினும் போராட்டமானது தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தமது போராட்டத்துக்கான தீர்வு கிடைக்கும் வரை தாம் போராடப் போவதாகவும் தீர்வின்றேல் சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதிப்போம் எனவும் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவில் மீனவர்களுக்கு பிரச்சினை ஏற்பட்ட போது அமைதியாக இருந்த மாகாண சபை வடமராட்சி கிழக்கில் அட்டை தொழிலாளர்கள் வந்துவிட்டனர் என்றவுடன் போராட்டங்களை நடத்தினர். இவ்வாறே எமது பிரச்சினையிலும் எம்மைப் பார்க்கின்றனர். இந்த நிலை மாறி எமக்கு உடனடி தீர்வு தர முன்வர வேண்டுமெனவும் தெரிவித்தனர். (2-281)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 157

## தேவைப்படுவது உல்லாசத்துறையல்ல! சுற்றுலாத்துறை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 171

வாருங்கள் எம் இனிய உறவுகளே!

என்ன தலைப்பிலேயே குழப்பமாக இருக்கின்றதென நினைக்கின்றீர்களா? இல்லையில்லை. எம்மவர்களுக்கு இவ்விரண்டிற்குமிடையில் குழப்பம் ஏற்பட்டுவிடக்கூடாதென்பதற்காக இதனை இன்று தலைப்பாக்கிக்கொண்டோம். அப்படியென்ன இவ்விரண்டிற்குமிடையில் வித்தியாசங்கள் என நீங்கள் நினைப்பதும் எமக்குத் தெரிகின்றது. தமிழில் அழகாக சொன்ன வார்த்தைகளின் ஜாலம் இது என்றால், மலைத்துப் போவீர்கள். இரண்டிற்கும் ஆங்கிலத்தில் Tourism என்றுதான் அழைப்பார்கள். ஆனால் எமது பிரதேசத்தில் இதற்கு பல அர்த்தங்கள் உள்ளனவாம். நாம் தற்போது உருவாக்க முயற்சிப்பது உல்லாசத்துறையல்ல என்பதும் சுற்றுலாத்துறையாகவே இருக்க வேண்டும் என பலரும் பலமாக நம்பியிருக்கின்றார்கள். எமது கலை, கலாசாரம், பண்பாடு, வாழ்வியல் மற்றும் வரலாறு என்பனவற்றை விளக்குகின்ற விடயங்களில் முழுமையாக எமது வளர்ச்சியிருக்க வேண்டுமே தவிர உல்லாசத்துறையென மேலைத்தேய விடயங்களை இங்குள்ள மக்களுக்குள் தேவையற்று விருப்பின்றி செலுத்தும் தன்மையுடையதாக இருக்கக்கூடாது. ஆனால் அந்நிய நாட்டு மோகம் இந்த விடயங்களையும் தாண்டி உட்புகுவதற்கான சந்தர்ப்பங்கள் பல இருப்பதனால் இவை பற்றிய விழிப்புணர்வு நிச்சயமாக மக்களுக்கு இருத்தல் வேண்டும். இந்த விடயத்தையும் சுற்றுலாத்துறை கவனத்திற்கெடுப்பது நல்லது.

வடமாகாண சுற்றுலாத் துறைக்கென முகாமைத்துவக் குழு உருவாக்கியிருப்பது நல்லதொரு சமிக்ஞை. இந்த முகாமைத்துவக் குழுவின் செயற்பாடுகளை மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றார்கள். விரைந்து பல திட்டங்களை கால அளவு சார்ந்து உடனடியானவை, மத்திமமானவை மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் என திட்டமிடப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டும். வடமாகாணம் வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்னும் கோரிக்கை பலமாக உருவாகின்ற இக்காலகட்டத்தில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி பலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. வடமாகாணத்தின் சுற்றுலாத்துறைமையங்கள் அனைத்தும் முழுமையாக இனங்காணப்பட்டு அவை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்கள் சுற்றுலாத்துறைக்கு அனுசரணையான சேவைகளை வழங்கக் கூடிய வசதிவாய்ப்புக்கள் அனைத்தும் இனங்காணப்படல் வேண்டும். இந்த சேவைகளை வழங்கும் துறைகளை அந்தந்த இடத்திற்கேற்றவாறு அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் மேலும் அங்குள்ள அனைவருக்கும் வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் அதிகரிக்கும் தன்மையுடையதாக கண்டறிந்து அவற்றை உள்வாங்கத் திட்டங்களை முன்னெடுக்கலாம்.

சுற்றுலாத் துறையுடன் சேவைகள் வழங்கும் பகுதிகளாக பலவற்றை குறிப்பிடலாம். பாரம்பரிய உணவு, பாரம்பரிய மருத்துவம், தமிழ்மொழி கற்றல், தங்குமிட வசதி (குறிப்பாக உள்ளூர் பொருட்களை பனையோலை அல்லது தென்னோலை கொண்டு வேயப்பட்ட பாதுகாப்பான மண்வீடுகள்), காற்றோட்டமான ஆறுதல் இடங்கள், தியான இடங்கள் குறிப்பாக யோகக்கலையை கற்கக்கூடிய இடங்கள், தரமான உள்ளூர் உற்பத்திகளான மென்பானங்கள், தரமான பதப்படுத்திய உணவு வகைகள், வணக்கஸ்தலங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறான போக்குவரத்து, இடையூறு இல்லாத போக்குவரத்தும் போக்குவரத்து வாகனங்களும், வரலாற்று பின்னணியுடனான இடங்களையும் அவற்றின் மகத்துவத்தையும் சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துக்கூறும் ஆற்றலுள்ள பன்மொழியையும் கற்றுத்தேறிய இளையவர்கள், சிறப்பாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கும் மையங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்யும் பொறிமுறை, பறவைகள் சரணாலயங்கள், எமது வரலாற்றை, பாரம்பரியத்தை சுற்றுலாப் பயணிகள் மனங்கோணாது கூறும் தொடர்பாளர்கள், உள்ளூர் உற்பத்தி காட்சியகங்கள், நினைவுப் பரிசுகள் இதில் எமது உள்ளூர் வளங்களைக் கொண்டு உருவாக்கிய தரமான பொருட்கள், கடற் பயண சுற்றுலா எனப் பலவற்றை உள்ளடக்கலாம். பாரம்பரிய உணவு தரமானதாகவும் சுகாதாரமானதாகவும் இருப்பதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்படலாம். பெண்களுக்கான கிராம அபிவிருத்தி சங்கங்களின் உதவியுடன் தரமான சுகாதாரமானபாரம்பரிய உணவுகளை உற்பத்தி செய்து வழங்கும் நிலையங்களை உருவாக்கலாம். அம்மாச்சியின் உருவாக்கம் இதற்கு நல்லதொரு உதாரணம்.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்குள் கிராமங்களின் வளர்ச்சியும் உள்ளார்ந்தது என்பதனை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. குறிப்பாக, கிராமங்களின் அபிவிருத்தியையும் மையப்படுத்திய அபிவிருத்தித் திட்டங்களை அந்தந்தப் பகுதி மக்களின் அனுசரணையுடன் உருவாக்குவது சாலச்சிறந்தது. பாரம்பரிய மருத்துவத்தையும் சிகிச்சையையும் பெறக்கூடிய இடங்களை இனங்கண்டு பாரம்பரிய மருத்துவர்களுக்கான அங்கீகாரத்தையும் வழங்குவதன் மூலம் அவர்களின் சேவையை சுற்றுலாப் பயணிகள் பெறுவதை உறுதி செய்தல் சிறந்தது. இன்னும் கலைகளை கண்டுகளிக்கும் இடங்களையும் உருவாக்கலாம். தமிழிசை மற்றும் இசையை கற்கும் இடங்கள் மற்றும் இசையை இரசிப்பதற்கான வசதி வாய்ப்புக்கள், குறிப்பாக, எமது பாரம்பரிய கூத்துக்கள், பாடல்கள், நடனம், மேள ஒலி இவற்றைக்கண்டும் கேட்டும் இரசிப்பதற்கான மையங்கள் என்பனவற்றை அந்தந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்போடு உருவாக்கலாம். அவற்றை சுற்றுலாப் பயணிகள் பார்த்திட ஆற்றுகைப்படுத்தலாம்.


மொரீசியஸ் நாட்டின் அபிவிருத்தியை இந்த இடத்தில் உதாரணங் காட்டினால் சாலப் பொருந்தும். யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலப்பரப்பின் இரு மடங்காக உள்ள மொரீசியஸ் தீவு தற்போது உல்லாசத் துறையில் கால்தடம் பதித்து பல மடங்காக தமது இருப்பினை அந்நியச் செலாவணியை உயர்த்தியிருக்கின்றது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்த அழகிய தீவில் மீன் பிடிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றால் பாருங்களேன். மீன் பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் அனைவரும் தற்போது சுற்றுலாத் துறைக்குள் உள்வாங்கப்பட்டு கடற்கரையில் சுற்றுலா கப்பலோட்டங்களும் அழகிய விடுதிகளும் அமைக்கப்பட்டு நாடு முழுவதும் சுற்றுலாத் துறையின் மையமாகவே மாறிவிட்டிருக்கின்றது. விவசாயத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. நெற்செய்கை ஒரு காலத்தில் அதிகமாகவே இருந்த இந்தத் தீவில், நெற்பயிர்ச் செய்கை கணிசமானளவு குறைந்து விட்டது. இதைத் தவிர கரும்பு அதிகளவில் பயிரிடப்பட்டாலும் தற்போது அதனது விஸ்தீரமும் குறைவடையத் தொடங்கி விட்டதாக அங்குள்ள மக்கள் கருத்துத் தெரிவித்தார்கள். நாடு முற்றிலுமாக சுற்றுலாத்துறை மற்றும் உல்லாசத்துறை என்பனவற்றை உள்ளடக்கியதாக மாற்றம் பெற்றுவிட்டது. அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வந்துபோகும் இடமாக மாற்றம் பெற்றுவிட்டது. இந்த மாற்றம் மக்களின் விருப்பிற்கேற்ப மக்களால் ஏற்படுத்தப்பட்ட மாற்றமென்றால் மிகையாகாது. இத்தீவிற்கு சென்று வருவதற்கு சுற்றுலாப் பயணிகள் விருப்பங்கொண்டிருப்பதற்கு அங்குள்ள வளம், ரம்மியமான காட்சிகள், மக்கள் சுற்றுலாப் பயணிகளுடன் கலந்துரையாடும் பண்பு, உதவி செய்யும் மனப்பான்மை, எந்தவித அச்சுறுத்தலும் இல்லாத பாதுகாப்பான இடமாக வைத்திருப்பது என பலவற்றைக் கூறலாம்.

மொரீசியஸ் தீவில் கிராமங்களை தேடிக்கண்டு பிடிக்க வேண்டியிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் வளர்ச்சிபெற்ற கட்டடங்களும், அபிவிருத்தியின் சாயலும் காணக்கிடைக்கின்றன. மீன் பிடிக்கப்படுவது இல்லையென்பதால் கடலுணவு வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. நெல், கோதுமை, என பலதும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்திய வம்சாவளியினர், ஆபிரிக்க வம்சாவளியினர், மிகவும் குறைந்த எண்ணிக்கையில் வேறு நாட்டினர் அதில் இலங்கையர்களும் உள்ளடக்கம். ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் மொரிசியஸ் மொழி என பல வகையானவற்றை காணலாம். நல்ல விடயங்களை நாம் உதாரணமாக எடுத்து எமது பிர தேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். எமக்கான அடித்தளத்தை நாமே இடவேண்டும். அதற்கான வலுவான கொள்கைக் கட்டமைப்பு அவசியம். மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களாக உருவாக்கப்பட்டால் மக்களை மையப்படுத்திய திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டால் நிச்சயமாக வடமாகாணம் அடுத்த மூன்றாண்டுகளில் முன்னிலைக்கு நகரும். இது சாதாரணமான விடயமன்று. அனைவரும் இதற்கான அர்ப்பணிப்புடன் பாடுபட வேண்டும்.



நீர்வீழ்ச்சி

சிவபெருமான் சிலை




வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.


(படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# மகிந்த பலமிக்க பிரதமராக மீண்டும் பதவிக்கு வர முடியும்

## ஆசையை ஏற்படுத்துகிறார் அநுரகுமார

(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் கீழ் அதிகளவான நன்மை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே கிடைக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று நடந்த 20 ஆவது திருத்தச்சட்டம் குறித்த கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தற்போதுள்ள அரசியலமைப்பு சட்டத்தின் படி ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டால், பிரதமராக மீண்டும் பதவி வகிப்பவரே ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டும்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவிக்கு வந்தால், அவரால் ஜனாதிபதியாக பதவிக்கு வர முடியாது. 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைய மகிந்த ராஜபக்ஷ பலமிக்க பிரதமராக மீண்டும் பதவிக்கு வர முடியும்.

அத்துடன், 20ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்திற்கு அமைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பதவிக்காலம் 7 மாதங்களாக குறைந்து விடும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# மைத்திரி தலைமையிலான குழு இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் மனித நேய செயற்பாட்டாளர்கள் குழு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றது.

நாட்டில் தொடர்ந்து இடம்பெற்ற 30 வருட கால யுத்தத்தில் தொடர்ச்சியாக அழிவுகளை எதிர்கொண்ட யாழ்.மாவட்ட மக்களுக்கு ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் மனித நேய வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காக இவர்கள் வருகை தருகின்றனர்.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி மைத்திரி குணரட்ன, இம்முன்னணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான அருணோதய மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் தேசமான்ய டாக்டர் கே. ஆர். ஹிர்சாந் ஆகியோரின் பங்கேற்புடன் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை 9 மணி முதல் இம்மனித நேய வேலைத் திட்டங்களுக்கான அறிமுக நிகழ்வு இடம்பெறும்.

இந்த அறிமுக விழாவில் சுகாதார மற்றும் ஆரோக்கிய அறிவூட்டல், விழிப்பூட்டல் பிரசாரங்கள், சிறுநீரக மற்றும் கண் புரை நோயாளர்களுக்கான இலவச மருத்துவ முகாம் என்பனவும் இடம்பெறும். (இ-7)




## ஸ்ரீ நாகபூஷணி அம்மையே...

நயினையம்பதியில் கோவில் கொண்ட
நாகபூஷணி அம்மையே,
நாகம் மீதில் வீற்றிருக்கும் தாயே
வேண்டுதல் வேண்டுவோர்க்கு
வேண்டியதை அருளும் ஈஸ்வரியே
அரக்க குணம் படைத்தோரை
நல்வழிப்படுத்தி
எல்லோரும் இன்பமுடன் நலமோடு வாழ
நற்கருணை புரிந்திடுவாய்
ஸ்ரீநாகபூஷணி அம்மையே சரணம், சரணம்.

S. அருந்தவநாதன்
அரியாலை.

## நாகமும் கருடனும் நயினையில்

நாகர்கள் வழிபட்ட பூர்வீக ஆலயம்
நயினாதீவு நாகபூஷணியம்பதி,
நாகமும் கருடனும் பாகமாயுறைந்த
நாட்டுக்கு உகந்த பதி நயினையம்பதி,
தேவர்கள் வந்திறங்கிப் பூஜிக்கும் பதி
தித்திக்கும் நயினையம்பதி,
தீராத நோய்களைத் தீர்க்கும் பதியாக
திரு நாட்டில் விளங்குதே நயினையம்பதி.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

## இடர் களைய வருவாயம்மா

ஏழாற்றுப்பிரிவிடையே எழுந்தாயம்மா
எம்மினத்தின் இடர் களைய வருவாயம்மா
பஞ்சம் பசி பட்டினிகள் போக்க நீயும்
பார்வதியே அம்பிகையே வருவாயம்மா
வஞ்சகமும் பொறாமையுடன் சூழ்ச்சிதனை
சுட்டெரிக்க சுந்தரியே வருவாயம்மா.

நயினையூர்-இ.கங்கேஸ்



# புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்

## அதிபர் திரு.நா.நாகராசா அவர்களின் ம

### சிறப்புமலர்- 16.06.2

### வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவு பெருமை காண்கின்றது. சைவம், தமிழ், சித்தாந்தம் நிறைந்த நமது ஊர் பெற்றெடுத்த அதி உத்தம ஆசான்கள் வாழ்ந்ததும் இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் குரு. நாகமுத்து நாகராசா அதிபர் எனது சக மாணவன். பள்ளிப்பருவத்திலேயே கல்வியில் சிறந்து விளங்கி அனைத்து பெறுபேறுகளும் பெற்று முதன்மை மாணவராக திகழ்ந்தவர். "தான் பெற்ற இன்பம் பிறர் பெற வேண்டும்" இந்த வாக்கியத்திற்கு நாகராசா அதிபர் ஒரு உதாரண புருஷர்.

சுமார் 33 ஆண்டுகள் ஆசிரியர், அதிபர் பணிகளை சிறப்புற நடத்தி ஓய்வு நிலை எய்தியுள்ளார். இக் காலப் பகுதியில் அவர் புங்குடுதீவுக்கு கல்விப் பெருமை படைத்தது கணக்கில் அடங்காதது ஒன்று. எத்தனையோ மாணவச் செல்வங்களை சிறந்த கல்விமான்கள் ஆக்கி அதி உயர் பதவியில் வைத்துள்ளார். அதிபர் அவர்கள் தான் பதவி வகித்த பாடசாலைகள் மட்டும் அல்ல புங்குகுடுதீவையும் அபிவிருத்திப் பாதையில் சிறந்து விளங்க வைத்த பெருமையும் இவருக்கு உண்டு.

ஓய்வு நிலை அடையக் கூடிய காலத்தில் தான் ஆரம்பக் கல்வி பயின்ற அதே பாடசாலை ஆகிய புங் -12 ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் அதிபராக பல ஆண்டுகள் கடமை புரிந்ததில் இவர் வாழ்நாள் சாதனை படைத்து விட்டார். வாழ்க பல்லாண்டு.

இவர் இன்னும் பல சேவைகள் செய்ய தல்லைய பற்று முருகன் திருத்தாள் வணங்கி வாழ்த்துகின்றேன்.

**சுபமஸ்து.**

**சிவாச்சார்ய திலகம் செஞ்சொல் குருமணி**
**சிவஸ்ரீ நா. சின்னத்துரை ஐயா**
**சிவகுமாரன் குருக்கள் (குமார் ஐயா )**

### மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்


புங்கையூர் மண்கண்ட பல கல்விமான்களில் நாகமுத்து நாகராசா என்பவரும் ஒருவர் என்பதில் பெருமை கொள்கின்றேன். கல்விப் பணியே தன் பணி என நினைத்து பல இடங்களில் பணிபுரிந்து சேவையாற்றியுள்ளார் என்று கூறினால் அது மிகையாகாது. மாநகரங்களில் இவரின் கல்விப் பணியானது ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தமது சொந்த மண்ணில் ஈரைந்து வருடங்கள் பணியாற்றி பல கல்விமான்களை இவ் உலகிற்கு கொண்டு வந்து சேர்த்த பெருமை முதல்வர் நாகராசாவையே சாரும் என்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

முதல் நியமனமாக ஆசிரியராகப் பணியாற்றி தன் கல்வித்திறமையினாலும் ஆற்றல்களினாலும் பதவியுயர்வு பெற்று இன்று மணி விழா நாயகனாக சிறப்பித்து கௌரவப்படுத்தப்படுவதை எண்ணி இம் மண்ணும் வாழ்த்திப் போற்றுகின்றது.

பிறந்த மண்ணில் சேவையாற்றும் பாக்கியம் பெற்றவர்கள் அபூர்வமானவர்கள்தான். அந்தவகையில் நாகராசா முதல்வர் பத்து வருடங்களாக புங்கையூரில் அதிபராகப் பணியாற்றியுள்ளார் என்பது அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். மேலும் புங்கையூர் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் தம் பணியை நிறைவு செய்து ஓய்வுநிலை அதிபராக வர்ணிக்கப்படுகின்றார் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை ஆகும்.

மேலும் சமூக ஆர்வலர்களில் இவரும் முக்கிய இடத்தை வகிக்கின்றார் என்பதை சுட்டிக்காட்டுகின்றேன். மணிவிழா நாயகனின் கல்விப்பணி ஓய்ந்து போனாலும் சமூகப்பணி முற்றுப் பெறவில்லை என்பதில் பெருமிதம் கொள்கிறேன். இவரின் சமூகப் பணி தொடர்ந்திட வாழ்த்துக்களைக் கூறி அடுத்தடுத்து தொடரும் சுவடுகளில் கால் பதிக்க இறைவனின் அருளும் ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் உம்மோடு நிலைத்திருக்க இந்நாளில் இறைவனை ஆசிக்கின்றேன்.

**அருட்பணி செபமாலை செபஜீவன்**
**புனித பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,**
**புங்குடுதீவு.**



### வாழ்த்துச் செய்தி

புங்கையூர் மண் பெற்றெடுத்த எங்கள் ஆசான் திரு.நாகமுத்து நாகராசா அவர்கள் ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்து பின்பு அதிபராக அகவை அறுபதிலே இன்று ஓய்வுபெறுகின்றார்.

இவர் ஆசிரியராக, அதிபராக சேவை செய்த காலங்களிலே மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காகவும் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் ஆற்றிய பணி மகத்தானது.

கல்வியில் மட்டுமன்றி சமுகப்பணிகள், சமயப் பணிகள் என்பவற்றிலும் சிறந்த சேவையை ஆற்றி வருபவர். இவரின் சேவையைப் பாராட்டுவதோடு இவரது ஓய்வுக் காலம் மிகச் சிறப்பாகவும் உன்னதமாகவும் அமைய வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவைப் பிரார்த்திக்கின்றேன்.

**வாழ்க வளமுடன்**
**மரியதாசன் கிறிஸ்தியன், செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா**
**வித்தியாலயம்.**



### பதவிக்குப் பெருமை சேர்த்த பண்பாளன்

திரு.நா.நாகராசா அவர்கள் புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம.வியில் ஆரம்பக் கல்வியை கற்றவர். அதே பாடசாலையில் அதிபராக 5 வருடங்கள் கடமையாற்றி இளைப்பாறியுள்ளார். அவ் வித்தியாலயத்தில் அவரது பிள்ளைகள் கல்வி கற்பதால் பெற்றோராகவும் உள்ளார். இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அடிப்படையில் வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தார். அதற்காக சிறந்த அதிபருக்கான குரு பிரதீபா பிரபா 2015 ஆம் ஆண்டில் பெற்றார். இவற்றுடன் நின்று விடாது கிராமத்தில் பொது அமைப்புக்களில் தன்னை அர்ப்பணித்து வாழ்கின்றார். அந்த அடிப்படையில் வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபையின் உதவி தவிசாளராகவும் புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ. சங்கத்தில் முன்னாள் தலைவராக வும் தற்போது நெறியாளராகவும் இருந்து கூட்டுறவு துறையை வளர்த்து வருகின்றார்.

உயர்திரு. நாகமுத்து நாகராசா அவர்களின் ஓய்வுக்காலத்தில் நோய் நொடியின்றிச் சீரோடும் சிறப்போடும் குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழ எல்லாம் வல்ல வெள்ளி பிள்ளையாரின் இறையருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**S.K. சண்முகலிங்கம் JP, ஓய்வுநிலை அதிபர்,**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேசா ம.வி.**
**தவிசாளர், வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை.**



### வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவின் கலைக்கோயிலாக எழுந்து நிற்கும் ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் அதிபராக கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்து ஆண்டுகளாக தன்னால் இயன்ற கல்விப்பணியாற்றியுள்ளார். அதிபர் திரு.நா.நாகராசா அவர்கள் தனது ஆசிரியப் பணியை கொழும்பில் ஆரம்பித்து பின்னர் சொந்த மண்ணில் சொந்த மாணவர்களுக்கு சேவை யாற்ற வேண்டும் என்ற பெரு விருப்புடன் தீவகத்தின் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக பணியாற்றியுள்ளார்.

தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்காக பல இடர் மிகுந்த காலங்களிலெல்லாம் தன்னை அர்ப் பணித்து செயலாற்றியுள்ளார். கல்விப் பணி மட்டுமல்லாது சமூகத்திலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மத்தியஸ்தர் சபை என தனது சேவையை இன்றும் செய்து கொண் டிருக்கும் திரு.நா. நாகராசா அவர்களின் ஓய்வுக் காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுகின்றேன்.

**சி.கமலவேந்தன், அதிபர்**
**யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்**



### ஆற்றல் மிக்க அதிபர்

எனக்கு எண்ணும் எழுத்தும் கற்றுத் தந்த இப்பாடசாலையில் பல புகழ் பூத்த அதிபர்களின் தன்னலமற்ற சேவையினால் இக்கிராமத்தின் கல்விப்பாரம்பரியத்தில் விழுதுகள் சர்வதேசமெங்கும் வியாபித்துள்ளது என்பதை சகலரும் அறிவர். அந்த வகையில் இடர்சூழ்ந்த காலப் பகுதியில் ஆசிரியராகவும் அதிபராகவுமிருந்து கிராமத்து மாணவர்களின் கல்விக்காக பெரும் பங்கு கொண்டு உழைத்தவர் அதிபர் நாகமுத்து நாகராசா அவர்களாவர். அதாவது 1991 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து மாற்றலாகி வந்து திரு.நாகராசா அவர்கள் 2018 ஆம் ஆண்டு வரை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை உயர்த்துவதில் கண்ணும் கருத்துமாயிருந்தவர்.

ஓய்வுபெறும் அதிபர் நீண்ட பூரண ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தொடர்ந்தும் மாணவர்களுக்கும் மக்களுக்கும் சேவையாற்ற எல்லாம் வல்ல கண்ணகை அம்மனை வேண்டுகின்றேன்.

**செல்லையா மகேந்திரன் பழைய மாணவன், உரிமையாளர்,**
**கருணாஸ்ரீஸ், கொழும்பு. மலாயன்கபே, யாழ்ப்பாணம்.**



### வாழ்த்துச் செய்தி

தீவக இடம்பெயர்வின் பின்னர் புங்குடுதீவுப் பிரதேசம் மீண்டும் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போதிலும் அங்கிருந்த படை ஆக்கிரமிப்பு காரணமாக முழுமையான உறுதிப்பாட்டுடனும் நம்பிக்கையுடனும் மக்கள் மீள் குடியேறவில்லை என்றே கூறவேண்டும். இதனால் ஆங்காங்கு மக்களற்ற வீடுகள், பூமி நிலங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. காலையில் நிற்பவர்களை மாலையில் இப்பிரதேசத்தில் காண முடியாது. தடைகளைத் தாண்டி நகர் பயணித்து விடுவார்கள். ஒரு சில மாணவர்களைக் கொண்டு பாடசாலைகளை ஆரம்பித்து அப் பாடசாலைகளை படிப்படியாக வளர்த்தெடுத்த இக்கால அதிபர்கள் நினைவு கொள்ளப்பட வேண்டியவர்கள். அவர்களின் அர்ப்பணிப்பான சேவையால் அவர்கள் பணியாற்றிய பாடசாலைகளை அவரவர் பெயர் கொண்டு அழைக்கப்பட்டதும் வழமையானது.

இக்கட்டான காலத்தில் இவர் ஆற்றிய பணிகள் காரணமாக வே இன்றுள்ள புங்குடுதீவின் கல்வி நிலைத்துநிற்கின்றது. அவர்கள் அன்று பாடசாலைகளை நடத்தியிராவிட்டால் இன்றும் இப்பிரதேசத்தில் மூடப்பட்டிருக்கின்ற பாடசாலைகளின் பட்டியலில் இப்பாடசாலைகளும் இடம்பெற்றிருக்கும். சிறப்பாக துவங்கி நூற்றாண்டுகண்டு வளர்ந்து நிற்கின்ற இப்பாடசாலைக்கு அதிபர் நாகராசா அவர்கள் ஆற்றிய பணிகளை பாடசாலைச் சமூகம் என்றும் மறக்காது என நினைக்கின்றேன். ஓய்வுக் காலம் இவருக்கு சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

**தி.ஜோன் குயின்ரஸ், வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.**



### வாழ்த்துச் செய்தி

அதிபர் நாகமுத்து நாகராசா அவர்கள் கஷ்டப் பிரதேசமாகிய எமது தீவகத்தில் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார். ஆசிரியராக தனது கல்விப்பணியை ஆரம்பித்து அதிபராக பதவி உயர்வு பெற்று அறப்பணியாற்றியுள்ளார். புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் தனது கல்விப்பணியை நிறைவு செய்துள்ளார். அதிபராக நான் சேவையாற்றிய போது சகோதர அதிபராக இருந்தவர். சாந்தமும், அமைதியும், நிறைந்த அதிபர் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தல் சிறந்து விளங்க வாழ்த்துகின்றேன்.

தற்போது என்னுடன் கோட்டத்தில் ஒரு மூத்த அதிபராக செயல் வீரராக செயற்பட்டவர். சமூகத்தில் பல சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ளமையையும் அறிய முடிகின்றது.

இவரது ஓய்வுக் காலத்தில் சகல வளமும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி. சா.கிருஷ்ணதாஸ்**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர், வேலணை.**



**பெயர்:** நாகமுத்து ந
**பாடசாலை:** யா/ புங்குடுதீவு ஸ்ரீ க
**நிரந்தரமுகவரி:** 12 ஆம் வட்
**பிறந்த ஆண்டு:** 1958.03.28
**முதல் நியமனம்:** 1985.04.16

### சேவைவி

**பாடசாலை**

**கொ/தெமட்டகொட அரசினர் தமி**
**மகா வித்தியாலயம் ஆசிரியர் -**
**யா/ கோப்பாய் ஆசிரியர்**
**பயிற்சிக் கலாசாலை பயிற்சி ஆசிரியர்**
**கொ/தெமட்டகொட அரசினர் தமி**
**மகா வித்தியாலயம் ஆசிரியர்-**
**யா/புங்குடுதீவு கமலாம்பிகை க**
**மகா வித்தியாலயம் ஆசிரியர்-**
**யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.க.**
**வித்தியாலயம் அதிபர்-**
**யா/ புங்குடுதீவு கமலாம்பிகை க**
**மகா வித்தியாலயம் அதிபர்-**
**யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா**
**வித்தியாலயம் அதிபர்-**

### சமூகப் ப

**வேலணைப் பிரதேச மத்தியஸ்**
**01.02.2011 தொடக்கம் இன்றுவ**
**புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ.**
**உறுப்பினர் (முன்னாள் தலைவர்)**



### வாழ்

புங்குடுதீவினைப்பிறப்பி
ராசா அவர்கள்தனது அறுபதா
யில் இருந்து ஓய்வு பெற்று
1985களில் கொ/தெமட்டகொ
தில் ஆசிரியராக தனது பணி
ரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்
கொ/தெமட்டகொட அரசினர்தமிழ் மகா வித்தியால
கனிஷ்ட மகா வித்தியாலயம் ஆகிய பாடசா
சிறப்புற ஆற்றியுள்ளார்.

இவர் யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.க
வேற்று அதிபராக பதவியேற்றார். பின் னர்
பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் கடமை
ஆண்டிலிருந்து ஓய்வு பெறும் வரை யா/பு
யாலயத்தில் தனது கடமையை சிறப்பாக அ
காலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அமை
இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

**ஆ. இளங்கோ, வலயக்கல்வி**




### வாழ்த்

திருவாளர் நாகமுத்து நாகராச
கால அனுபவம் கொண்டவ
தன்னை கல்வித்துறைக்காக
சமூக ஆளு மையுடன் கூடிய
கிய தன் ஊடாக தன் கல்வித் து
யுள்ளார். அந்தவகையில் மிகவும் நெருக்கடி
கல்வி வளர்ச்சிக்காக ஆசிரியராக, அதிபராக
ந்து ள்ள அதிபர் அவர்களை பாராட்டி வாழ்த்து

**அ.சோதிநாதன், பிரதேச வ**

# வித்தியாலய
# மணிவிழா
# 06.2018



கமுத்து நாகராசா SLPS-2 அதிபர்
டுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்
ஆம் வட்டாரம். புங்குடுதீவு.
58.03.28
85.04.16

**சவைவிபரம்**

| | காலம் |
|---|---|
| சினர் தமிழ் சிரியர் - ர் | 16.04.1985-14.02.1988 |
| சி ஆசிரியர் | 15.02.1988-31.12.1989 |
| சினர் தமிழ் சிரியர்- | 01.01.1990-04.04.1991 |
| பிகை கனிஷ்ட சிரியர்- | 05.04.1991-12.01.2003 |
| ா.க.த.க. | 13.01.2003-09.09.2008 |
| ம்பிகை கனிஷ்ட திபர்- | 10.09.2008-20.01.2013 |
| ணச மகா | 21.01.2013-28.03.2018 |

**சமூகப் பணி**

மத்தியஸ்தர் சபை உப தவிசாளர்
இன்றுவரை
ப.நோ.கூ.சங்கம் நெறியாளர் சபை
தலைவர்)

## வாழ்த்துச் செய்தி

னைப்பிறப்பிடமாகக்கொண்ட திரு.நாகமுத்து நாக
னது அறுபதாவது வயதினில் தனது கல்விச்சேவை
ய்வு பெற்றுள்ளார். திரு.நா.நாகராசா அவர்கள்
தெமட்டகொட அரசினர் தமிழ் மகா வித்தியாலயத்
தனது பணியை ஆரம்பித்து யா/கோப்பாய் ஆசி
ஆசிரிய பயிற்சி பெற்றார். ஆசிரியப்பயிற்சியின்பின்
ா வித்தியாலயம், யா/புங்குடுதீவு கமலாம்பிகை
ஆகிய பாடசாலைகளில் ஆசிரியப் பணியைச்

றோ.க.த.க வித்தியாலயத்தில் கடமை நிறை
ர். பின்னர் அதிபராக யா/புங்குடுதீவு கமலாம்
யத்தில் கடமையாற்றி தொடர்ந்தும் 2013 ஆம்
வரை யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தி
சிறப்பாக ஆற்றியிருந்தார். இவரின் ஓய்வுக்
கவும் அமைய வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல
றேன்.

**மயக்கல்விப்பணிப்பாளர், தீவகம்.**

## வாழ்த்துச் செய்தி

முத்து நாகராசா அவர்கள் கல்விப் புலத்தில் நீண்ட
கொண்டவராக ஆசிரியர், அதிபர் சேவையில்
துறைக்காக அர்ப்பணித்து செயலாற்றி யுள்ளார்.
யுடன் சுவாய கல்வியை மாணவர்களிற்கு வழங்
ன் கல்வித் துறைசார் அனுபவத்தை வெளிப்படுத்தி
ம் நெருக்கடியான சூழலில் தீவகப் பிரதேசத்தின்
க, அதிபராக சேவையாற்றி ஓய்வுநிலை அடை
ராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ் வடைகின்றேன்.

**பிரதேச செயலர், வேலணை.**

## மணிவிழா நாயகனுக்கு மகுடம்



மணிவிழா நாயகனாக திகழும் திரு. நாகமுத்து நாகராசா அவர்கள் ஆசிரியர், அதிபர் சேவையில் 33 வருடங்கள் சேவையாற்றி கல்விச் சமூகத்துக்கு அரும்பணி ஆற்றியுள்ளார். தனது ஆரம்பக்கல்வியை கற்ற பாடசாலையாகிய யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயமாகிய இப் பாடசாலையிலேயே அதிபராக இருந்து இளைப்பாறுவதையிட்டு பாராட்டப்பட வேண்டியதாகும். மற்றும் புங்குடுதீவு மக்கள் இடம் பெயர்ந்த வேளையில் அவர்களுடன் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் மீளக் குடியேறிய வேளையில் கல்வியினை வளர்த்தெடுப்பதற்கு முன்னின்று உழைத்தவர். இவ்வாறு கல்விப் புலத்துக்கும் சமூக வளர்ச்சிக்கும் சேவையாற்றிவரும் விழா நாயகன் கல்விப் புலத்திலிருந்து ஓய்வு பெற்றாலும் அவருடைய பணிகள் தொடர்ந்தும் சமூகத்திற்கு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே ஓய்வுக் காலத்தில் உடல் நலத்துடன் சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விழா நாயகனை வாழ்த்தி நிற்கின்றோம்.

**இ.இளங்கோவன், ஆளுநரின்**
**செயலாளர்,வடமாகாணம், யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச் செய்தி



புங்கை மண் பெற்றெடுத்த எங்கள் அதிபர் திரு.நாகமுத்து நாகராசா அவர்கள் ஒரு கல்விமான் மட்டுமல்ல ஒரு சமய சமூகப் பற்றாளரும் ஆவார். தனது பணியைச் செவ்வன செய்தது மட்டுமன்றி தனக்குத் தெரிந்த விடயங்களை எல்லாம் மற்றவர்களுக்கு சிறப்பாகக் கற்பித்து மாணவர்களின் அறிவுவளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்து அரும்பணியாற்றி மணி விழாக் காணும் எங்கள் அதிபரை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் தனது ஓய்வுக்காலத்தில் கல்விப் புலத்திலும் சமூகப்புலத்திலும் அரிய பல சேவைகளை ஆற்ற வேண்டும் எனக்கேட்டு இவர் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் தனது சமய, சமூக, கலைப் பணிகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபட்டு எமது சமூகத்திற்கு தனது அனுபவத்தைத் தந்து சேவையாற்ற வும் மகிழ்ச்சியான வாழ்வு வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**வாழ்கவளமுடன்**
**மனவளக்கலை பேராசிரியர்**
**அருள்நிதி சி.முருகானந்த வேல்**
**அறிவுத் திருக்கோவில்.**

## ஓய்வுக்காலம் சிறப்பாகவிருக்க வாழ்த்துகின்றேன்



கிராமத்தில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்ட 1991ஆம் ஆண்டு தான் பிறந்த மண்ணுக்கு சேவையாற்றவென கொழும்பிலிருந்து இடமாற்றம் பெற்றுவந்து 27 ஆண்டுகளில் பத்து ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றி நிலை குலைந்திருந்த கல்விப் பாரம்பரியத்தினை முன்னெடுப்பதில் பெரும்பங்கு கொண்டு உழைத்த பெருமை அதிபர் நாகராசா அவர்களைச் சாரும்.

அதிபர் அவர்கள் கல்விப்பணிக்கப்பால் சமூகப் பணிகளில் குறிப்பாக பல நோக்குச் கூட்டுறவுச் சங்கத் தலைவராக கடமையாற்றியதுடன் வேலணை மத்தியஸ்தர் சபை உபதவிசாளராக ஏழாண்டுகளாக கடமையாற்றி வருகின்றமை அவரின் ஆளுமையின் வெளிப்பாடேயாகும். ஓய்வு பெறும் அதிபர் நீண்ட ஆயுளுடன் தனது கல்வி, சமூகப்பணியினை ஆற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**பேராசிரியர். கா.குகபாலன்**
**புவியியற் துறைத் தலைவர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## வாழ்த்துச் செய்தி



திரு.நா. நாகராசா அவர்கள் தீவகக் கல்வி வலயத்தில் நான் பணியாற்றிய காலத்தில் இவருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. தீவகத்தில் இவர் பணியாற்றிய பாடசாலைகள் யாவும் மிகவும் கஷ்டமான பிரதேசத்தில் அமைந்தவை. இப்பாடசாலைகள் ஒவ்வொன்றையும் மேம்பாடடையச் செய்ய இவர் பல்வேறு முயற்சிகளை செய்தமையை இவ்வேளையில் நினைவு கூருகின்றேன். இவர் மேலதிகாரிகளுடன் சுமுகமான உறவுகளைப் பேணியதுடன் தனக்குக்கீழ் பணியாற்றிய ஆசிரியர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் நடந்து அவர்களின் மனநிறைவான அர்ப்பணிப்புள்ள சேவையைப் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தமை பாராட்டுக்குரியது. கல்விப் பணியுடன் நின்றுவிடாது வேலணை மத்தியஸ்தர் சபையில் உப தவிசாளராக பணியாற்றுவதன் மூலமும் புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ. கூ. சங்கத்தின் நெறியாளர் உறுப்பினராக (முன்னாள் தலைவர்) பணியாற்றுவதன் மூலமும் பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றி வருகின்றார்.

இவரின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வ.இராதாகிருஷ்ணன் ஓய்வு நிலை வலயக்**
**கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம்.**

# ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி



மானிட வர்க்கத்தின் நலனுக்கும் பாதுகாப்பிற்கும் மனதைத் தூய்மைப்படுத்திக் கொள்வதே முதன்மைத் தேவையாக அமைகின்றது. சமூகத்திற்கு ஒவ்வாத எவ்வாறான செயல்களினதும் ஆரம்பக் கரு மனித மனங்களிலேயே உதிக்கின்றது. அந்த வகையில் மானிட வர்க்கத்தின் விடுதலையும் நலனும் மனிதநேயம்மிகு நற் சிந்தனைகள் வளமாகவும் பலமாகவும் அமையும் பின்னணியிலேயே உருவாகின்றது. உலகவாழ் முஸ்லிம்கள் ஒரு மாத காலம் நோன்பு நோற்று தியாகத்தையும சமாதானத்தை யும் நன்மதிப்பையும் முதன்மைப்படுத்தும் ஈதுல் பித்ர் ஈகைத்திருநாள் மூலம் இந்த உன்னதமான செய்தியினையே உலகிற்கு எடுத்துரைக்கின்றார்கள். அது உலக நியதியை உள்வாங்கிய செய்தியுமாகும்.


உலக வாழ் மக்களின் நலனும் அவ்வாறான நற் செய்திகளின் பொருளைப் புரிந்து மற்றவர்களோடு ஏற்படுத்திக் கொள்ளும் புரிந்துணர்விலேயே தங்கியிருக்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் பெரும் இக்கட்டான நிலைமையை சந்தித்திருக்கும் தற்கால உலக சமூகங்களுக்கிடையில் நல்லொழுக்கத்தையும் நேசக்கரத்தையும் நீட்டி, நேர்மையாக நடந்து கொள்வதிலேயே சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும் இதமான வாழ்க்கைச் சூழலை உருவாக்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பதையே ரமழான் நோன்பு எமக்கு கற்றுக்கொடுக்கின்றது.

வெறுமனே வேதம் என்ற எல்லையைக் கடந்து உன்னதமான மனிதத்துவத்துடன் உறவாடும் நேர்மையான நோக்கைக் கொண்ட இலங்கையருக்கும் உலகவாழ் இஸ்லாமியருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மைத்திரிபால சிறிசேன,**
**ஜனாதிபதி.**

# முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி



இஸ்லாமியர்களின் இரு பெருதிருநாட்களில் ஒன்றாக கருதப்படுகின்ற ஈகைத் திருநாளாகிய ஈத் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற புனித ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்றுக் கொண்டிருக்கின்ற அனைத்து இஸ்லாமிய மக்களுக்கும் இத் தருணத்தில் எனது அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இஸ்லாமியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய 5 கட்டாயக் கடமைகளில் ஒன்றாக கூறப்பட்ட ரமழான் நோன்பு கடமைகள் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்கப்பட்டு நிறைவேறிய பின்பு, இறுதித் திருநாளான ஈகைத் திருநாளில் முஸ்லிம் சகோதர சகோதரிகள் அனைவரும் தமது திருநாளை மகிழ்வுடன் கொண்டாடவும் ஏனைய மதத்தைச் சார்ந்த சகோதர சகோதரிகளுடன் நட்புரிமையுடன் பழகவும் இந்த ஈகைத் திருநாள் சிறப்பு நிகழ்வுகள் வழி சமைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். மேலும் ரமழான் நோன்பில் கூறப்பட்டவாறு அடுத்துவரும் 11 மாதங்களுக்கும் இஸ்லாம் மாதத்தில் கூறப்படுகின்ற மனிதப் பண்புக்கும் இறை ஒழுக்கத்திற்கும் அமைய உண்மையான முஸ்லிமாக ஹறாம் இழைக்காதவனாக வாழ்வதற்குரிய தைரியமும் ஒரு சத்திய வாழ்வும் அனைத்து முஸ்லிம்களுக்கும் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர்**
**சி.வி.விக்னேஸ்வரன்,**
**முதலமைச்சர்,**
**வடமாகாணம்.**

# எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்துச்செய்தி



புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்ற எமது முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

சுய தியாகம் மற்றும் மற்றவர்களுக்கு உதவுதல் என்பவற்றின் மகத்துவம் பற்றி புனித ரமழான் மாதம் எமக்கு நினைவூட்டுகின்றது. பல்வேறு இன மற்றும் சமய ரீதியான பின்னணிகளைக் கொண்ட மக்கள் மகிழ்ச்சியுடன் ஐக்கியப்படுவதற்கு இப்புனித மாதத்திலே எமக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

இப்புனித நாளினைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தல் மற்றும் எமது நாட்டிலே சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் போன்ற விடயங்களை மறக்காமல் இருப்பதற்கும் நாம் உறுதி பூணுவோம். தமது எதிர்காலம் குறித்து நம்பிக்கையற்றிருக்கும் மக்கள் தமது எதிர்பார்ப்புகளையும் மகிழ்ச்சியையும் அடைந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிட்ட வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன்.

ஈத் முபாரக்!

**இரா. சம்பந்தன் எம்.பி.**
**எதிர்க்கட்சித் தலைவர்**

# கோத்தா களமிறங்குவதில் எவ்வித சிக்கலுமில்லை

**எஸ்.பி.கூறுகிறார்**



(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ இரட்டைப் பிரஜாவுரிமை உடையவராக இருந்தாலும் அவர் இலங்கைப் பிரஜை என்ற ரீதியில் தேர்தலில் போட்டியிட உரிமை உடையவர். ஆகவே, அவர் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதில் எவ்வித சிக்கலும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையில் பிறந்த அனைவருக்கும் உள்நாட்டில் அரசியலில் ஈடுபட உரிமையுள்ளது. அரசியல் சாசனத்தின் பிரகாரம் அது அடிப்படை உரிமையாகவுள்ளது. இந்நிலையில், நாட்டின் பிரஜைகள் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவர்களாயின் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இலங்கைப் பிரஜை என்ற வகையில் தேர்தலில் போட்டியிடுவதில் எவ்வித சிக்கலும் இல்லை.

நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த அவர், நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக பங்களிப்புடன் செயற்படுவார் என்பதில் சந்தேகமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-७)

# அலிபாபாவும் 118 திருடர்களும் என்று அரசிலுள்ளோர் அழைக்கப்படுகின்றனர்

## டளஸ்.எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்றவர்கள் அலிபாபாவும் 118 திருடர்களும் என்றே முழு நாட்டிலும் ஊடகங்கள் வாயிலாக அழைக்கப்படுகிறார்கள் என்று கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இலங்கை பாராளுமன்றம் எனக் குறிப்பிடப்பட்டு பாராளுமன்ற சந்தியில் தியவன்னா ஓயாவுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட அலோசியஸ் அன்ட்சன் கம்பனி என மாற்ற வேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்தார்.



கூட்டு எதிர்க் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேர்பெச்சுவல் ட்ரஷரிஸ் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்ற 118 பேர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# சரத் என் சில்வாவின் மனு தள்ளுபடி

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட முறை சட்டத்துக்கு முரணானது என்று உத்தரவிடுமாறு கோரி முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், புவனேக அலுவிஹரே மற்றும் நளின் பெரேரா ஆகிய மூன்று நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த மனு அழைக்கப்பட்ட போது பெரும்பான்மை தீர்மானத்தின்படி நிராகரிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் திருத்த சட்டமூலம், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டமை அரசியலமைப்புக்கு முரணானது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இதன்போது மனுவுக்கு எதிர்ப்பு வெளியிட்ட சட்டமா அதிபர், அந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதால் அது தொடர்பில் நீதிமன்றத்தில் விசாரிக்க முடியாது என்று தெரிவித்தார்.

அதன்படி மனுவை விசாரிக்காமல் நிராகரிப்பதற்கான பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்மானத்தை பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் அறிவித்துள்ளார். (இ-7)



# ஞானசார தேரருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பையிட்டு சந்தோசப்படுகிறேன்

## சந்தியா எக்னெலிகொட தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிரான வழக்குத் தீர்ப்பை முன்னிட்டு தான் சந்தோசமடைவதாக ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.

ஞானசார தேரருக்கு எதிரான தண்டனையை அறிவித்த நேற்று முன்தின நீதிமன்ற அமர்வில் கலந்துகொண்டு விட்டு வெளியேறும் போதே அவர் ஊடகங்களிடம் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இந்த தேரரால் பாதிப்புக்குள்ளான பலர் உள்ளனர். அவர்கள் அனைவருக்காகவும் தான் நான் இந்த வழக்கில் முன்னிலை வகித்தேன்.

இந்த வழக்கு தொடர்பில் இறுதிவரை நான் சமாதானம் செய்து கொள்ளச் செல்லவில்லை. நீதிமன்றத்தின் கௌரவத்தை நீதிபதி சிறப்பான முறையில் பேணியுள்ளார் எனவும் சந்தியா எக்னெலிகொட மேலும் தெரிவித்தார். (இ-7)

# "எமது சேவைக்கு சிறைதான் பரிசு"

## தண்டனையின் பின் ஞானசார தேரர் புலம்பல்


(கொழும்பு)

நாம் இந்த நாட்டுக்காக செய்யும் கடமைக்கு கிடைப்பது தண்டனையும் இகழ்ச்சியும் மட்டும் தான் என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனை தெரிவித்தார்.

நாம் இந்த நாட்டுக்காக செய்யும் பணிக்கு எமக்கு பதவி உயர்வு வழங்கப்படுவதில்லை.

உயர்ந்த சம்பளக் கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை. குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனையும் ஏச்சும் இகழ்ச்சியும் இவ்வாறு சிறை வாழ்க்கையும் தான் கிடைக்கின்றது.



இவை எதுவாக இருந்தாலும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம் என ஞான சார தேரர் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரி ஜனாதிபதி, மகிந்த பிரதமர் விரைவில் ஆட்சி மாற்றம் - டிலான்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கி மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை ஏற்படுத்துவதே 16 பேர் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் குழுவின் நோக்கம் என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழுவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் 17 ஆண்டுகள் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்பட்ட மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அதிரடித் தீர்மானம் எடுக்க முடியும் என்றால், நாம் கூறும் இந்த விடயமும் சாத்தியமாகும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நிபந்தனையாக அல்ல, வேண்டுகோளாக!

"உங்களுக்கு நான் உதவி செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை!" என்று சிலர் ஆரம்பிக்கின்றார்கள். "நீ இன்னைக்கு லீவு எடுத்துக்கோ, ஆனா ஒண்ணு வீட்டில் படிக்கணும்; ரி.வி.பார்க்கக் கூடாது, சரியா?" என்று மகனிடம் தாய் கேட்பதும் கிட்டத்தட்ட மேற்கூறிய விடயத்திற்கு ஒப்பானதுதான்.

உலகம் ரொம்பவும் மாறிவருகிறது. எவரும் சாமானியத்தில் கட்டுப்பாடுகளுக்குள் சிக்குவதாக இல்லை. நிபந்தனைகளைத் தங்களைச் சுற்றிக் கட்டப்படும் வலுவான் கயிறுகளாகவே பலரும் கருதுகிறார்கள். சுதந்திரக் காற்றின் சுவாசத்தின் சுவையைக் கண்டு கொண்டு விட்டால் இந்த மனநிலை மாற்றம்.

"உனக்கு நான் சிபாரிசு செய்து வேலையில் சேர்த்துவிடுகின்றேன். ஆனால் மூன்று நிபந்தனைகள். ஒன்று எந்தக் காலத்திலும் நிர்வாகத்திற்கு எதிரான நடவடிக்கையில் இறங்கக் கூடாது. வாங்குகிற சம்பளத்தை அப்படியே வீட்டில் கொடுக்க வேண்டும். பின்னால் என் வேலை விடயமாக நான் என்ன முடிவெடுத்தாலும் அதுக்கு நீ கட்டுப்பட வேண்டும்" என்றெல்லாம் ஒருவர் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.

வேலை கிடைக்கிறதே என்கிற சுவாரசியத்தில், அவன் "நீங்கள் கிணற்றில் விழச் சொன்னாலும் விழுறேன் சேர்!" என்றுதான் சொல்வான். வேலை நிரந்தரமாகி சில ஆண்டுகள் ஆனதும் அவன் சிந்திக்க ஆரம்பிப்பான்.

"அந்த மனுஷன் என்ன கண்டிஷன்" எல்லாம் போட்டான் தெரியுமா? என்பான். நிமிர்ந்து விடுவான், போட்ட நிபந்தனைகளை மிகச் சரியாக மீறி சேர்த்து விட்டவருக்கு எரிச்சலூட்டுவான்.

"உன்னைச் சேர்த்துவிட்டத்துக்கு பிரதிபலனா ஒண்ணே ஒண்ணுதாம்பா நான் எதிர்பார்க்கின்றேன். உன்னை சேர்த்து விட்டத்துக்காக நான் என்றென்றுக்கும் பெருமைப்படணும். அதுவே போதும் எனக்கு" என்று அவர் தன் நிபந்தனைகளைப் பொது வேண்டுகோளாகச் சொல்லியிருந்தால் ஒரு பிரச்சினையும் வந்திருக்காது.

பெண் பார்த்த அன்று மாப்பிள்ளைப் பையன் பெண்ணுடன் பேச வேண்டும் என்றான். பெரியவர்கள் சம்மதித்தார்கள். பேசிய அந்தப் பதினைந்து நிமிடத்தில் அவன் ஏழெட்டு நிபந்தனைகளைப் போட்டான். அவளுக்கு உள்ளுக்குள் எரிச்சல் தான். ஆனாலும் சம்மதித்தாள். அவர்களது வாழ்க்கை இன்று சந்தோசமாக இல்லை.

"நான் அன்புக்கு ஏங்கியவன். இள வயது முதல் அது மறுக்கப்பட்டவன். நாம் மனமொத்த தம்பதியாக வாழ வேண்டும், என் தொழில் வீடு தங்க முடியாதது. இவற்றை நீ நன்கு புரிந்து கொண்டு என் வாழ்க்கை இலட்சியங்களை அடைய நீ துணையாக இருக்க வேண்டும்" என்று அவன் பண்பாய் அவளை அணுகியிருந்தால் அவன் விரும்பியவையெல்லாம் நடந்திருக்கும்.

நிபந்தனைகளைத் தூக்கி எறிவோம். அவற்றிற்கு வேண்டுகோள் எனும் முலாம் பூசுவோம்.

**லேனா தமிழ்வாணன்**

# சட்டமா அதிபருடன் இணக்கம்

# நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவில் 25 ஆம் திகதி கோத்தபாய ஆஜர்

(கொழும்பு)


எதிர்வரும் 25 ஆம் திகதி எப்.சி.ஐ.டி. எனும் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகி வாக்கு மூலம் கொடுக்கவும், அறிவித்தல் விடுக்கப்படும் போது நீதவான் நீதிமன்றில் ஆஜராகவும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் சட்டமா அதிபருக்கும் இடையே இணக்கம் காணப்பட்டுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் ஜெயரத்ன நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிவித்தார்.

அதன்படி மெதமுலன டீ.ஏ. ராஜபக்ஷ அருங்காட்சியகத்தை அமைக்கும்போது இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் 25 ஆம் திகதி நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகவுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தன்னை கைது செய்வதை தடுக்கக் கோரி கோத்தபாய ராஜபக்ஷ தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் ஜெயரத்ன இதனை மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி பிரீத்தி பத்மன் சுரசேன, அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

இதன்போது பொதுச்சொத்து துஷ்பிரயோக சட்டத்தின் கீழ் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வதற்காக விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.



இதன்போது மனுதாரர் மற்றும் சட்டமா அதிபர் ஆகிய இரு தரப்புக்கும் இடையில் எட்டப்பட்ட உடன்பாடுகள் எழுத்து மூலம் நீதிமன்றத்தின் முன்னிலையில் முன் வைக்கப்பட்டது.

இந் நிலையில் மனுதாரரான கோத்தபாய ராஜபக்ஷவை எதிர்வரும் 25ஆம் திகதி பொலிஸ் நிதி மோசடி பிரிவில் ஆஜராகி வாக்கு மூலம் வழங்குமாறு உத்தரவிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த வழக்கை ஜூலை மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டது. (இ-7)

# ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய மேலும் இருவர் விரைவில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்து கல்லூரி ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் மேலும் இருவரை அடையாளம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.பொலிஸார், அவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இரு வாரங்களுக்கு முன்னர் கொக்குவில் இந்து கல்லூரியின் ஒழுக்காற்று ஆசிரியர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த ஆசிரியர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் பாடசாலையின் ஆசிரியர்கள் அனைவரும் கல்லூரியின் நுழைவாயிலில் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது தாக்கப்பட்ட ஆசிரியருக்கு நீதி வேண்டுமென்றும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆசிரியர்களின் போராட்டத்தையடுத்து இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.


இந்த மாணவர்களின் கைதை தொடர்ந்து ஆசிரியரை தாக்கியது குறித்த கைது செய்யப்பட்ட மாணவர்கள் இல்லை எனவும் உடனடியாக இரு மாணவர்களையும் பொலிஸார் விடுவிக்க வேண்டும் எனவும் கோரி மாணவர்கள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் குறித்த மாணவர்களை சந்தித்து இதற்கொரு தீர்வை பெற்று தருவதாக கூறியிருந்தனர்.

இதனை அடுத்து மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த ஆசிரியரை தாக்கினார்கள் என கருதப்படும் இருவரை தாம் அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

# ரூபாவின் வீழ்ச்சியால் நாட்டுக்கு 753.8 பில்லியன் ரூபாய் நட்டம்

## ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அமெரிக்க டொலரின் பெறுமானம் அதிகரித்து கொண்டே செல்வதனால் நாட்டில் இன்று ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் நாட்டுக்கு 753.8 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையினால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்றதிலிருந்து ரூபாவின் பெறுமானத்தை தக்க வைத்துக்கொள்ள முடியாது போயுள்ளது. அதனால் டொலரின் பெறுமானம் உயர்வடைந்து கொண்டே செல்கிறது. இதனால் இன்று நாட்டுக்கு 753.8 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறு ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்வதற்காக மக்கள் மீது வரிச்சுமை அதிகரிக்கப்படுகிறது. அரசாங்கத்திடம் ஒழுங்கமைக்க பொருளாதாரக் கொள்கை இல்லாததனாலேயே இவ்வாறு வரிச்சுமையை அதிகரிக்கின்றனர்.

நாட்டில் இன்று மீண்டும் பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. கடந்த ஆட்சியில் ஒழிக்கப்பட்ட பாதாள உலகக் குழுக்களை நல்லாட்சி அரசாங்கமே மீண்டும் நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ளது.

எனவே, அக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு அரசாங்கமே அனுசரணை வழங்கி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## துப்பாக்கிச் சூட்டையடுத்து கிரிவெஹெர விகாரைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு



(கதிர்காமம்)

கதிர்காமம்- கிரிவெஹெர விகாரையின் விகாராதிபதி, கொபவக தம்மின்த தேரர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தையடுத்து, கதிர்காம வணக்கஸ்தல பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அப்பகுதிக்கு வருகை தரும் வாகனங்களை மட்டுப்படுத்தி அவற்றை சோதனையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-7)

## சிறுகதைத் தொகுப்பு அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

மறுபாதி குழுமம் நடத்தும் விமைக்கல் கொலினின் பரசுராம பூமி சிறுகதைத் தொகுப்பு அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் டேவிற் வீதி கலைத்தூது அழகியல் கல்லூரியில் எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் ஆகியோர் கலந்து கொள்வர். கருத்துரையை எழுத்தாளர்களான ச.இராகவன், சி.ரமேஸ் ஆகியோர் வழங்குவர். (இ-7)



அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் 20 மாணவர்களுக்கு வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் செ.விஜயராஜ் தனது சொந்த நிதியில் காலணிகள் வழங்கினார்.

## இலங்கையின் ட்ரம்ப்-கிம் டிசெம்பர் மாதம் சந்திப்பு



(கொழும்பு)

அமெரிக்காவின் டொனல்ட் ட்ரம்பும் வட கொரியாவின் கிம் ஜாங் உன் உம் ஒன்றிணைந்தது போல இலங்கையின் ட்ரம்பும் - கிம்மும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஒன்றிணைவார்கள் என முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார். இந்த திருமணத்துக்கான தரகர் பணியை 16 பேர் கொண்ட குழு மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## வெலே சுதாவின் சகா கைது

(கொழும்பு)

சுமார் 25 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் மற்றும் துப்பாக்கி என்பவற்றுடன் வெலே சுதாவின் சகா ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு பிலியந்தல பகுதியில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து சுமார் 25 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளும் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# வணிகக் கல்வி சார்ந்த நிகழ்வுகளை சகல பாடசாலைகளிலும் நடத்துக

ஜுலை 5 ஆம் திகதி தேசிய வணிக கல்வி விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு சகல பாடசாலைகளிலும் வணிகக் கல்வி சார்ந்த நிகழ்வுகளை நடத்துமாறு சிரேஷ்ட விரிவுரையாளரும் தேசிய கல்வி நிறுவகத்தின் வணிகத்துறை செயற்றிட்ட தலைவருமான எஸ்.கே.பிரபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில், ஜுலை 5 ஆம் திகதி தேசிய வணிகக்கல்வி விழிப்புணர்வு தினமாகும். இதனை முன்னிட்டு அப்பாடத்துறை சார்ந்த விழிப்புணர்வுகளை பாடசாலைகளில்நடத்த வேண்டும்என வணிகத்துறை பணிப்பாளர்கள், ஆசிரிய சேவைக் கால ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.

வணிகத்துறை பாடமானது வெறுமனே பாடங்களாக மாத்திரம் அமையாது வாழ்க்கையின் நடைமுறை விடயங்களாகவும் அவை காணப்படுகின்றன. எனவே இவ்விடயத்தையே தொனிப்பொருளாகக் கொண்டு இம்முறை இவ் விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே இம்முறை பாடசாலைகளில் வணிகத்துறை விழிப்புணர் தின நிகழ்வில் வணிகத்துறையின் முக்கியத்துவம், அதன் உயர் கல்வி வாய்ப்புக்கள், அவற்றினூடான தொழில் வாய்ப்புக்கள் என்பன தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய விடயங்களை மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என பாடசாலை அதிபர் மற்றும் துறை சார்ந்த ஆசிரியர்களிடம் வேண்டப்படுகின்றது.

மேலும் இது தொடர்பான சகல வழிகாட்டல்களும் வணிகத்துறை பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த அத் தினத்திலேயே நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இந் நிகழ்வுகள் நடத்தப்படுவதே சிறந்ததாக அமையும் எனவும் அவரது செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

# குற்றச்செயல்கள் குறித்து பொலிஸாரை மாத்திரம் சாடுவது நியாயமில்லை

## மகிந்தவுக்கு ருவான் பதிலடி

(கொழும்பு)

நாட்டில் இன்று இடம் பெறும் குற்றச்செயல்களுக்கு பொலிஸாரின் பலவீனமே காரணம் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்தானது நியாயமற்ற் தவறான கூற்றாகும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.



அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் பொல்கஸ் ஓவிடவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொரிஸாரின் பலவீனங்களே இன்று நாட்டில் இடம் பெறும் குற்றச்செயல்களுக்கான காரணம் எனக் குறிப்பிட்டுள்ளமையானது மிகவும் தவறான கூற்றாகும்.

பொலிஸாரால் மாத்திரம் இலங்கையில் நடைபெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியாது. அரசியல்வாதிகள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பிலிருந்தும் அதற்கான ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

கடந்த 2013, 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளை விட தற்போது கொலைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், கொள்ளைச் சம்பங்கள் என்பன குறைவடைந்துள்ளன. சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கைதுசெய்து அவர்களுக்கு தண்டனையும்பெற்றுக் கொடுக்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




சாவகச்சேரி பொலிஸ் நிலையமும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பழைய மாணவர்களும் இணைந்து நடத்திய இரத்ததான நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர். (படம்: சுபேசன்)

# இலங்கையில் பேஸ்புக் பாவனையாளர்களுக்கு ஓர் முக்கிய எச்சரிக்கை

(கொழும்பு)

இந்த ஆண்டில் மாத்திரம் சமூக வலைத்தளங்கள் தொடர்பில் தங்களுக்கு 1100 முறைபாடுகளுக்கு மேல் கிடைக்கப்பெற்றிருப்பதாக, கணனி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது. அத்துடன் முக்கியமான 10 வர்த்தகர்களின் மின்னஞ்சல் கணக்குகளை ஊடுருவும் செயற்பாடு குறித்த முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதேநேரம் பேஸ்புக் பாவனையாளர்கள் தங்களது பாதுகாப்பு மற்றும் தனியுரிமை தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் குறிப்பாக தங்களது படங்களை தரவேற்றும் போது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும்எச்சரிக்கப்பட்டுள்-ளது.

இதன்படி, படங்களை தரவேற்றும் போது நண்பர்கள் மாத்திரம் பார்க்கக் கூடிய வகையில் தனியுரிமையை வகைப்படுத்துவது சிறந்தது என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

பிறப்பு எண் 1 விதி எண் 5

எப்பொழுதும் பல பேர் சூழ்ந்து இருப்பதையே விரும்புவார்கள். ஒரே இடத்தில் நில்லாது சுற்றி அலைந்து தொழில் செய்வார்கள். பெரியவர்களிடமும் சான்றோர்களிடமும் மரியாதையுடன் நடந்து கொள்வார்கள். நன்றியுணர்ச்சி மிக்கவர்கள். புன்னகை தோய்ந்த முகத்துடன் காட்சியளிப்பார்கள்.

நகைச்சுவை உணர்வு மிக்கவர்கள். சமய சந்தர்ப்பத்தைச் சரியாகக் கணக்கிட்டு வெற்றி பெறுவார்கள். கவர்ச்சியாகக் காட்சியளிப்பார்கள். வசீகரமான முகத்துடன் பொது வாழ்க்கையில் பிரகாசிப்பார்கள். நல்ல கற்பனை சக்தியிருக்கும். சுமாரான உயரமும் சிறிது சிறிது பருமனான உடலும் உடையவர்கள். இவர்கள் எக்காரியத்தையும் சீக்கிரம் முடித்துவிட ஆசைப்படுவார்கள். உணவு, உறக்கமில்லாமல் உழைப்பார்கள். சுத்தமான ஆடைகளை அணிவார்கள். பளபளப்பாகக் காட்சியளிப்பார்கள்.

மின்னல் வேகத்தில் செயற்பட்டு, விரைவில் எதையும் முடிக்குமளவு திறமையுடன் செயற்படுவார்கள். குதூகலமான மனிதர்கள். புதுமையை விரும்புவார்கள். வினோத மிருக்கும். கலைகளில் பற்று இருக்கும். குலப் பெருமையைக் காப்பார்கள். பொருளாதார நெருக்கடியான நேரத்தில் பொருள், பணம் சரியாக வந்து சேரும். வரவுக்குத் தகுந்த செலவு செய்வார்கள்.

நிரந்தரமான வருமானத்தைத் தேடிக் கொள்வாள்வார்கள். மற்றவர்கள் அறியாத பல விடயங்களை அறிய முற்படுவார்கள். தனக்குத்தானகவே பேசிக் கொள்ளும் பழக்கமிருக்கும். தனிமையில் சுயமாக மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருப்பார்கள். உண்மையான திறமைசாலிகளை மதிப்பதுடன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்வார்கள். அவர்களைப் பகைத்துக் கொண்ட மனிதர்களை மிகவும் கடுமையாக எதிர்த்து அசுரத்தனமாகத் தண்டிப்பார்கள். தனக்குக் கெடுதல்




விநாயகராமன்

செய்த எதிரியை எப்படியும் சிதறுண்டு போகச் செய்வார்கள். பலநேரங்களில் திட்டம் தீட்டிக் கொண்டேயிருப்பார்கள். எதிரிகள் மண்டியிட்டால் உதவியும் செய்வார்கள். பிறர் தவறுகளைத் தண்டிக்கும் மனமும், மன்னிக்கும் மனமும் இவர்களிடம் இருக்கும். இவர்கள் செல்லும் இடத்தை மற்றவர்களிடம் சொல்ல மாட்டார்கள். வேறு வேறு இடத்தில் இருப்பதாகக் காட்டிக் கொள்வார்கள். இடத்தை மாற்றிச் சொல்லிவிட்டுச் சென்று விடுவார்கள். வாகனப் பிரியர்கள். மத விடயங்களில் ஆழ்ந்த ஈடுபாடு இருக்கும். தேசபக்தி நிறைந்திருக்கும். பிறருடைய துயரத்தைப் போக்குவார்கள். வரலாற்றுச் சிறப்புகள் மீதும், அரிய பொக்கிஷங்கள் மீதும் ஆராய்ச்சி மனப்பான்மை உடைய நபர்கள். வாழ்க்கைத் துணை மீது அதிகமான அக்கறையுடன் செயற்படுவார். பெற்றோரின் மீது அதிக பக்தியிருக்கும். உடல் மற்றும் மன வலிமை மிக்க இவர்கள் பூரிப்பான இதயத்துடன் வாழ்வார்கள். எதிலும் முன் ஜாக்கிரதையாகவே இருப்பார்கள். தன்னுடைய காரியம் வெற்றி பெறும் வரை யாரிடமும் அதைப் பற்றிக் கூறமாட்டார்கள். வயது செல்லச் செல்ல வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டேயிருக்கும். பேச்சும், எழுத்தும் மக்களைச் சீர்படுத்தும். அழகை ரசிப்பவர்கள். பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பவர்கள். கடவுள் பக்திமிகுந்தவர்கள். எளிமையையும் கடைப் பிடிப்பார்கள். சட்டம், அரசியல், சாஸ்திர விடயங்களை நன்கு அறிந்து வைத் திருப்பார்கள். தர்மவான்கள். எப்போதும் சுறுப்புடன் இருப்பார்கள். தன்னிச்சையாகச் செயல்பட்டு வெற்றி பெறுவார்கள். இரகசியம் காப்பார்கள். இடைத்தரகர்கள் தொழிலில் பெரும்பணம் சம்பாதிப்பார்கள். ரியல் எஸ்டேட், கமிஷன் போன்ற இரண்டு நபர்களை இணைத்து நடக்கும் தொழில் இவர்களுக்கு மிகவும் இலாபகரமானதாக இருக்கும். தாம்பத்யத்தில் அதிக விருப்பும், வெறுப்பும் இருக்கும். கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவர்கள் பிறருடைய உதவியை நாடுவதை விரும்ப மாட்டார்கள். புதிய ஆன்மீக வழிமுறைகளைக் கடைப்பிடிப்பார்கள். கணவன்-மனைவிக்குள் பாசமிருக்கும். பிரியம் இருக்கும் சில நேரங்களில் மூர்க்கத்தனமாகச் செயற்படுவார்கள். சென்ற இடமெல்லாம் புதுப்புது நண்பர்கள் உருவாகுவார்கள். மாறாத மனமுடையவர்கள். நிலையில்லாத காதல் வயப்படுவார்கள்.

(தொடரும்....)

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2018-16.07.2018

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**






## கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும்!

விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் புதன் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். அவரோடு தனாதிபதி சந்திரனும், சகாய ஸ்தானாதிபதி சூரியனும் இணைந்து இருப்பதால் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழிவகுத்துக் கொடுப்பர். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுக்கிரக சேர்க்கை காரணமாக கூட்டாளிகளால் யோகம் உண்டு. குரு பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

தடைக் கற்களை படிக்கற்களாக மாற்றும் ஆற்றல் குருவின் பார்வைக்கு இருப்பதால், இம்மாதம் ஓர் இனிய மாதமாகவே உங்களுக்கு அமையப் போகிறது. இல்லத்தில் எதிர்பார்த்தபடி சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். குரு பகவான் உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் வக்கிரம் பெற்றிருப்பது ஒரு வகைக்கு நன்மைதான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம், வக்கிரம் பெற்றிருப்பதால் திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். திடீர் திருப்பங்கள் நன்மை தரும் விதத்திலேயே அமையும். சுபச் செய்திகள் இல்லம் தேடி வந்து சேரும்.

தொழிலில் ஒத்துவராத பங்குதாரர்களை விலக்கிவிட்டு வளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொள்வீர்கள். 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், அஷ்டமத்தில் இருப்பதால் உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம். அதேநேரத்தில் பொருளாதாரப் பிரச்சினைகள் தீரும். தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டே இருக்கும்.

2இல் ராகு சுக்கிரனோடு இருப்பதால் குடும்ப விடயங்களை மற்றவர்களிடம் சொல்வதன் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். இடமாற்றம், வெளிநாட்டு யோகம் ஒருசிலருக்கு வரலாம். இம்மாதம் கண்டகச் சனியின் ஆதிக்கத்தாலும் அஷ்டமத்தில் செவ்வாய் கேதுவின் சஞ்சாரத்தாலும் பாதிப்புகள் ஏற்படாமலிருக்க அங்காரகப் பிரீதியும் சர்ப்ப சாந்திப் பரிகாரமும் சனிக்குரிய வழிபாடுகளையும் முறையாகச் செய்வது நல்லது. சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வரலாம். ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து அனுமனை வழிபட்டு வருவதன் மூலம் தடைகள் அகலும்.

கடக புதன் சஞ்சாரம்

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். தன ஸ்தானத்தில் விரயாதிபதி சுக்கிரனோடு அவர் இணைவதால் செலவு கூடும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள் வாங்குகின்ற யோகம் உண்டு. கட்டிய வீட்டைப் பழுதுபார்க்கும் வாய்ப்பு உருவாகும். குடும்பப் பெரியவர்களின் குறைகளைத் தீர்க்க முன்வருவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் எளிதில் கிடைக்கும்.

குரு வக்கிர நிவர்த்தி

ஜூலை 4 ஆம் திக்தி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகிறார். பலம்பெற்ற குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் மிகுந்த நன்மை கிடைக்கும். குறிப்பாக வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். கல்யாணக் கனவுகள் நனவாகும்.

சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5 ஆம் திகதி சிம்மத்திற்குச் சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டுவந்து சேர்ப்பர். ஒரு சிலருக்கு வாகனம் வாங்கும் யோகம் உருவாகும்.

மகர செவ்வாய் வக்கிரம்

ஜூலை 9 ஆம் திகதி மகரத்தில் உச்சம் பெற்ற செவ்வாய் வக்கிரம் பெறுகிறார். இதன் விளைவாக சொத்துகள் வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். உடன் பிறப்புகள் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர். கடன் சுமை குறையும்.

இம்மாதம் ஆதியந்தப் பிரபு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

குரு பார்வையால் குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். பணப் பற்றாக்குறை அகலும். மனதளவில் செய்ய நினைத்த காரியங்களை திருப்திகரமாக செய்து முடிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் கூடும். பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். வீடு மாற்றங்கள் விரும்பத்தக்கதாக அமையும். குழந்தைகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்து, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம். தாய்வழி ஒத்துழைப்பும் திருப்திகரமாக இருக்கும். அஷ்டமத்துச் செவ்வாய் ஆதிக்கத்தால் நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உருவாகலாம். ஆரம்பத்திலேயே கவனித்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி அமையும். சக பணியாளர்களை நம்பிச் செய்த காரியம் நல்ல விதமாக முடியும். நடராஜர் வழிபாடு நன்மையை வழங்கும்.






## இடம், வீடு வாங்கும் யோகம்!

விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிநாதன் சந்திரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு தனாதிபதி சூரியனும், விரயாதிபதி புதனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். வீடு வாங்கும் யோகம், மனை கட்டிக் குடியேற வேண்டுமென்ற யோகம் நிறைவேறும். ஒருசிலர் கட்டிய வீட்டைப் பழுது பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தால் அதற்கான வாய்ப்புக் கைகூடிவரும். பய்ணங்கள் அதிகரிக்கும் மாதமாக இந்தமாதம் உங்களுக்கு அமையப் போகிறது.

உங்கள் இராசியிலேயே ராகுவும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். இது கால சர்ப்ப தோஷமாகும். ராகு-கேதுக்கள் ஒவ்வொரு இராசியிலும் ஒன்றரை வருட காலங்கள் தங்கியிருந்து பலன் கொடுப்பார். அந்த ஒன்றரை வருடங்களில் முதல் பாதி முடிந்தால் பிற்பாதியில் நல்ல பலன்களைக் கொடுப்பார். இருப்பினும் ராகு-கேதுக்களுக்குரிய நாகசாந்திப் பரிகாரங்களை, அனுகூலம் தரும் தலங்களுக்குச் சென்று செய்து வந்தால் முன்னேற்றம் வந்து சேரும்.

சப்தம ஸ்தானத்தில் கேதுவோடு, உச்சம் பெற்ற செவ்வாய் இருக்கிறார். எனவே திருமணம் போன்ற சுபகாரியங்கள் முடிவடைந்தாலும் ஒரு சில பிரச்சினைகள் தலைதூக்கும். குறிப்பாக சொத்துகளாலும் சொந்தங்களாலும் ஒரு சிலருக்கு பிரச்சினை ஏற்படலாம். உடன்பிறப்புகளில் ஒரு சிலர் உங்கள் கருத்துகளை மறுக்கலாம். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவார்கள். இம்மாதம் உங்களுக்கு யோகம் செய்யும் செவ்வாய், வக்கிரம் பெறப் போகிறார். அதேநேரத்தில் சனியும் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகப் போகிறார்.

குருவின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு அதன் பார்வை பலத்தால் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இலாகா மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்துசேரும். பணி நிரந்தரம் பற்றிய தகவலும் வராமல் இருந்த சம்பளப் பாக்கிகள் வரும் சூழ்நிலையும் உருவாகும். இம்மாதம் நடராஜர் தரிசனத்தைக் கண்டுகளிப்பதன் மூலமும் வக்கிர கிரகங்களுக்குரிய வழிபாடுகளை செய்வதன் மூலமும் சிக்கல்களில் இருந்தும் சிரமங்களில் இருந்தும் விடுபட இயலும்.

கடக புதன் சஞ்சாரம்

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசியான உங்கள் இராசிக்கு புதன் செல்கிறார். வெற்றிகள் ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது வெற்றி வாய்ப்புகள் வீடுதேடிவரும். வியாபார விரோதங்கள் விலகும். நீண்டதூரப் பயணங்கள் பலன் தருவதாக அமையும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். உத்தியோகம் சம்பந்தப்பட்ட வகையில் வெளிநாடு செல்ல ஏதேனும் முயற்சிகள் செய்திருந்தால் அதில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

குரு வக்கிர நிவர்த்தி

ஜூலை 4 ஆம் திகதி துலா இராசியில் சஞ்சரிக்கும் குரு வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 6,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் அர்த்தாஷ்டம குருவாக இருந்து பலம் பெறுவதால், ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படத்தான் செய்யும். இருப்பினும் மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்ளலாம். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும்.

சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5 ஆம் திகதி சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். உடனிருப்பவர்களின் ஒத்துழைப்போடு உன்னதமான காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். கடமையில் இருந்த தொய்வு அகலும். கட்டடத் திறப்பு விழா, கடை திறப்பு விழாக்கள் நடைபெறும் வாய்ப்பு உண்டு.

மகர செவ்வாய் வக்கிரம்

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாய். அவர் உச்சம் பெற்றிருக்கும் பொழுது எடுக்கும் முயற்சிகள் எளிதில் வெற்றி கிடைக்கும். ஆனால் அதே சமயம் ஜூலை 9 ஆம் திகதி செவ்வாய் வக்கிரமடைகிறார். எனவே கொஞ்சம் தடைகளும் தாமதங்களும் வந்து சேரும். மடமடவென்று நடைபெற்ற காரியங்களில் ஒரு சில தடைப்பட்டு நிற்கலாம். அங்காரக வழிபாட்டினை முறையாக மேற்கொள்வது நல்லது.

இம்மாதம் வடக்கு நோக்கிய அம்மன் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருந்தாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. வீடு, இடம் வாங்கிக் குடியேறவேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும். தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். உடன்பிறப்புகள் உங்கள் எண்ணங்களைப் புரிந்துகொண்டு செயற்படுவர்.

உங்கள் கடன்சுமை குறையவும் அவர்கள் வழிவகுத்துக் கொடுப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். ஊர்மாற்றங்கள் பதவி உயர்வோடு கிடைக்கலாம். விரய ஸ்தானத்தை சனி பார்ப்பதால் அதற்குரிய பரிகாரங்களைச் செய்துகொள்வது நல்லது. குறிப்பாக ஆயிலியம் நட்சத்திரமன்று ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.

(தொடரும்)

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் 130 தோட்டாக்கள் பயன்படுத்தப்பட்டன

## சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் தகவல்

(தூத்துக்குடி)

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவத்தின்போது சுமார் 130 தோட்டாக்கள் வரை பயன்படுத்தப்பட்டுள்ளதாக சி.பி.சி.ஐ.டி பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தூத்துக்குடியில் கடந்த மாதம் 22ஆம் திகதி ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடக் கோரி பொது மக்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதில் 13 பேர் கொல்லப்பட்டார்கள். 100இற்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து தூத்துக்குடி தென்பாகம், வடபாகம், சிப்காட் பொலிஸ் நிலையங்களில் பதியப்பட்ட 5 வழக்குகள் சி.பி.சி.ஐ.டி பொலிஸாரிடம் மாற்றப்பட்டன. இதையடுத்து ஒவ்வொரு வழக்கிற்கும் ஒரு துணை பொலிஸ் அதிகாரி என 5 துணைப் பொலிஸ் அதிகாரிகள் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவினர் துப்பாக்கிச்சூடு தொடர்பான பல்வேறு ஆவணங்களை சேகரித்து வருகின்றனர். இந்த நிலையில் விசாரணையை துரிதப் படுத்துவதற்காக சி.பி.சி.ஐ.டி பொலிஸ் அதிகாரி பிரவீன்குமார் அபிநவ் கடந்த 2 நாட்களுக்கு முன்பு தூத்துக்குடிக்கு வந்தார்.

சி.பி.சி.ஐ.டிபொலிஸாரால் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள், ஆதாரங்கள்மற்றும்பெறப்பட்டுள்ள வாக்குமூலங்கள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார். சம்பவம் நடந்த இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டார். கடந்த 2 நாட்களாக விசாரணை அதிகாரிகளான டி.எஸ்.பிக்களிடம் பல்வேறு கட்ட கலந்தாய்வில் ஈடுபட்டனர்.

விசாரணையின்போது துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் குறித்த முழு விபரப் பட்டியல், காயமடைந்தவர் பட்டியல், பாதிக்கப்பட்டவர்கள் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட்டன. மேலும் வன்முறையில் சேதமடைந்த சொத்துக்களின் பட்டியல், தீ வைத்து எரிக்கப்பட்ட மற்றும் கல்வீசி சேதத்திற்குள்ளான வாகனங்கள் எத்தனை, அவற்றின் உரிமையாளர் யார்? என்பன தொடர்பான விபரங்களையும் அவர் கேட்டறிந்தார்.

அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் நேற்று முன்தினம் மாலை பொலிஸ் அதிகாரி பிரவீன்குமார் அபிநவ் மதுரைக்கு புறப்பட்டு சென்றார். அங்கு



அரசு தரப்பு சட்டத்தரணியிடம் வழக்கு விசாரணை குறித்து ஆலோசனை நடத்தினார். பின்னர் அவர் தூத்துக்குடிக்கு திரும்பி வந்து விசாரணையில்ஈடுபட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூடு சம்பவத்தின் போது சுமார் 130 தோட்டாக்கள் வரை பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சம்பவ இடத்தில் சி.பி.சி.ஐ.டி பொலிஸார் ஆய்வு செய்து சில தோட்டாக்களை கைப்பற்றியுள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்திய துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை இன்னும் சி.பி.சி.ஐ.டி. பொலிஸாரிடம் மாவட்ட பொலிஸார் ஒப்படைக்கவில்லை.

அவற்றை பெறுவதற்கான முயற்சியில் சி.பி.சி.ஐ.டி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். அவற்றை பெற்ற பின்னர் ஆய்வுகூடத்தகவலை அனுப்பி உண்மை கண்டறியும் சோதனைகளை நடத்துகின்றனர். அதில் தான் பொலிஸார் விதிமுறை மீறலில் ஈடுபட்டுள்ளனரா? என்பது தெளிவாகும் என்றுசிபிசிஐடிபொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (7)

# சத்தீஸ்காரில் துப்பாக்கிச்சமர் 3 நக்சலைட்டுகள் உயிரிழப்பு

(ராய்ப்பூர்)

சத்தீஸ்கர் மாநிலத்தின் சுக்மா மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் நேற்று நடந்த துப்பாக்கிச் சண்டையில் மூன்று நக்சலைட்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலாதிக்கவாதிகளின் அடக்குமுறைகளால் பாதிக்கப்படும் கீழ்த்தட்டு மக்களில் சிலர் இருவர்க்கத்துக்கும் இடையிலான இடைவெளியை குறைப்பதற்கு ஆயுத வன்முறையே சிறந்த தீர்வென கருதுகின்றனர்.

பல்லாண்டு காலமாக அரசிடம் போராடி பெறமுடியாத சில சலுகைகளையும் ஆயுதப் புரட்சியின்மூலம் அடைந்து விட முடியும் என கருதும் இவர்கள் சத்தீஸ்கர், ஒடிசா, ஆந்திரா, மணிப்பூர் உள்ளிட்ட சில மாநிலங்களில் நக்சலைட்களாகவும், மாவோயிஸ்ட்களாகவும், நாடெங்கிலும் உள்ள காடு, மலைகளில் பதுங்கி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களை வேட்டையாட தனிப்படைப் பிரிவினர் தொடர்ந்தும் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் படையினருக்கு துணையாக மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினரும் உடன் செல்வதுண்டு.

இந்நிலையில், சத்தீஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்ட காட்டுப் பகுதிக்குள் நேற்று நடைபெற்ற தேடுதல் வேட்டையில் நக்சலைட் இயக்கத்தை சேர்ந்த மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

தலைநகர் ராய்ப்பூரில் இருந்து சுமார் 500 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கட்டாபாட் மற்றும் டோக்கான்பல்லி இடையிலான காட்டுப்பகுதியில் சில நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக இரகசியத்தகவல்கிடைத்தது. அப்பகுதியில் நேற்று முன்தினம் இரவில் இருந்து நக்சல் ஒழிப்பு படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, காட்டுக்குள் நக்சலைட்கள் ரோந்துப் படையினர் மீது துப்பாக்கிகளால் சுட்டு அதிரடியாக தாக்குதல் நடத்தினர்.

இருதரப்பினருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மூன்று நக்சலைட்கள் கொல்லப்பட்டனர்.

எஞ்சியிருந்த நக்சலைட்கள் தப்பியோடி விட்டனர். (7)

# மசூதியில் கத்திக்குத்து! இருவர் உயிரிழப்பு

## பயங்கரவாதத்தின் கூறு என பொலிஸார் தெரிவிப்பு

(ஜோகன்னஸ்பர்க்)

தென்னாபிரிக்காவில் மசூதியில் தொழுகை நேரத்தில் கத்தியுடன் நுழைந்த மர்ம நபர் நிகழ்த்திய தாக்குதலில் 2 பேர் இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.



தென்னாபிரிக்காவில் மால்மேஸ்பரி நகரில் ஒரு மசூதி உள்ளது. அந்த மசூதியில் நேற்று தொழுகை நேரத்தில் கையில் கத்தியுடன் நுழைந்த ஒரு நபர், அங்கே தன் கண் எதிரே பட்டவர்களை எல்லாம் சரமாரியாக குத்திச் சாய்த்தார்.

இதனால்மசூதியில்தொழுகைக்கு கூடி இருந்தவர்கள் அலறியடித்தவாறு நாலாபுறமும் ஓட்டம் பிடித்தனர்.

இந்த தாக்குதலில் 2 பேர் இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

இது குறித்த தகவல் அறிந்ததும் பொலிஸார் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் கத்தியால் குத்திக் கொண்டிருந்த நபரை உடனடியாக சரணடையுமாறு கூறினர்.

ஆனால்அந்த நபர் அதற்கு செவிசாய்க்கவில்லை. இதையடுத்து அவரை பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த பொலிஸார், இது பயங்கரவாதத்தின் கூறு என கூறினர். இந்த சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (7)

# எனது மகனை விடுவிக்காவிட்டால் கருணைக்கொலை செய்து விடுங்கள்

## கதறும் தாய் அற்புதம்மாள்

(சென்னை)

தனது மகன் பேரறிவாளனை விடுவிக்காவிட்டால் கருணைக் கொலை செய்யுங்கள் என, தாயார் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார்.

பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுவிக்கக் கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை,ஜனாதிபதி ராம் நாத்கோவிந் நிராகரித்துள்ள நிலையில், நேற்று ஊடகமொன்றிற்கு வழங்கிய கருத்தில் அற்புதம்மாள் மேற்படி தெரிவித்துள்ளார்.



எனது மகனை சிறையில் அடைத்து வைத்து தினமும் சாகடிப்பதை விட, கருணைக்கொலை செய்து விடுங்கள் எனக் கதறியுள்ளார்.

மேலும் மகனை விடுவிக்க முடியாதென கூறும் மத்திய அரசிடம், மகனை கருணைக்கொலை செய்து விடுமாறு கூறி மனுவளிக்க உள்ளதாகவும், அற்புதம்மாள கண்ணீருடன் கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில், குற்றவாளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பேரறிவாளன், சாந்தன், நளினி உள்ளிட்ட ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கடந்த 27 ஆண்டுகளாக சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் நிலையில், இந்திய அரசியலமைப்பின் பிரிவு 161 ஐ பயன்படுத்தி அவர்களை விடுதலை செய்யுமாறும், தமிழக அரச தரப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்நிலையில்இது தொடர்பில் ஏற்கனவே மத்திய அரசிடம் கையளிக்கப்பட்ட இரு கடிதங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்ததோடு, மீண்டும் ஜனாதிபதியின் கவனத்திற்கு தமிழக அரசால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் தனது மகனை கருணைக் கொலை செய்துவிடுமாறு, அற்புதம்மாள் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ட்ரம்பின் வாக்குறுதி நிறைவேற்றம்

# அமெரிக்க இராணுவ ஒத்திகை காலவரையறையின்றி நிறுத்தம்

## இராணுவ தலைமையக அதிகாரிகள் அறிவிப்பு



(வோஷிங்டன்)

கொரிய தீபகற்பத்தில் இராணுவ ஒத்திகை காலவரையறையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ தலைமையக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எலியும் பூனையுமாக கடந்த பல ஆண்டுகளாக இருந்த அமெரிக்கா - வட கொரியா அண்மைய சிங்கப்பூர் சந்திப்புக்கு பின்னர் நண்பர்களாக மாறியுள்ளது. ஏவுகணை மனிதர் என ட்ரம்ப்பால் விமர்சிக்கப்பட்ட வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் கடந்த செவ்வாய்க் கிழமை ட்ரம்பை சந்தித்து பேசினார். இரு ஜனாதிபதிகளின் சந்திப்புக்கு பின்னர் சில ஒப்பந்தங்கள் இருதரப்புக்குமிடையே கையெழுத்தானது.

அதில் வடகொரியா அணு ஆயுதங்களை முழுமையாக அழிப்பது, வட கொரியா மீதான பொருளாதார தடையை அமெரிக்கா நீக்குவது உள்ளிட்ட அம்சங்கள் அடங்கும் வரலாற்று சிறப்புமிக்க இந்த சந்திப்புக்கு உலக நாடுகள் அனைத்தும் வரவேற்பை தெரிவித்தன.

இந்நிலையில், கொரிய தீபகற்பத்தில் அமெரிக்கா அடிக்கடி நடத்தி வந்த இராணுவ ஒத்திகைகள் காலவரையறையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு இராணுவ உயரதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

ட்ரம்ப் - கிம் சந்திப்புக்கு பிறகு இருநாட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்த அறிவிப்பு இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். கொரிய தீபகற்பத்தில் சுமார் 3 லட்சம் அமெரிக்க இராணுவ வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் பயங்கரவாத இயக்கத்தின் தலைவன் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் செயற்படும் தெரிக், தலிபான் பயங்கரவாத. இயக்கத்தின் தலைவன் முல்லா பாஸல் உல்லா அமெரிக்க இராணுவம் நடத்திய ட்ரோன் தாக்குதலில் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் உள்ள குனார் பகுதியில் தெரிக், தலிபான் பயங்கரவாத இயக்கம் செயற்பட்டு வருகிறது. பாகிஸ்தான் தலிபான் என்றழைக்கப்படும் இந்த இயக்கத்தின் தலைவனாக தற்போது இருக்கக்கூடிய முல்லா பாஸல் உல்லா வசிக்கும் இடத்தை குறிவைத்து நேற்று அமெரிக்க இராணுவம் ட்ரோன் (ஆளில்லா விமானம்) தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் முல்லா பாஸல் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்ட முல்லா பாஸல் தலைக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. பாகிஸ்தானின் பெஷாவரில் இருக்கும் இராணுவ பாடசாலையில் கடந்த 2014ஆம் ஆண்டு இந்த இயக்கத்தினர் நடத்திய தாக்குதலில் 151 மாணவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## வெனிசுவெலா துணை ஜனாதிபதியாக டெல்சி தெரிவு

(கராகஸ்)



வெனிசுவெலா நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, அந்நாட்டின் துணை ஜனாதிபதியாக டெல்சி ரொட்ரிகஸ் என்பவரை தேர்வு செய்துள்ளார்.

வெனிசுலா நாட்டில் நிக்கோலஸ் மதுரோ ஜனாதிபதியாக கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து பதவி வகித்தார். அண்மையில் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் முறைகேடு நடப்பதாக கூறி முக்கிய எதிர்க்கட்சிகள் தேர்தலை புறக்கணித்தன. இதையடுத்து அதிக சிரமம் இன்றி நிக்கோலஸ் மதுரோ மீண்டும் ஜனாதிபதி பதவியை கைப்பற்றினார். இதற்கு அந்நாட்டு எதிர்க்கட்சிகளும், அமெரிக்கா போன்ற நாடுகளும் கண்டனம் தெரிவித்திருந்தன.

மதுரோவின் வெற்றி ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என அமெரிக்கா அறிக்கை வெளியிட்டது. மேலும், மதுரோவின் வெற்றியைத் தொடர்ந்து வெனிசுவெலா மீது புதிய பொருளாதார தடையையும் அமெரிக்கா விதித்தது.

இருப்பினும், அந்நாட்டின் ஜனாதிபதியாக நிக்கோலஸ் மதுரோ தொடர்ந்து இரண்டாவது முறையாக பதவியேற்றார். இந்நிலையில், அமைச்சரவையில் மதுரோ சில மாற்றங்கள் செய்துள்ளார்.

அதன்படி அந்நாட்டின் துணை ஜனாதிபதியாக டெல்சி ரொட்ரிகஸ் என்பவரை நிக்கோலஸ் மதுரோ தேர்வு செய்துள்ளார். டெல்சி அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சராகவும் இருந்துள்ளார். (7)

## ஜோர்ஜியாவின் பிரதமர் இராஜினாமா



(அட்லான்டா)

ஜோர்ஜிய நாட்டின் பிரதமர் ஜோர்ஜிக்விரிகாஷ்விலி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

முன்னாள் பிரதமரும் ஆளும் கட்சியின் தலைவருமான பிட்ஸினா ஜவானிஷ்விலி - உடனான கருத்து வேறுபாட்டை தொடர்ந்து இவர் கடந்த புதன்கிழமை பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனது பதவி விலகல் குறித்து தெரிவித்த அவர், ஆளும் கட்சியின் தலைவருடன் சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நான் அனைவருடனும் இணைந்து பணியாற்றி வருகிறேன். எனவே, பிறரது மன நிலையை என்னால் நன்கு உணர முடியும். அதனாலேயே நான் இந்த முடிவை எடுத்துள்ளேன். அதன்படி, உடனடியாக எனது பதவியை இராஜினாமா செய்கிறேன் எனக் கூறியுள்ளார்.

50 வயதான க்விரிகாஷ்விலி, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஜோர்ஜிய பிரதமராக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## வட கொரியா மீதான பொருளாதார தடைகளை நீக்க ஐ.நா.சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ரஷ்ய தூதுவர் வலியுறுத்து

(மொஸ்கோ)

வடகொரியா மீதான பொருளாதார தடைகளை நீக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா. சபைக்கான ரஷ்ய தூதர் தூதுவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி வடகொரியா அண்மைக்காலமாக பலமுறை அணு குண்டுகளையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் பல ஏவுகணைகளையும் பரிசோதித்தது. மேலும், ஐதரசன் குண்டு பரிசோதனையிலும் முழுமையான வெற்றி பெற்றதாகவும் அந்நாடு தெரிவித்திருந்தது.

இதனால், ஆத்திரமடைந்த அமெரிக்கா, ஐ.நா. பாதுகாப்பு சபையில் வடகொரியாவுக்கு எதிராக கடும் பொருளாதார தடைகள் அடங்கிய தீர்மானத்தை கொண்டுவந்து நிறைவேற்றியது.

வடகொரியாவின் நிலக்கரி, ஈயம் (கனிமப்பொருள்) மற்றும் கடல் உணவுகள் ஏற்றுமதி என வடகொரியா மீது கடுமையான பொருளாதார தடைகளை உள்ளடக்கிய தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தாக்கல் செய்து, ரஷ்யா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றியது.

கிம் ஜாங் உன் உடனான சந்திப்பின் போது, நான் பொருளாதார தடைகளை நீக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். ஆனால், அணு ஆயுதங்களை முற்றிலுமாக வடகொரியா அழித்த பின்னரே தடை நீக்கம் பற்றி முடிவு செய்யப்படும். எனவே, தற்போதைக்கு இந்த தடைகள் தொடரும் என ட்ரம்ப் கூறியிருந்தார்.


இந்நிலையில், இது குறித்து ஐ.நா.சபைக்கான ரஷ்ய தூதர் வாசிலி நெபென்சியா பேசுகையில், எதிரும் புதிருமாக இருந்த இருநாட்டு தலைவர்கள் சந்தித்து பேசியதில் மகிழ்ச்சி. வடகொரியா அணு ஆயுதங்களை கைவிட முடிவு செய்துள்ளது.

இதை ஊக்கப்படுத்தும் விதமாக அந்நாட்டின் மீதான பொருளாதார தடைகளை நீக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடகொரியா மீதான பொருளாதார தடைகளை நீக்கும் விவகாரத்தில் ரஷ்யா தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என தெரிவித்துள்ளார். (7)

## புறா தலை கொண்ட விசித்திர மீன்

### சீனாவில் கண்டுபிடிப்பு



(பீஜிங்)

சீனாவின் கியுஸ் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புறா தலையுடன் விசித்திரமான தோற்றம் கொண்ட மீனின் புகைப்படம் இணையத் தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

சீனாவின் கியுஸ் மாகாணத்தில் உள்ள குயாங் நகரில் கடந்த 5ஆம் திகதி வித்தியாசமான மீன் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மீனவர் ஒருவர் வலையில் சிக்கிய மீனைக் கண்ட அவர் உடனடியாக அதுகுறித்து அங்கிருந்தவர்களிடம் கூறியுள்ளார். இதனால் அங்கிருந்த மக்கள் இந்த விசித்திர மீனை பார்ப்பதற்கு அலைமோதியுள்ளனர்.

நன்னீரிலே வைக்காமலே வெளியில் வைத்து பார்க்கப்பட்டதால், இந்த மீன் சிறிது நேரத்திலே உயிரிழந்துள்ளது. இருப்பினும் இந்த வகை விசித்திர மீனைக் கண்ட அப்பகுதி மக்கள் வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்து சமூகவலைத்தளங்களில் வெளியிட்டுள்ளனர்.

கிராஸ்கார்ப் என்றழைக்கப்படும் இந்த வகை மீன்கள் சுத்தமான தண்ணீரில் மட்டுமே வாழும் தன்மைகொண்டது எனவும், ஆசியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் தான் இது காணப்படும் என்றும் கூறப்படுகிறது. (7)

## பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுவிக்கக் கோரிய மனு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தால் நிராகரிப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 27 வருடங்களாக சிறைத் தண்டனையை அனுபவித்துவரும் பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 7 பேரை விடுவிக்கக் கோரி, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்திடம் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அவர் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக அரசு தாக்கல் செய்த மனுவே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகத்தின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

அதாவது உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனைப்படியே ஜனாதிபதி முடிவெடுக்க முடியும். எனவே உள்துறை அமைச்சகத்தின் கோரிக்கையின் பேரிலே ஜனாதிபதி மனுவை நிராகரித்திருக்கக் கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் பிரதமர் கொலை குற்றவாளிகள் எந்தச்சூழலிலும் சுதந்திரமாக நடமாட முடியாதென, உள்துறை அமைச்சக மூத்த அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி உட்பட 7 பேர் கடந்த 27 ஆண்டுகளுக்கு மேலாக தண்டனை கைதிகளாக உள்ளனர்.

கருணை அடிப்படையில் இவர்களை விடுவிக்க வேண்டுமென தமிழக அரசு, மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு கடந்த ஆண்டுகளில் இரண்டு முறை கடிதம் எழுதியிருந்தது. ஆனால், இரண்டு கடிதங்களும் நிராகரிக்கப்பட்டன.

இந்நிலையில் 7 பேரை விடுவிக்க வேண்டுமென்று ஜனாதிபதிக்கு தமிழக அரசு அனுப்பியுள்ள மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)




# நேர்மையாக வாழ்வோம்!



ஒரு ஊரில் அருகருகே இரண்டு பாற்காரிகள் வசித்தனர். ஒருத்தி பணக்காரி. ஐந்து பசுக்கள் வைத்திருந்தாள். ஆடம்பரமாக செலவழிப்பாள். இன்னொருத்தி ஒரே ஒரு பசு தான் வைத்திருந்தாள். அது தந்த பாலை விற்றுக் கிடைக்கும் பணத்தில் சிக்கனமாக குடும்பத்தை நடத்தினாள்.

பணக்காரிக்கு அடுத்தவர் பொருளைக் கவர்வதில் அதீத ஆசை. ஏழை பாற்காரியிடம், "என் மாடுகள் கறக்கும் பால் போதவில்லை. நீ தினமும் எனக்குக் கொஞ்சம் பால் கொடு. நீ கேட்கும் போது மொத்தமாக திருப்பித் தருகிறேன்" என்றாள்.

அந்த ஏழை பாற்காரி இரக்கமுள்ளவள்.

"பாவம்! பணக்காரிக்கு பால் பற்றாக்குறை போலும்! அதனால் தான் கேட்கிறாள்" என்று நினைத்து, தினமும் பால் கொடுத்து வந்தாள். ஒருநாள் ஏழை பாற்காரியின் மாடு இறந்து விட்டது. அவள் பணக்காரியிடம் போய், "அக்கா! என் பசு இறந்து விட்டது. இதுவரை நான் உங்களுக்கு ஐம்பது படி பால் தந்துள்ளேன். அதை தினமும் ஐந்து படி வீதம் திருப்பித் தந்தால், அதில் கிடைக்கும் பணத்தில் பத்து நாள் குடும்பச் செலவை சமாளித்து விடுவேன். புதிய பசுவும் அதற்குள் வாங்கி விடுவன்" என்றாள்.

பணக்காரி தன் ஏமாற்று வித்தையை அவளிடம் காட்டினாள். "நான் உன்னிடம் கடனே வாங்கவில்லை" என்று அடித்துச் சொல்லி விட்டாள். வருத்தப்பட்ட ஏழை பாற்காரி நீதிமன்றம் சென்று புகார் செய்தாள். நீதிபதி இருவரையும் விசாரித்தார். ஏழையிடம் உண்மை இருப்பது அவருக்கு புரிந்து விட்டது.

இதை நிரூபிக்க ஒரு தேர்வு வைத்தார்.

"நீதிமன்றத்திற்கு வெளியே பத்து செம்பு தண்ணீர் இருக்கிறது. நீங்கள் இருவரும் ஆளுக்கு ஐந்து செம்பு தண்ணீரை எடுத்து கால்களை சுத்தம் செய்து வாருங்கள்" என்று உத்தரவு போட்டார். பணக்காரி ஐந்து செம்பு தண்ணீரையும் கடமைக்கு காலில் ஊற்றி விட்டு உள்ளே வந்தாள். ஏழையோ ஒரு செம்பு தண்ணீரிலேயே, காலை மிகச் சுத்தமாக கழுவி வந்தாள். நீதிபதி தீர்ப்பை வாசித்தார்.

"இந்த ஏழைப்பெண் சிக்கனமானவள் என்பது அவளது செயல் மூலமே புரிந்து விட்டது. பணக்காரியோ ஆடம்பரமாக செலவழிப்பவள் என்பது அவள் ஐந்து செம்பு தண்ணீரையும் காலி செய்தது மட்டுமில்லாமல், கால்களும் சுத்தமாகவில்லை என்பதில் இருந்து புரிகிறது. பணக்காரி தண்டனைக்கு உரியவள்" என்றார்.

ஒரு நபரின் குணத்தை அவரது செயல்களில் வெளிப்படுகின்ற ஒழுக்கத்தைக் கொண்டே கணித்து விடலாம். ஒழுக்கம் வேண்டுமானால் ஆன்மீகத்தில் நல்ல பயிற்சி வேண்டும். நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுத்தால் ஒழுக்கம் தானாக வந்து விடும்.

## 2018.06 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 632-மூன்றாம் யாசுடெகெர்டு சாசானியப் பேரரசின் மன்னராக முடிசூடினார். இவரே சாசானிய வம்சத்தின் கடைசி அரசராவார்.
- 1487-ரோசாப்பூப் போர்களின் கடைசிப் போர் ஸ்டோக் ஃபீல்டு என்ற இடத்தில் இடம் பெற்றது.
- 1586-ஸ்கொட்லாந்தின் முதலாம் மேரி, இரண்டாம் பிலைப்பைத் தனது முடிக்குரிய வாரிசாக அறிவித்தார்.
- 1779-எசுப்பானியா பெரிய பிரித்தானியா மீது போரை அறிவித்தது. ஜிப்ரால்ட்டர் மீதான போர் ஆரம்பமானது.
- 1883-இங்கிலாந்தில் விக்டோரியா நாடக அரங்கில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 183 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1911-ஐ.பி.எம். நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1958-1956 அங்கேரியப் புரட்சியில் ஈடுபட்ட தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- 1976-தென்னாபிரிக்காவில் சுவெட்டோவில் 15,000 கறுப்பின மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 566 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- 2012-ஐக்கிய அமெரிக்க வான்படையின் தானியங்கி போயிங் எக்ஸ்-37 விண்ணூர்தி 469-நாள் பயணத்தின் பின்னர் பூமி திரும்பியது.

### பிறப்புகள்

- 1723-ஆடம் சிமித், இசுக்கொட்டிய மெய்யியலாளர், பொருளியலாளர் (இ. 1790)
- 1893-கருமுத்து தியாகராஜன் செட்டியார், தமிழகத் தொழிலதிபர் (இ. 1974)
- 1896-கோட்டா ராமசுவாமி, இந்தியத் துடுப்பாட்டக்காரரர் (இ. 1990)
- 1902-பார்பரா மெக்லின்டாக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க மருத்துவர் (இ. 1992)
- 1917-கேத்தரின் கிரகாம், அமெரிக்கப் பதிப்பாளர் (இ. 2001)
- 1921-அலெக்சாந்தர் சுதக்கோவ், சோவியத் உருசிய இயற்பியலாளர் (இ. 2001)
- 1924-டி. ஆர். மகாலிங்கம், தென்னிந்தியத் திரைப்பட நடிகர், பாடகர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர் (இ. 1978)
- 1930-வில்மோஸ் சிக்மண்ட், அங்கேரிய-அமெரிக்க ஒளிப்பதிவாளர், தயாரிப்பாளர் (இ. 2016)
- 1934-குமாரி கமலா, தென்னிந்திய நடிகையும், பரதநாட்டியக் கலைஞர், பாடகி
- 1937-எரிக் செகல், அமெரிக்க எழுத்தாளர் (இ. 2010)
- 1940-என். சந்தோசு எக்டே, இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி
- 1950-மிதுன் சக்கரவர்த்தி, இந்திய நடிகர், அரசியல்வாதி
- 1958-அபு சயாப், அவுஸ்திரேலிய போர்வீரர், இசைக்கலைஞர்
- 1971-டூப்பாக் ஷகூர், அமெரிக்க ராப் இசைக் கலைஞர், தயாரிப்பாளர் (இ. 1996)
- 1986-அஞ்சலி, தென்னிந்திய நடிகை

### இறப்புகள்

- 1925-சித்தரஞ்சன் தாஸ், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி. 1870)
- 1940-யோசப் மைசிட்டர், லூயி பாஸ்டர் கண்டுபிடித்த விசர்நாய்க் கடி தடுப்பூசி மருந்தை தன் மேல் செலுத்தி சோதனை செய்த முதலாவது நபர் (பி. 1876)
- 1944-பிரபுல்ல சந்திரராய், வங்கக் கல்வியாளர், வேதியியலாளர், சமூக சேவையாளர் (பி. 1861)
- 1977-வெர்னர் வான் பிரவுன், செருமானிய-அமெரிக்க இயற்பியலாளர், பொறியியலாளர் (பி. 1912)
- 2015-சார்லசு கோர்ரியா, இந்தியக் கட்டடக் கலைஞர் (பி. 1930)
- 2016-எலன் ஜோ காக்சு, ஆங்கிலேய அரசியல்வாதி (பி. 1974)

### சிறப்பு நாள்

- பொறியாளர் தினம் (ஆர்ஜென்டீனா)
- தந்தையர் தினம் (சீசெல்ஸ்)
- இளைஞர் நாள் (தென்னாபிரிக்கா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 200 | 95 | 160 | 180 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 280 | 250 | 160 |
| தக்காளி | 250 | 300 | 150 | 300 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 180 | 160 | 60 | 160 | 120 |
| கரட் | 250 | 400 | 200 | 400 | 300 |
| பூசணி | 50 | 40 | 20 | 40 | 35 |
| புடோல் | 100 | 120 | 70 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 50 | 35 | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 100 | 140 | 130 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 120 | 100 |
| பாகற்காய் | 300 | 510 | 150 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 70 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 120 | 65 | 100 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 | 160 | 180 |
| லீக்ஸ் | 300 | 400 | 210 | 400 | 200 |
| பீற்றூட் | 140 | 120 | 60 | 160 | 100 |
| கறிமிளகாய் | 200 | 400 | 70 | 240 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 200 | 290 | 300 | 250 |
| போஞ்சி | 300 | 400 | — | 300 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | — | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 60 | 40 | 40 | 40 | 50 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-80 | 25-60 | 50-70 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | — | 200 | 100 |
| வெங்காயப்பூ | 300 | 350 | — | 280 | 250 |
| முள்ளங்கி | 80 | 150 | 40 | 160 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 100 | 100 |

எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முன்னாள் போராளிகளுக்கு உதவினால் அது புலிகளுக்கு உதவுவதாமோ!

முன்னாள் போராளிகளுக்கு உதவி செய்வது தொடர்பில் புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அமைச்சரவைக்கு முன்வைத்த பத்திரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.

முன்னாள் போராளிகளுக்கு உதவுவது விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாக அமையுமென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்துக் கூறியிருப்பது தமிழ் மக்களை கடுமையாக வேதனைப்படுத்தியுள்ளது.

முன்னாள் போராளிகள் என்போர் அரசாங்கத்தினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் தவிர, நடந்து முடிந்த யுத்தத்தால் அவர்கள் உடல், உள ரீதியில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலாக வேலைவாய்ப்பைப் பெறுவதும் அவர்களைப் பொறுத்தவரை முடியாத காரியமாக உள்ளது.

இந்நிலையில் அரசாங்கம் உதவி செய்தால் மட்டுமே அவர்களின் சீவனோபாயம் சாத்தியமாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், முன்னாள் பேராளிகளுக்கு உதவி செய்தால் அது விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாக அமையும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பது அடிப்படையில் மனிதாபிமானமற்றது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருந்ததுடன் ஒரு நல்ல மனிதர் என்ற அபிப்பிராயத்தையும் கொண்டிருந்தனர்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் புறந்தள்ளி பிரதமர் ரணிலுடனும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தமை ஜனாதிபதி மைத்திரிக்கு தீராத ஆத்திரத்தை ஏற்படுத்தியதென்பது உண்மை.

நல்லாட்சியுடன் இணைந்து சென்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்பதாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரியுடனும் பிரதமர் ரணிலுடனும் சமமான உறவைப் பேணியிருக்க வேண்டும்.

ஆனால் கூட்டமைப்பினர் தங்களின் சொந்த இலாபம் கருதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனேயே தங்களை இணைத்துக் கொண்டு அவரை முழுமையாக நம்பினர்.

கூட்டமைப்பின் இத்தகைய போக்கு பொருத்தமற்ற இராஜதந்திரம் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலுக்காக தமிழ் மக்களை வஞ்சிக்க நினைப்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழகல்ல.

முன்னாள் போராளிகளுக்கு உதவுவது அரசாங்கத்தின் கடமை. தனித மனித உரிமைகளைப் பாதுகாப்பது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது என்ற அடிப்படையில் சிந்திக்க வேண்டிய விடயங்களை அப்படியே தள்ளிவிடுவது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

முன்னாள் போராளிகளுக்கு உதவுவது விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாக அமையும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருதுவதால்தானோ தமிழனாகிய ஆனந்த சுதாகரனை இன்னமும் விடுதலை செய்யாமல் ஜனாதிபதி இருக்கிறார் என்று நினைக்க வேண்டியுள்ளது.

## வவுனியா பேருந்து நிலையத்தில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து காலி நோக்கி இ.போ.ச பேருந்தில் கஞ்சா கடத்துவதாக வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற நபரின் பயணப் பொதியை சோதனையிட்ட சமயத்தில் அவரின் பயணப் பையிலிருந்து ஒரு கிலோ 752 கிராம் கேரளக் கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியதுடன், அலுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய சந்தேகநபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (2-281)

## குறைவற்ற வாழ்வுதரும் புவனேஸ்வரி...



விடிவெள்ளி எனவாகி அரியாலை
வடமேற்கின் வெட்டுக்குளத் தலம்மீதில்
நெடிதுயர்ந்த இத்திமர நிழல்தேடி
இருந்திட்ட புவனேசு வரியாளை
நொடியேனும் மறவாதார் துயர்போகும்
நொந்தவர்க்கு அவருடைய நோய்தீரும்
கொடியேறும் திருக்காட்சி காண்போர்க்குக்
குறையேதும் இருக்காது அவர்வாழ்வில்

சின்னையா சிவபாலன், கோண்டாவில்.

அரியாலை வடமேற்கு வெட்டுக்குளம் திருவருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் கோவிலின் இந்த ஆண்டுக்கான பெருந்திருவிழா 16.06.2018 இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இதனை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது.

## வவுனியாவில் டெங்குநோய்த் தாக்கம் இதுவரையில் ஐந்துபேர் இனங்காணல்

### நுளம்புக் குடம்பிகள் இருப்பின் சட்ட நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

வவுனியா நகர்ப் பகுதியில் அண்மையில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதன்காரணமாக 5 இற்கும மேற்பட்ட நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாகவும் வவுனியா சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, வவுனியா நகரை அண்டிய பகுதிகளான தேக்கவத்தை, வெளிவட்ட வீதி, கற்குழி ஆகிய இடங்களில் இருந்து 5 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகள் உள்ளக தொற்று என இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து குறித்த பகுதிகளில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் இருந்துவருவதை பூச்சியியலாளர்கள் ஆய்வின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் நுளம்புக் குடம்பகளை இல்லாதொழிப்பதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஆலோசனைகளைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதற்கமைய தமது இருப்பிடங்களை சுத்தபடுத்தி சிரமதானம் மேற்கொள்ளுமாறும் குறித்த பகுதிகளில் இனிவரும் காலங்களில் இவ்வாறான டெங்கு நுளம்புக்குடம்பிகள் இனங் காணப்பட்டால் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் அவ் வீட்டின் உரிமையாள்ருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன் வவுனியாவில் கடந்த 2009ஆம் ஆண்டு குறித்த பகுதிகளிலிருந்தே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-281)

## புதையலைக் கண்டறியும் அதிநவீன ஸ்கானர் கைப்பற்று

### நொச்சிமோட்டை பாலத்தருகில் சம்பவம்

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ9 வீதியில் உள்ள நொச்சிமோட்டைப் பாலத்திற்கு அண்மையாக சந்தேகத்திற்கிடமாகப் பயணித்த சொகுசுக் கார் ஒன்றை அதிரடிப் படையினர் தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது புதையல் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்கும் அதி நவீன ஸ்கானர் ஒன்றைக் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் பேரில் மோட்டார் காரில் பயணித்த நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்வ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, ஏ9 வீதியில் வவுனியா நொச்சி மோட்டைப் பாலத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த அதி சொகுசு மோட்டார் கார் ஒன்றினை நிறுத்துமாறு சிறப்பு அதிரடிப் படையினர் சமிக்ஞை விடுத்த போதும் மோட்டார் காரினை நிறுத்தாமல் தொடர்ந்து பயணித்ததை அடுத்து அதனைத் துரத்திச் சென்று வழிமறித்த அதிரடிப் படையினர் சோதனை மேற்கொண்டபோது மோட்டார் காரின் பின் பெட்டகத்தில் நிலத்தடியில் இருக்கும் புதையலைக் கண்டுபிடிக்கும் அதிநவீன வசதிகளைக் கொண்ட ஸ்கானர் ஒன்றையும் அதனைக் கடத்திச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் காரினையும் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் அதில் பயணித்த தென்பகுதியைச் சேர்ந்த நான்கு பேரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் கைதான சந்தேக நபர்களை வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததையடுத்து கைதான சந்தேக நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை தடயப் பொருட்களுடன் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(2-15-250-281)

சாவகச்சேரியில் விபத்து

## தந்தை, மகன் படுகாயம்

(சாவகச்சேரி)

யாழ். சாவகச்சேரி நகர் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தந்தை மற்றும் மகன் ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

குறித்து இருவரும் மட்டுவில் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்கள்யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- அடக்கப்படாத மனமும், தீயநெறியில் செல்லும் குணமும் நம்மை எப்போதும் கீழ்நோக்கியே இழுக்கும். ஆனால், அடங்கிய மனம் நமக்கு விடுதலை அளிக்கும்.
- உலக நன்மைக்காக உங்களிடம் உள்ள அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராய் இருங்கள்.
- கள்ளம் கபடம் இல்லாத ஒழுக்கமுள்ள நாத்திகன், வஞ்சகனைக் காட்டிலும் சிறந்தவன்.
- இதயம் பரந்து விரிந்திருந்தால் மட்டுமே ஒருவனிடம் உண்மை ஞானம் உதிக்கும். உண்மை ஞானத்தால் அனைத்தையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் வந்துவிடும்.
- மனத்தூய்மை உடையவனே கடவுளுக்கு மிக நெருங்கியவன்.
- யாருடைய மனம் ஏழை மக்களுக்காகத் துன்பத்தில் வருந்துமோ, அவரே மகாத்மா.
- இந்த மண்ணில் பிறப்பு எடுத்திருக்கும் நீங்கள், அதற்கு அடையாளமாக ஏதாவது ஒரு நல்ல பதிவை விட்டுச்செல்லுங்கள்.
- உண்மை எங்கு இழுத்துச் சென்றாலும் அதையே பின்பற்றிச் செல்லுங்கள். கபடதாரியாகவோ, கோழையாகவோ இருப்பதால் பயனில்லை.

# எப்.ஏ.கிண்ணம் இறுதியில் ஆதிசக்தி



நேற்று முன்தினம் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் எப்.ஏ. வெற்றிக்கிண்ணத் திற்கான அரையிறுதிப் போட்டியொன்று நடைபெற்றது.

இப் போட்டியில் ஆதிசக்தி உதைபந்தாட்ட அணியினை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் அபாரமாக ஆடிய ஆதிசக்தி அணி 3.:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

# வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் மன்னார் எப்.சி. அணி வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் 14 ஆம் திகதி இரவு நடைபெற்ற போட்டியில் மன்னார் எப்.சி அணியை எதிர்த்து திருகோணமலை ரன் எலைட் அணி மோதியது.

ஆட்டத்தின் தொடக்கத்தில் எலைட் அணிக்கு மிகவும் இலகுவான இரண்டு வாய்ப்புக்கள் கிடைத்தன.

எனினும் அதனை கோலாக்குவதில் அவர்கள் தவறவிட்டனர். அதன் பின்னர் சுதாகரித்து ஆடிய மன்னார் அணி, சரியான போராட்டத்தை வெளிப்படுத்தியது. எனினும் கோல் எதனையும் பதிவு செய்யாத வகையில் முதற்பாதியாட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியாட்டமும், சந்தர்ப்பங்களை சரியாக முடிக்காத ஆட்டமாக தொடர்ந்தது.

போட்டியின் இறுதி நேரத்தில் மன்னார் எப்.சி அணி தனது முதலாவது கோலை அடித்தது.

ஆட்டநேரம் முடியும் வரையில் அந்தக் கோல் நீடிக்க, மன்னார் எப்.சி அணி, 1:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (சு-26)

# தேசிய கூடைப்பந்தாட்ட அணியில் மீண்டும் வாகீசனுக்கு இடம்







யாழ்ப்பாணம் இந்துவின் பழைய மாணவனும், ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின் கூடைப்பந்தாட்ட வீரனுமாகிய சண்முகசுந்தரலிங்கம் வாகீசன், இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு மீண்டும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இலங்கை தேசிய அணிக்காக ஏற்கனவே 2011 ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்ட வாகீசன், அந்தாண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையில் தொடர்ச்சியாக இலங்கை கூடைப்பந்தாட்ட அணியின் இடம்பிடித்திருந்தார்.

வடக்கிலிருந்து இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு வீரன் என்ற பெருமை வாகீசனைச் சாரும். எதிர்வரும் 25 ஆம் திகதி பங்களாதேஷத்தில் நடைபெறவிருக்கும் தெற்காசிய கூடைப்பந்தாட்ட போட் டிகளில் பங்குபற்றவுள்ள இலங்கை அணியோடு இணைந்து வாகீசனும் செல்லவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (7)

# உலகக்கிண்ண கால்பந்து தொடரின் வருமானம் இவ்வளவா?

கால்பந்து தொடர் என்றாலே பல ஆச்சர்யங்கள், ஆர்வம் இருக்கும். ஆனால் அதன் மூலம் ஈட்டப்படும் வருமானம் அதை விட பெரிய ஆச்சர்யத்தை ஏற்படுத்தும் விதமாக உள்ளது.

உலகமெங்கும் உள்ள பல நாடுகளில் கால்பந்து விருப்பமான விளையாட்டாக உள்ளது.

அதனால் கால்பந்து கிளப் தொடர்கள் மற்றும் உலகக் கிண்ண தொடர்கள் மிக அதிகமான ரசிகர்களால் பார்க்கப்படுகிறது. இதன் மூலம் வருமானமும் விண்ணைத் தொடும் வகையில் உள்ளது.

வருமானம் அதிகமாக இருந்தால் செலவும் அதே போல் இருக்கத்தான் செய்யும், தொழில் போன்றே, முதலீடு அதிகமாக செய்து, வருவாயும் அதிகமாக ஈட்டப்படுகிறது.

கடந்த 2014 பிபா கால்பந்து உலகக் கிண்ண தொடரை தொலைக்காட்சியில் மட்டும் சுமார் 320 கோடி பேர் கண்டு களித்துள்ளனர்.

சுமார் ஒரு மாத காலம் நடைபெற்ற குறித்த தொடரில் வருவாய் மட்டும் 4,826 மில்லியன் டொலர்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த தொடருக்கான செலவு 2,224 மில்லியன் டொலர்கள். வெற்றியாளருக்கான பரிசாக 35 மில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆட்டத்திற்கும் சராசரியாக மைதானத்திற்கு வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை 53,592 என கணக்கிடப்பட்டுள்ளது.

மட்டுமின்றி குறித்த தொடரை நேரிடையாக கண்டுகளிக்க குவிந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 6,00,000 என பதிவாகியுள்ளது.

மேலும் பிரேசிலில் நடைபெற்ற இறுதிப் போட்டியை உலகெங்கிலும் உள்ள ரசிகர்கள் சுமார் ஒரு பில்லியன் பேர் கண்டு களித்ததாக பிபா அமைப்பே தரவுகளை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# 56 ஆண்டுகளுக்குப் பின் இந்திய அணியில் இடம்பிடித்த மூன்று தமிழக வீரர்கள்



இந்திய அணியில் 56 ஆண்டுகளுக்கு பிறகு மூன்று தமிழக வீரர்கள் இடம் பிடித்து சாதித்து காட்டியுள்ளனர்.

இந்திய-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையேயான வரலாற்று சிறப்பு மிக்க டெஸ்ட் போட்டி பெங்களூரில் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 347 ஓட்டங்கள் எடுத்து ஆடி வருகிறது.

இந்நிலையில் இந்த டெஸ்ட் அணியில் 56 ஆண்டுகளுக்கு பிறகு தினேஷ் கார்த்திக், முரளிவிஜய், அஸ்வின் போன்ற மூன்று தமிழக வீரகள் இடம் பெற்றுள்ளனர். இதில் தினேஷ் கார்த்திக் அண்மைக்காலமாக அனைத்து விதமான போட்டிகளிலும் அற்புதமாக விளையாடி வருகிறார்.





அதே போன்று முரளி விஜய் இந்திய அணிக்கான டெஸ்ட் போட்டியில் தன்னுடைய இடத்தை கெட்டியாக பிடித்து அசத்தி வருகிறார். சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் சமீபகாலமாக இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்காமல் தடுமாறினார்.

தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளதால், இதை பயன்படுத்தி அவர் மீண்டும் இந்திய அணியில் தனக்கான இடத்தை பிடித்து கொள்ளலாம்.

இதற்கு முன்னர் கடந்த 1961-ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கிரிபால் சிங், மில்கா சிங், விவி குமார் ஆகிய மூன்று தமிழக வீரர்கள் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக மாவட்ட மட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியில் சங்காணை பிரதேச இளைஞர் சம்மேளன பெண்கள் அணி சம்பியனாக வெற்றிவாகை சூடியது. பதினைந்து பிரதேச சம்மேளனம் கலந்து கொண்டது. அதுமட்டுமல்லாது நடைபெற இருக்கும் தேசிய மட்ட போட்டியிலும் பங்கேற்க உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க)

## பிக்குகள் தலைமை...

னாருக்கு வருகை தந்திருந்தனர். பின்னர் அங்கு வறுமைக்கோட்டுக்குட்பட்ட சில குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்கியிருந்தனர்.

அங்கிருந்து நேற்று இரவு யாழ் நாக விகாரைக்கு வந்தடைந்த இக் குழுவினர் இன்று நயினாதீவு நாகவிகாரைக்கு சென்று விசேட பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளனர். அதனை தொடர்ந்து கந்தரோடை, ஜம்பு கோளப்பட்டினம் சென்று தரிசித்துவிட்டு இன்று மாலை கிளிநொச்சி நோக்கி செல்லவுள்ளனர்.

இக் குழுவில் பிக்குகள், விகாராதிபதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பௌத்த சமய அமைப்புக்களின் தலைவர்கள் என 300இற்கும் அதிகமானோர் 3 பேருந்துகளிலும் சிற்றூர்திகளிலும் வருகை தந்துள்ளனர். (ம-9)

## திருகோணமலை மீனவர்கள் பருத்தித்துறை கடற்பிரதேசத்தில் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்

(கொழும்பு)

வடக்கு கடற்பரப்பில் நிர்க்கதியாகிய நிலையில் இருந்த 5 கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி திருகோணமலையில் இருந்து கடற்றொழிலுக்காக சென்ற படகொன்று பருத்தித்துறை கடற்பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன் தினம் பழுதடைந்தது.

இதன் காரணமாக அதில் பயணம் செய்த 5 கடற்றொழிலாளர்கள் நிர்க்கதியாகினர்.

இந்த நிலையில், கடற்படையினரால் அவர்கள் மீட்கப்பட்டதாக கடற்படையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கடலில் நீராட சென்ற இரு மாணவர்கள் மாயம்

(கொழும்பு)

சுற்றுலா பயணிகள் மத்தியில் பெயர் பெற்ற நீர்கொழும்பு நகரின், எட்டுகல பிரதேசத்தில் கடலில் நீராட சென்ற இரு மாணவர்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து பேர் கொண்ட மாணவர் குழாமொன்று கடலுக்கு நீராட சென்றிருந்த நிலையில், அவர்களில் இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போன இரு மாணவர்களும் 16 வயதுடையவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், காணாமல்போன மாணவர்களை கண்டுபிடிப்பதற்காக தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் முழுமுரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மாடுகள் கடத்தலை தடுத்ததன் விளைவு தமிழ் உப பொலிஸாருக்கு திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதியிலிருந்து இறைச்சிக்காக மாடுகளைக் கடத்தும் கும்பல்களை இலக்கு வைத்து நடவடிக்கை எடுத்து வந்த ஊர்காவற்றுறை தமிழ் உப பொலிஸ் பரிசோதகர் பலாலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றக் கட்டளை வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் அலுவலகருக்கே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தீவகத்தில் அவருடைய தனிப்பட்ட நடத்தை பற்றி கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை அடுத்தே இடமாற்றம் வழங்கப்பட்டதாக பொலிஸ் தரப்பு தெரிவிக்கின்றது.

தீவகத்திலிருந்து கட்டாக்காலி கால்நடைகளை இறைச்சிக்காக கடத்திச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்தன. அவற்றை தடுக்கும் நடவடிக்கையில் தமிழ் உப பொலிஸ் பரிசோதகர் தீவிர ஈடுபாட்டை காட்டியிருந்தார்.

மாடுகளைக் கடத்திச் சென்ற கும்பல்களில் பலரை அவர் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தார்.

பொலிஸ் அலுவலகரை இடமாற்ற கடந்த மாதம்முற்பகுதியிலும்முயற்சிகள்மேற்கொண்ட போதும், உயர் மட்டத்தலையீட்டால் தடுக்கப்பட்டது. எனினும் அந்த தலையீடு விலகப்பட்ட நிலையில் இந்த இடமாற்றம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் குற்றச்செயல்கள் மற்றும் சட்டவிரோத செயல்களைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபாடு கொண்ட பொலிஸ் அதிகாரிகள் உள்பட எட்டுக்கு மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அண்மைக் காலத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ம-9)

## விழுந்து கழுத்து...

கடந்த 13 ஆம் திகதி அதிகாலை குறித்த இளைஞனின் தந்தையார் குறித்த இளைஞரை எழுப்பி வலை தொழில் செய்வதற்கு செல்லும் படி தெரிவித்துள்ளார். நித்திரை மயக்கத்தில் சென்ற குறித்த இளைஞர் வீட்டின் அருகே இருந்த கால்வாய் அமைந்துள்ள கட்டில் அமர்ந்திருந்துள்ளார்.

பின்னர் தந்தையும் அந்த இடத்துக்கு வந்த போது தொழிலுக்கு செல்ல குறித்த இடத்தில் இருந்து எழுப்பிய இளைஞர் நிலை தடுமாறி கால்வாய்க்குள் தவறி விழுந்துள்ளார். பின் பக்கமாக விழுந்ததில் குறித்த இளைஞரின் கழுத்து முறிவடைந்துள்ளது. உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி இவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## இலங்கை விமானப்படையில் முதன்முறையாக நான்கு பெண் விமானிகள் இணைவு



(கொழும்பு)

இலங்கை விமானப் படையில் முதன் முறையாக நான்கு பெண் விமானிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆயுதம் ஏந்தி தீவிர பயிற்சி பெற்ற ஜயனி தத்சரனி ஹேவாவித்தாரன, பவித்ரா லக்ஷானி குணரத்ன, பியுமி நிமல்கி ஜயரத்ன மற்றும் ரஞ்சனா வீரவர்தன ஆகியோரே விமானிகளாகப் பயிற்சி பெற்றுவருகின்றனர்.

குறித்த விமானிகள் தற்போது திருகோணமலை சீனக்குடாவில் விமானம் ஓட்டும் பயிற்சிகளை பெற்று வருகின்றனர். பயிற்சியின் இறுதியில், உலகில் பெண் விமானிகளைக் கொண்ட நாடுகளில் இலங்கையும் இணையவுள்ளது.

தெற்காசியாவில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 3 நாடுகளில் பெண் விமானிகள் இணைத்து கொள்ளப்பட்டுள்ளனர். எனினும் இலங்கையில் நிலவிய போர் நிலைமை காரணமாக பெண் விமானிகளை இணைத்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. குறித்த பெண் விமானிகளுக்கு 2 வருட பயிற்சிகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## தும்பளையில் மோதல்...

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் தும்பளை தெற்கு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மூவரிற்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் அடிதடியிலும் வாள் வெட்டிலும் முடிந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஆண் ஒருவருக்கு நெஞ்சில் பலத்த வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## பாராளுமன்றத்தில் அதிகார மாற்றம் ஏற்பட்டால் நிச்சயம் நான்தான் பிரதமர்-மகிந்த

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்கள் மாத்திரமல்ல கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள அனைவரும் என்னை பிரதமராகுமாறு வலியுறுத்துகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் அதிகாரமாற்றம் ஏற்பட்டால் நிச்சயம் பிரதமர் ஆவது குறித்து தீர்மானிக்க முடியும். நல்லாட்சி அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்கள் மாத்திரமல்ல கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள அனைவரும் என்னை பிரதமராகுமாறு வலியுறுத்துகின்றனர்.

ஜனாதிபதி தேர்தலின் வேட்பாளர் குறித்து பேசப்படுகின்றது. ஆனால் மக்கள் விடுதலை முன்னணி 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்துள்ளது. இந் நிலையில் அரசாங்கம் எவ்வாறான தீர்மானத்தில் உள்ளது என்பதை அவதானித்து வருகின்றோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு எம்முடன் இணைய முடியாது. வருட இறுதிக்குள் அவர் இது தொடர்பான தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். எவ்வாறாயினும் சுதந்திரக் கட்சியுடன் இணைவது குறித்து நாங்கள் இன்னும் கருத்திற் கொள்ளவில்லை என்றார். (ம-9)

## இளைஞர் ஒருவர்...

பட்டுள்ளார்

கைதடி வடக்கை சேர்ந்த ஸ்ரீனிவாசன் ஜெயசீலன் (வயது 34) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்து தந்தையுடன் வாழ்ந்து வந்த குறித்த நபர் சிறிது காலம் மன உளைச்சலுக்குள்ளாகியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று நண்பகல் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த குறித்த நபர் வீட்டின் முன்பக்கம் வந்துள்ளார். குறித்த நபரை காணவில்லை என தகப்பன் தேடி வந்த போது அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

தந்தை மற்றும் அயலவர்கள் இவரை உடனடியாக மீட்டதுடன் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியிருந்தனர். பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி இ.இளங்கீரன் மேற்கொண்டார்.(ம-9)

## உரிமையை கேட்பது...

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஒரு இனவாதிபோல் செயற்படுகிறார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருந்த கருத்து தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில், போருக்கு பின்னர் வடகிழக்கு தமிழ் மக்களிடம் உரிமை கேட்பதற்கு வலுவற்ற தன்மை இருந்தது. ஆனாலும் பின்னர் மக்கள் தங்களுக்கான உரிமைகளை கேட்பதற்கு ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு தமிழ் மக்கள் உரிமை கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெற்கிலிருந்து இவ்வாறான கருத்து வந்திருக்கின்றது. தமிழ் மக்கள் தங்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீளவும் தாருங்கள் என கேட்பது இனவாதம் ஆகாது.

இல்லை அது இனவாதமே என கூறினால். அது தெற்கில் உள்ள அமைச்சர்களின் விளக்க மற்ற தன்மையே ஆகும். மேலும் தமிழ் மக்கள் உரிமை கேட்பது சிங்கள மக்களுக்கு எதிரான நிலைப்பாடு அல்ல. ஆனால் அந்த உரிமைக்குரல் சிங்கள மக்களுக்கு எதிரான நிலைப்பாடாகவே காட்டப்படுகிறது என்றார். (ம)

## ஜப்பான் முன்னாள்...

பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஜப்பானிய முன்னாள் பிரதமர் யுக்கியோ ஹடோயாமாவின் தனிப்பட்ட நிதி அன்பளிப்பினால் பொல்கஸ்சோவிட்ட தஹம் செவன விகாரையின் சர்வதேச பௌத்த நிலையத்தில நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான மொத்த செலவு 2500 கோடி ரூபாயாகும்.

தற்போது இங்கு ஆங்கிலம் மற்றும் ஜப்பானிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் இங்கு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினையும் ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் போக்குவரத்து நெருக்கடியையும் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுப்பதற்கான செயற்றிட்டத்துக்கும் பங்களிப்பு வழங்குவோம் என ஜப்பானிய முன்னாள் பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

பொல்கஸ்சோவிட்ட தஹம் செவன விகாரையின் சர்வதேச பௌத்த நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் சதஹம் சேவா கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் புண்ணிய நிகழ்வில் கலந்து கொள்ளவே யுக்கியோ ஹடோயாமா இலங்கை வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மகிந்தவை பிரதம...

றில்லை. ஜனாதிபதி மைத்திரிபால நினைத்தால் அதற்கு அவ்வளவு நேரம் எடுக்காது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீல.சு.கட்சியை வெற்றி பெறச் செய்வது இதனாலேயே சாத்தியமாகும் எனவும் அக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குறிப்பிட்டார். (ம)

## கர்ப்பமாக்கிய...

ப்பிணியாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் வாக்குமூலத்திற்கமைய நேற்று மாலை அதே இடத்தைச் சேர்ந்த சிறுமியின் அயல் வீட்டு இளைஞன் ஒருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட 30 வயது இளைஞனை, இன்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்த கொடிகாமம் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட இளைஞரை கொடிகாமம் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர். இது தொடர்பில் பல மாதங்களாக மறைக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினமே பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4-87)

## வழிப்பறியில்...

கப்பட்டுள்ளது.

அண்மைய காலமாக யாழ் மாவட்டத்தில் பல பகுதிகளில் சுகாதார பரிசோதகர் என கூறிக்கொண்டு வீடுகளிற்குள் சென்று தனிமையில் இருப்பவர்களின் தங்கச் சங்கிலியினைஅறுத்து செல்வதும், வீதியால் செல்வோரிடம் வழிப்பறியில் ஈடுபடுவதுமாக ஒரு குழுவினர் பல காலமாக தமது திருட்டு நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

கரணவாய் பகுதியில் கடந்த வாரம் வீடு ஒன்றிற்குள் சென்றவர்கள் தம்மை டெங்கு பரிசோதகர்கள் எனக் கூறி மூதாட்டியின் கழுத்தில் இருந்த சங்கிலியை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட நெல்லியடி பொலிஸார் துன்னாலை, மல்லாவி, கொட்டடி பகுதிகளை சேர்ந்த மூவரை கைது செய்தனர். இதில் கொட்டடி பகுதியை சேர்ந்தவர் கொள்ளைச் சம்பவங்களின் தலைவர் என பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் நெல்லியடி பொலிஸார் தீவிரமான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மேலும் சிலர் சிக்கலாம் எனவும் பொலிஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-60)

## 200 கிலோ கஞ்...

ப்பட்டுள்ளன. கடல் வழியாகவே கஞ்சா கடத்தப்பட்டுள்ளது என சந்தேகிக்கப்படுகிறது என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## பெண் உட்பட இரு...

ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

கணவன் வெட்டியதில் மனைவி காயமடைந்ததுடன் அதனைத் தடுக்கச் சென்ற இளைஞர் ஒருவரும் கையில் வெட்டு காயத்திற்கு இலக்காகியுள்ளார்.

கொடிகாமம் எருவனைச் சேர்ந்த 45வயதான பெண் வெட்டுக் காயத்திற்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும்,தடுக்கச் சென்ற கொடிகாமத்தைச் சேர்ந்த 25வயதான இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.(ம)

## புரட்சி வெடிக்கும்...

கண்டியில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியை பிரதமராக்கும் திட்டம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

அந்த புரட்சியை அந்த நேரத்தில் பார்ப்போம். புரட்சியை முன்கூட்டியே கூறிவிட்டால், மற்றவர்கள் தயாராகி விடுவார்கள். இதனால், புரட்சி வெடிக்கும் நேரத்தை சொல்வது தவறு.

எந்த நேரத்திலும் அரசாங்கம் கவிழலாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.(ம)


O/L உடன் 3 - 4 மாத விசேட
ஹொட்டேல் பயிற்சி
& ஆங்கில தொடர்பாடல் பயிற்சியுடன்
PR ஏற்பாட்டுடன் கனடா விசா
26 ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா
ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பல்
அமெரிக்க Mc Donalds, Marriot, Sheraton
உட்பட முன்னணி நட்சத்திரதர ஹொட்டேல்களுக்கான
டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் விசாவுடன்
வேலைவாய்ப்பு ஏற்பாடு
விபரங்களுக்கு 0777 324 004 / 077 36 16 798 / 021 221 9 221
SIKARAM ACADEMY
Sri Lankan Entrepreneur of the Year 2017
221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
www.sikaram.lk facebook.com/www.sikaram.lk/
(C-2901)

வீடு வாடகைக்கு
யாழ்.நகரின் மையப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய (4Rooms) மாடி வீடு மேற்தளம் மாத்திரம் வாடகைக்கு.
T.P:- 076 173 4858
(46537)

Win repair
சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 0779648942

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-2862)

துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
3-5 வேலை நாட்களில்
UK -550/=
Germany -650/=
France -700/=
Australia -800/=
திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி,கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.
Hotline -0777554528

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(4534)


# மரண அறிவித்தல்



## திருமதி மனோன்மணி (கனகாம்பிகை) சின்னத்தம்பி

வராத்துப்பளையினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சின்னத்தம்பி (13.06.2018) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-அன்னம் தம்பதியினரின் அன்பு மகளும், வ.சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜீவமுரளி, ஜீவபிரபாகரன், ஜீவமுகுந்தன், ஜீவராகுலன், ஜீவதுளசி, அஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் உமாசானிகா, பத்மகௌரி, றெஜினி, யோகநாதன், செல்வக்கடுங்கோ ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற இராசையா, காலஞ்சென்ற பசுபதி, காலஞ்சென்ற கனகம்மா, காலஞ்சென்ற செல்வரட்ணம், ஜெகநாதன், புஸ்பலீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2018) ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராத்துப்பளை,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
077 667 7251

(சி-2937)


Direct Importers of Motor Vehicles
SMART KINGS (PVT) LTD
JAPAN நேரடி வாகன இறக்குமதியாளர்


Tel: 021 221 6999
Hotline: 077 375 4040
No.12 Point Pedro Road, Jaffna. (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
(சி-2894)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.